அமரர்.

# உதயாவின் நினைவுகள்

## 28.06.1968 - 29.09.2014

## திருமதி. கோகிலேஸ்வரி தனபாலசிங்கம்

## 45ம் நாள் நினைவு மலர்

## 12-11-2014



# வாழ்வின் நெறிமுறை

Waldfriedhof
97877, Wertheim Betenheid,
Germany
+4915215022996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்
# திருமதி. கோகிலேஸ்வரி தனபாலசிங்கம்
## (உதயா)

| | |
|---|---|
| **அன்னை மடியில்** | **ஆண்டவன் மடியில்** |
| **28.06.1968** | **29.09.2014** |

## திதிவெண்பா

**வளர்பிறையில் சஷ்டி திதியில் ஜயவருடன் புரட்டாதி**
**இளம் திங்கள் அனுஷ நட்சத்திரத்தில் – உளம் உருக**
**உதயா என ஓதும் கோகிலா ஈஸ்வரியாள்**
**இதமாக வான் புகுந்தாள் தேன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

**எங்கள் இதய தெய்வம்**
**திருமதி. தனபாலசிங்கம் கோகிலேஸ்வரி (உதயா)**
**அவர்களின் நல் ஆத்மா இறைவன்**
**திருவடியில் சாந்தி பெற வேண்டி**
**இந் நினைவு மலரை அவர்**
**தம் பாதங்களுக்கு எம் கண்ணீர்ப்**
**பூக்களுடன் சமர்ப்பிக்கின்றோம்**

*இங்ஙனம்*

*கணவர் (தனம்), பிள்ளைகள் (ராகவி, நிதூஸ், ஆதவி),*
*உற்றார் உறவினர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

## தேவாரம்

கங்கையைச் சடையில் வைத்தார்
கதிர்பொறி அரவும் வைத்தார்
திங்களைத் திகழ வைத்தார்
திசை திசை தொழவும் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார்
மான்மறி மழுவும் வைத்தார்
அங்கையுள் இனலும் வைத்தார்
ஐயன் ஐயாற னாரே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கனப்பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிரவே என் கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியமுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம்பயிலவல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம் எளிதின் முற்றுற
கண்ணுதல் உடையதோர் களிற்றின் மாமுக
பண்ணவர் மலரடி பணிந்து போற்றுவோம்.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள் வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசக்தி நிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது கணவருடன்









தனது 15வது ஆண்டு திருமண நாளில்



15வது ஆண்டு திருமண நாளில் குடும்பத்தினருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயா ஒரு ஜீவநதி....

வந்தவர்கள் ஆறுகின்ற வளமார் பதியினிலே செந்தமிழர் வீரமுடன் சிறந்து வாழ் குலத்தினிலே கணபதிப்பிள்ளை பூரணத்தின் கண்மணியே குணநதியே குலக்கொழுந்தே கோகிலேஸ்வரியே துள்ளித் திரிகின்ற பள்ளிப் பருவமதில் அள்ளி அணைத்திட்ட அன்னைதனை நீ இழந்தாய் அம்மான் (மாமா) உடன் நீ அயல்நாடு சென்றாய், இம்மாநிலத்தில் இப்படியாய் நீ ஒருத்தி ஆர்மகளே இவள் என்று ஜேர்மனியர் வியக்க பேர் பெற்ற பெரும் புகழ் படைத்தாயே! உற்றாரை மதித்தாய் உறவினரை நேசித்தாய் மற்றோர்க்கும் உதவி மனநிறைவாய் செய்தாய் பெற்றோர் மனமகிழ்ந்தார். ஊரவர்கள் பெருமையுற்றார். கற்றோர்கள் உனை மதித்தார். கண்ணிமைபோல் நீ இருந்தாய், குலதெய்வமாயிருந்து குழந்தையுடன் என்னையும் நீ உலகினில் வாழ்விக்க உயர் தெய்வமாயிருப்பாய், குறைவின்றி நாம் வாழ நினதருளைத் தாருமம்மா!

– கணவர் தனம் –
ஜேர்மனி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தரசி - என் இல்லத்தரசி

பார்த்தனுக்கு சாரதி போல் பத்தினியாய் இருந்தாளே
ஊர்போற்ற உதவி செய்து உத்தமியாய் வாழ்ந்தாளே
கைங்கரியம் பலவற்றில் வலக்கையாய் இருந்தாளே
கைபிடித்த கற்பரசி காலன் வசம் ஆனாளே

தலைவிதியை எழுதி வைத்து தலைமுடியால் மறைத்து வைத்து
விலையறியா உயிர்களை விதியென்று எடுக்கின்ற
நிலையில்லா வாழ்க்கையென்று நிலை நிறுத்திப் போனாளே
உலை மெழுகாய் மனமுருகி உருக்குலைந்து வாடுகின்றேன்.

பசியில்லை தாகமில்லை படுத்துறங்க நினைவில்லை
புசியுங்கள் என்று சொல்லி புரிந்தூட்ட மனைவியில்லை
அழுகின்ற மக்களையும், அரவணைக்க அன்னையில்லை
தொழுகின்றேன் இறைவா எம் துயர்தீர்க்க வழிகாட்டு

மின்சாரம் போலிருந்த என் சம்சாரம் போனதினால்
என் எதிர்காலம் இருள் சூழ்ந்து இருளினிலே தவிக்கின்றேன்
உறவுகளை நினைவூட்டி ஊருணி போல் உதவிடுவாள்
மறந்துவிட்ட உறவுகளை மறக்காமல் நினைக்க வைப்பாய்

உதயாவின் உதயத்தில் உயர்ந்து நின்ற நானின்று
இதயத்தில் அவளிருக்க அவள் நினைவால் வாடுகின்றேன்
அலைகடலில் துரும்பாகி அயல் நாட்டில் வாடுகின்றேன்
மலை விளக்காய் ஒளிர்ந்த மனைவியின்றித் தவிக்கின்றேன்.

- கணவர் தனம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது மகள் ராகவியின்
# பூப்புனித நீராட்டு விழாவின் போது











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மகள் - ராகவி



அம்மா உன்னைத் தேடுகின்றேன் - உன்
அடிதொழ ஒருமுறை வாருமம்மா
அம்மா ஏங்கி வாடுகின்றேன் - எனக்கு
ஆறுதல் சொல்லிட வாருமம்மா

தம்பி உன்னைத் தேடுகின்றான் - என்
தாயே ஒருமுறை வாருமம்மா
தம்பியின் கண்ணீர் தனைத் துடைக்க
தாயே கைக்குட்டை தாருமம்மா

தாயைப் போல பிள்ளை என்று
தமிழர் பண்பின் உருவமென்றும்
சேயாய் நீயும் சிறக்கவென்று
செப்பிய தாயே எங்கே! நீ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏக மகன் - நிதூஸ்

மடியைத் தேடி அழுகின்றேன் - என்
மாதா ஒருமுறை வருவாயோ
கருணையின் வடிவே மாதா - உன்
காலடி தொட்டு வணங்கிடவே
ஒருமுறை வந்து முகங்காட்டு - எம்
உச்சி மோர்ந்து முத்தமிடு
பேறுகள் பலவும் பெற்றாயே - எம்மை
பெருமைகளோடு வளர்த்தாயே
ஆறுதல் சொல்லிட யாரும் இல்லை - அம்மா
ஒருமுறை ஓடி வாராயோ!



# இளைய மகள் - ஆதவி

அன்பின் உருவே அம்மா - என்
அன்பும் உனக்கே உரித்தம்மா
அண்ணன் வந்தால் அடம்பிடிப்பான்
அவன் வரும் முன்னால் உணவருந்து



கண்ணே மணியே வாவென்று - உன்
கையால் பிசைந்து உணவளிப்பாய்
மடியில் இருத்தி கதை சொல்லி
சுவையாய் உணவு தருவாயே

ஆறு வயதில் உனதன்னை
உன்னை விட்டுப் பிரிந்ததனால்
ஆறு வயதில் நீ என்னை
விட்டுப் பிரிந்த நியாயமென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது பிள்ளைகளுடன்



மூத்த மகள் ராகவியுடன்



மகன் நிதூசுடன்



இளைய மகள் ஆதவியுடன்



மகள் ராகவியின் 10வது பிறந்த தினந்தன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று பிள்ளைகளும்

(ராகவி, நிதூஸ், ஆதவி)

கேட்பது எல்லாம் தருவாயே - நாம்
கேளாத பொருளும் தருவாயே
மீட்பர் இல்லா மந்தைகள் போல் - நாம்
மீட்சி இன்றித் தவிக்கின்றோம்.
துடுப்பைத் தேடும் ஓடம் போல் - அப்பா
துணையை இழந்து தவிக்கின்றார்
எடுப்பாய் இருந்த அவர் இப்போ - இளைத்து
எலும்பும் தோலும் ஆகிவிட்டார்.
சாப்பிட மறுக்கும் அப்பாவை
சமாதானப்படுத்த வழியுமில்லை
குழந்தைகட்காக வாழென்று
கூப்பிட்டு ஒருமுறை கூறாயோ
தாயே எமக்குத் தெய்வமில்லை- நீயே!
எமக்குத் தெய்வமம்மா!
நித்திய அறுதல் நீ அடைய
நிமலன் பாதம் பணிகின்றோம்
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி. கோகிலேஸ்வரி தனபாலசிங்கம் (உதயா) அவர்களின்**

# வாழ்க்கை வரலாறு

சிவபதம் அடைந்த திருமதி. கோகிலேஸ்வரி தனபாலசிங்கம் அவர்கள் கணபதிப்பிள்ளை பூரணம் அவர்களுக்கு 5ம் பிள்ளையாக வந்தாறுமூலையில் 1968.06.28இல் பிறந்தார். 1974ல் தனது தாயை இழந்த இவர் சிறுவயதி லேயே தாயின் அரவணைப்பை இழந்தார். இதன் பின்னர் தந்தை, சகோதரர் களுடன் அம்மம்மாவின் அரவணைப்பிலும், மாமாமார் மூவரினது பாதுகாப்பி லும், வளர்ந்து வந்தார்.

ஆரம்பக் கல்வியை வந்தாறுமூலை கணேச வித்தியாலயத்திலும், உயர்கல்வியை மட்டக்களப்பு இந்துக்கல்லூரியிலும் கற்ற இவர் அதன்பின்பு ஆங்கிலம், கணக்கியல், aat போன்ற பாடங்களைக் கற்று மேலதிக தகமைகளைப் பெற்றுக் கொண்டார். அதன்பினனர் மூத்த சகோதரன் ராஜேஸ் அவர்களின் அயராத முயற்சியிலும் நேசன் மாமாவின் வழிகாட்டலாலும் 1995இல் சகோதரி ரதியுடன் ஜேர்மன் சென்றார். இதன் பின்னர் 1998இல் துறைநீலாவணையைச் சேர்ந்த ஜேர்மனியில் வசித்து வந்த தனபாலசிங்கத்துடன் திருமணப்பந்தத்தில் இணைந்து இன்புற இல்லற வாழ்க்கையை நடாத்தி பாசமிகு மூன்று பிள்ளைகள் பெற்றெடுத்தார். ராகவி, நிதூஸ், ஆதவி ஆகிய மூன்று பிள்ளைகளுடனும், தனது கணவருடனும் அன்பான அரவனைப்புடன் மிகவும் சிறப்பாக ஜேர்மனில் உள்ள Wertheim நகரில் வாழ்ந்து வந்தார்கள். அண்மையில் இலங்கை வந்த இவர்கள் ஒரு மாதகாலம் சகல உற்றார், உறவினர்கள், நண்பர்களுடனும் சந்தித்து உண்டு, உறவாடி தனது பாசப்பிணைப்பை இறுக்கமாக்கி இருந்தார்கள் 28.08.2014 அன்று தனது மூத்த மகளான ராகவியின் பூப்புனித நீராட்டு விழாவை தனது உறவுகள் அனைத்துடனும் சிறப்பாக மட்டுநகரிலுள்ள East Lagoon Hotel இல் நடாத்தி விட்டு அனைத்து உறவினர்களின் மனதில் அகலா இடம் பிடித்தார்கள். 06.09.2014இல் அவர்கள் மீண்டும் ஜேர்மனிக்கு விடைபெற்றுச் சென்றார்கள். இதில் உதயா உறவுகளோடு இறுதி விடைபெறும் நேரம் இதுதான் என யாரும் அறிந்திருக்கவில்லை. மீண்டும் தனது இடம் சென்ற உதயா 29.09.2014 அன்று பி.ப. 2.30. மணியளவில் தனது குடும்பத்தையும், உறவுகளையும், நண்பர்களையும் மறந்து உலகை விட்டு சிவபதம் அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாள் நினைவுகள்



தனது 18வது வயதில்



இந்தியாவில் மாமா மாமியுடன்



தனது திருமண தினத்தன்று



தனது மூத்த மகள் பிறந்தவுடன்



தனது மூத்த மகளின் 1வது பிறந்ததினத்தன்று



தனது 3வது மகள் பிறந்தபோது



தனது 2வது மகள் பிறந்தபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வமாயிரு மருமகளே!

எமக்கு பிள்ளைகள் ஆறுபேர். ஆண்கள் ஐவர் பெண் ஒருத்தி எமது ஐந்தாவது பிள்ளை தனத்தின் அன்பு மனைவி உதயா, ஜேர்மனியில் குடியிருந்த இவருக்குப் பொருத்தமான மனைவியானார் என். மருமகள் உதயா, எம்முடன் வந்து நின்ற வேளைகளில் அவர் எம் மீதும் எமது குடும்பத்தின் மீதும் வைத்திருந்த மதிப்பும், மரியாதையும், பாசமும், பண்பான செயல்களினாலும் எங்கள் அனைவரையும் அன்பால் வசப்படுத்தி வைத்தி ருந்தார்.

எங்களது தேவைகளை உணர்ந்து அவர் செயலாற்றிய விதம் எம் நெஞ்சத்தில் நிலைத்து நிற்கின்றது. காலம் வரும் முன்னே காலன் கைப்பட்ட எம் மகன் பாலன் மனைவியின் பரிதாப நிலையை நினைக்கும் போது எவ்வாறு ஆறுவதென்று தெரியவில்லை. என் மகனும் பேரப்பிள்ளைகளும் உடுக்கை இழந்தவன் கைபோல இடுக்கண் களைத்து இன்பமூட்டிய உதயாவை இழந்து சிறகிழந்த பறவைகளாய் துடிக்கின்ற எம் மகனுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் உதயாவே தெய்வமாகவிருந்து துயர்நீக்க வேண்டு மென மாமாங்கேஸ்வரப் பெருமானை மன்றாடிப் பிரார்த்திக்கின்றோம்

**சேதுபதி – பூமணி (மாமா, மாமி)**
**இல: 3/4 புதிய வீதி**
**மட்டக்களப்பு.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவியமான மருகளே!

பால் நிலவு போல பவனிவந்த மருமகளே
வால் அறுந்த பட்டம் போல் வீழ்ந்து விட்ட மாயமென்ன
காலத்தால் அழியாத காவியமாய் உள்ளவளே - உன்
கோலமுகம் காட்டாது ஒழிந்து விட்ட தேனம்மா!
மலை போன்று நீ சொரியும் குறையாத அன்புதனை - நீ
சிலையாகி விட்ட பின்னர் எவரிடத்தில் பெறுவேன் நான்
மறு பிறப்பென்று ஒன்றிருந்தால் என்னினிய மருமகளே
ஏறுமயில் வேகத்தில் எம்மிடையே வாருமம்மா



நேசன் (மாமா)
ஜேர்மனி



## அண்ணன் ராஜேஸின் ஏக்கம்

(ஜேர்மனி)

தாய்க்குப்பின் தனையன் நானே
தங்கை உன் அன்னை ஆனேன்
கூடவே இருப்பாய் என்றே
கூட்டியே வந்தேன் உன்னை
ஓட்டமாய் போனதென்ன
ஒன்றுமே சொல்லாமலே
மூத்தவன் நானிருக்க
முடிவை நீ எடுத்ததென்ன
தவிக்கின்றேன் அண்ணன் நானே
தங்கை உன் பிரிவால் இங்கே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மன் நாட்டு உறவுகளுடன்







ஜேர்மன் நண்பர்களுடன்

தனது தந்தையுடன் ஜேர்மனியில்





திருமணத்திற்கு முன் தனது
சகோதரர்களுடன் ஜேர்மனியில்

லண்டனில் இருந்து வருகை
தந்த உறவினர்களுடன்





திருமணத்திற்கு முன் தனது சின்ன அன்ரியுடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரெத்தினேஸ் அக்காவின் அலறல்

(ஜேர்மனி)

ஒன்றாய் பிறந்தோம்
ஒன்றாய் வளர்ந்தோம்
ஒன்றாகவே நாடும் கடந்தோம்
ஒன்றாய்தான் ஊரும் வந்தோம்
உற்றார் உறவினர் வீடும் சென்றோம்
இனிவரும் காலமும் இந்நிலை தொடர
இறையருள் வேண்டி நல்லது செய்தோம்
இடையினில் ஏன் தங்காள் வந்தது மாயம்
இரயினில் மோதிட மாய்ந்ததோ தேகம்
நீங்காத நினைவே என்னது ஏக்கம் - என்றும்
நீடு பெற்றேனே நீ பெறுவாயே!



## தம்பி கங்கனின் குமுறல்

(ஜேர்மனி)

ஒரு தாயின் வயிற்றில் பிறந்தோம்
ஒரே வீட்டில் ஒன்றாய் வளர்ந்தோம் (வாழ்ந்தோம்)
உன் பிள்ளை என் பிள்ளையாச்சி
உன் சொல்லே என் பேச்சுமாச்சி
பகையென்ற பேச்சேயில்லை
பாசம்தான் நம்மில் ஊறும்
பார்த்தவர்கள் கண்கள் பட்டா
பட்டென்று பறந்தாயக்கா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மகள் உதயா....

வந்தாறுமூலையில் அவதரித்து உதயமான பெயருடன் விளங்கும் உதயாவே
சிறு வயதில் தாயை இழந்து என்னைத் தாயாக நினைத்தாய்
என்னை சித்தியாக நினைத்தது இல்லையே என்மகளே உதயா -உன்
அன்னையின் உருவத்தை நான் உன்னிலே கண்டேன்.
உன் அன்னை சென்ற வழி செல்வதற்கு காலம் கூடியதே
நினைக்கவே என் மூச்சு முட்டுகின்றதே
அன்பான கணவன் குறும்புகளுடன் கூடிய மூன்று பிள்ளைகளுடன் - என் உதயா ஒளிமயமாக வாழ்கின்றாள் என்று அனைவரிடமும் கூறி பெருமைப்படுவேன்.
நான் எண்ணியது வெற்றுக் கனவாகியதே உதயா
அனைவரும் மெய்க்கும் வண்ணம் வெள்ளை உடல் அழகு
கொள்ளை கொள்ளும் பேச்சழகு கொண்ட உதயா
கோடி தவம் இருக்க வேண்டும் மகளே உதயா உன்னை - என் மகளாக அடைவதற்கு.

தூரத் தேசத்தில் இருந்து இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை - என்னைப் பார்ப்பதற்காக கணவன், பிள்ளைகளுடன் வருவாயே செல்லமே உதயா
இனி என் மகள் எப்போது வருவாள் - நீ
நடந்து சென்று நான் கண்டதில்லையே செல்லமே
எப்போதும் குடு குடு என ஓடிக்கொண்டு செல்வாய் உதயா
உயிரை உறைய வைத்த உன் பிரிவுதனை என்னால்
ஏற்றுக் கொள்ள முடியவில்லை மகளே உதயா
காலச்சுழற்சியின் காரணமாய் எத்தனை துன்பங்களிலும்
தப்பிப் பிளைத்து வாழ்ந்தாய் உதயா
நான் மனம் வருந்தினால் நீ தாங்க மாட்டாய் செல்லமே - நான்
இப்போது கதறுகின்றேன் எங்கே மகளே உதயா
உன் நிழல் கூடத் தெரியலையே - உன்
முகத்தையும் உன் செயலையும் என்னால்
என்றும் மறக்க முடியாது
தூரதேசத்தில் இருந்து உன் முகம் காணாது துக்கப்படுகின்றேன் - நீ
எங்களை விட்டுச் சென்றாலும் என்றும் உன் நினைவுகளுடன்


சிவக்கொழுந்து (சின்ன அன்ரி)
(வந்தாறுமூலை)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமா மாமியின் இரங்கல் உரை...

உதயாவின் இரண்டாவது மாமன் ஆகிய நான் சிறுவயதில் இருந்தே உதயாவின் தாயுடன்தான் மிகக்கூடிய பாசத்துடன் வாழ்ந்தேன். காரணம் எனது சகோதரர்கள் சகலரையும் அணைத்து அரவணைத்து வாழ்ந்தவள் தான் உதயாவின் தாய் பூரணம் அக்கா. எனது உயர்கல்வி படிப்புக் காலத்திலும் சரி, மேல் படிப்புக் காலத்திலும் சரி, (விடுமுறை காலத்திலும்) பட்டப் படிப்பு முடிந்த பின்பும் உதயாவின் அம்மாவின் விருப்பத்துடன்தான் வாழ்ந்து வந்தேன். இதனால் உதயாவின் தாயின் குணமும், எனது மருமக்கள் ஒவ்வொருவரின் குணங்கள் நடவடிக்கைகளை நன்றாக அறிந்தேன். இவர்கள் சகலரும் நன்றாக வாழ வேண்டும் எதிர்காலத்தில் திறமைசாலிகளாக வேண்டுமென எண்ணற்ற அவாக் கொண்டவனாக இருந்தேன். இன் நிலமை 1995 வரை நீடித்தது. இதன் பின்புதான் அவர்களது வாழ்க்கை பிரகாசம் அடையத்தொடங்கியது. இவைகட்கு காரணம் எனது தம்பி நேசனும், உதயாவின் மூத்த சகோதரன் இராசனின் திறமையும்தான். இதன் பின்பு உதயாவின் வாழ்க்கை பிரகாசமடைந்து ஒளி வீசத்தொடங்கியது. இராஜனின் குடும்பமும், இரத்தினேஸ்வரி குடும்பமும், உதயாவின் குடும்பமும் அவர் களது பிள்ளைகளும் அண்மையில் இங்கு வந்து போனதை மறக்கமுடிய வில்லை இவைகளை நினைக்கும் போது சோகமாக உள்ளது. எங்கள் சோகத்தில் முக்கிய நினைவாக இருப்பவர்கள் உதயாவின் பிள்ளைகளும், ரதியின் பிள்ளைகளும். இவர்கள் எங்களுடன்தான் இரவும் பகலும் இருப் பார்கள். அனைவரும் கலகலப்பாக இருப்பதை என்னால் மறக்க முடியாது. ராகவியின் பூப்புனித நீராட்டு விழாவை எப்படி மறப்பது? அதிகம் விசேடமாக மனதை உறுத்திய நிகழ்வு உதயா, தனம், ராகவி, நிதூஸ், ஆதவி ஆகியோர் போகும்போதுதான், அப்போது தான் எனது மருமகள் உதயா என்னைக் கட்டித்தழுவி முதுகைத்தடவி மாமா அழவேண்டாம் அடுத்த வருடமும் வருவேன். உடம்பைக் கவனியுங்கள் என்று பல தடவை அன்பாக கூறினாள். இந்நிகழ்வுகள் அனைத்தும் நிஜமான பிரிவாக காலனிற்கு முன்பே உதயா எங்களுக்கு கூறிவிட்டுச் சென்றுவிட்டார் உதயாவின் பிரிவு அன்று தற்காலிக பிரிவாகத்தான் எண்ணினோம். ஆனால் அது இன்று நிரந்தரமாகிவிட்டது. எங்கள் அனைவரினதும் கண்ணீரை காணிக்கையாக செலுத்துகின்றோம்.

முருகுப்பிள்ளை மாமா குடும்பம்
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தில் நல்ல உள்ளம்

செல்ல மகள் செல்வ மகள்
சீர் சிறப்பாய் வாழ்ந்த மகள்
நல்ல மகள் உதயாவை
நாங்கள் இனி காண்பதெப்போ
உள்ளத்தில் நல்ல உள்ளம்
உறங்காது என்பது போல்
கள்ளம் கபடம் இன்றி
களிப்போடு வாழ்ந்த மகள்
இல்லையென்ற குறையில்லை
நல் இதயங்களில் வாழ்கின்றாள்
தாயை இழந்த கன்றுகளாய்
தவிக்கின்ற பிள்ளைகட்கும்
பேயறைந்த நிலைபோல
நிலைகுலைந்து வாழ்கின்ற மருமகன்
தனபாலுக்கு ஆறுதலாய்
உம்பர் உலகிருந்து
உயர் பணியை செய்மகளே!

கணேசமூர்த்தி சித்தப்பா குடும்பம்
மட்டக்களப்பு

# நீ இல்லாதிருக்க....

நீ இல்லாதிருக்க எமக்கு இருப்பது ஒன்றுமில்லை
வாழ்ந்து அன்புக்கு இலக்கணம் உணர்ந்தினாய்
மறைந்து இழப்புக்கு இலக்கணம் உணர்த்தினாய்
எங்கள் இதயத்தில் கோயில் கட்டி உன்னை
உள்ள வரை பூசை செய்வோம்.

**கங்கன் ஜமுனா குடும்பம்**
**ரதி திருச்செல்வம் குடும்பம்**
**ராஜேஸ் வனஜா குடும்பம்**
**நேசன் சூட்டி குடும்பம்**
**ஜேர்மணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதத்தை சுமந்த மாதரசி

வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி மக்களின் மனதில் நிலைத்தவர் யார்? என்ற வினாவுக்கு விடையாகி விட்ட உதயாவே! உன்னை நான் மைத்துனியாய் கண்டதில்லை. மாறாக சகோதரியாய் உனைப் பார்த்து முறுவலித்தேன். இன்று உனை தெய்வமாய்ப் பார்க்கின்றேன். நீ இல்லாத போதுதான் உன் அருமை பெருமைகளை, அவனியில் நீ புரிந்த நற்பணிகளை பலரும் சொல்லச் சொல்ல பாவியாய் நின்று பரிதவிக்கின்றேன்.

தீங்கறியா என் தம்பி தனமும் போகும் இடம் தெரியாது புலம்பும் ஓசை என் செவிப்பறைகளை உடைத்து விட்டது. எமது உறவுகள் உன் பிரிவுத் துயர் கேட்டு சிந்திய கண்ணீர் புனித ஆறாய் ஓடுகிறது. உனை நினைத்து வாய் விட்டு அழுத ஓசை வானையும் பிளக்கிறது. இதிலிருந்து நீ அயல் நாட்டு சீமைக்கும், அழகுறு கீழ்க் கரைக்கும் மனிதத்தை சுமந்த மாதரசி ஆனாய் ஆகவே நீ மரணிக்கவில்லை மண்ணில் விதையாகி, மரமாகி மனித நேயக் காற்றாகி விட்டாய்.



**சந்திரசேகரம் (மூத்த அத்தான்)**
**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலத்தின் தெய்வமகள்

அன்பான என் தம்பியையும் எதுவும் புரியாத என்பெறாமக்களையும்
ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு எங்கு சென்றாய் - தெய்வமகளே
எம் தம்பியின் குடும்பக்குலத்தின் - தெய்வமகளே
நான் அயல் நாட்டிலிருந்து உம் செய்தி கேட்டு
தவிக்கின்றேன். எங்கள் குடும்பத்தின் - தெய்வமகளே
எனது பிள்ளைகள் சித்தி என்று ஏங்கி அழுகின்றார்கள்.
தவிக்க விட்டு எங்கே சென்றாய் - தெய்வமகளே

வெள்ள உள்ளம் கொண்ட என் தம்பிக்கு
கிடைத்த அன்பான குல தெய்வமே
அன்னைக்கும் அன்னையுமாய் எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்
என்மனைவி பிள்ளைகளுக்கு சகோதரி, சித்தியாகவும்
வருடங்கள் ஓடினாலும் உன்நினைவுகள்
எம்பிள்ளைகள் மனதை விட்டு அகலாது துடிக்கின்றனர்.
எங்கள் குடும்ப குலதெய்வமே
உன் ஆன்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

**மகாலிங்கமூர்த்தி (மச்சான்)**
**குடும்பம்.**
**துறைநீலாவணை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே.....

யாவருக்கும் அன்பையும் பண்பையும் காட்டும் - ஒளிவிளக்கே
நீங்கள் மரணித்த செய்தி கேட்டு தவிக்கின்றோம்.
என்மனைவி பிள்ளைகள் எண்ணி எண்ணித் துடிக்கிறார்கள் - ஒளிவிளக்கே
இவ்வுலகை விட்டு அகலவில்லை - ஒளிவிளக்கே!
எம் இரு பிள்ளைகள் அயல் நாட்டில் ஆறாத்துயரத்தில் தவிக்கிறார்கள்.

எம்மூத்த மகனிற்கு புத்திமதி தொலைபேசியில் கூறுவீரே
இறப்பதற்கு முதல் நாளே எம்மகனோடு
கூறிய ஆறுதல் வார்த்தைகள் எங்கே - ஒளிவிளக்கே!
தொலைபேசியில் என்மகன் சித்தியின் புத்திமதி இனி எங்கே?
மதிகெட்டா இவ் விதிக்கு காலன்கொண்டு சென்றான்

எம் முதல் பிள்ளை திருமணத்தில்
காலத்தின் கோலத்தால் கலந்து கொள்ளாது
அந்நாளை பற்றிக் கேட்ட வண்ணமே இருந்தீரே!
இனியார் கேட்டறிவார் ஒளிவிளக்கே!
'ஓ' வென அழத்தான் தெரியும் அத்துடன் ஆறுதலும்
கூறத்தான் முடியும் இருந்தும் உன் இடத்தை
நிரப்ப முடியுமா? குடும்ப ஒளிவிளக்கே!!!

**தருமலிங்கம் (மச்சான்)**
**குடும்பம்**
**துறைநீலாவணை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மைத்துனி அல்ல என் சகோதரி உதயா மரணிக்கவில்லை இருக்கிறாள்

வந்தாறுமூலையிலே வேரூன்றி ஊர் போற்றும் குலத்தில் உதயமான என் மைத்துனி அல்ல சகோதரி உதயாவே! பெரும் விருட்சமாய் ஜேர்மனில் வாழ்ந்திருந்தாய் என் சகோதரி உதயா!

அன்பை வாரிச்சொரியும் என் தம்பிக்கேற்ற துணையாகவும் எனதன்பு மும்மூர்த்தி மருமக்களை ஈன்றெடுத்த பெருமை கொள் தாயாகவும், நட்புடன் பழகும் நண்பியாகவும், கொடுப்பதில் கோடீஸ்வரியாகவும் எம்முடன் பழகும் பாசமுள்ள சகோதரி உதயாவே!

- வள்ளுவரின் வாக்கிற்கிணங்க -

" மங்கலம் என்ப மனை மாட்சி மற்று அதன் நன்கலம் நன்மக்கட் பேறு"

எனும் பெருமைக்கேற்ற மாதர் அணி மாணிக்கமே என் உதயாவே! குளிர் கால விடுமுறைதனில் குடும்பத்துடன் குதுகலிக்க இருவருடத்திற் கொருமுறை இனசன பாசத்துடன் இங்கு வந்து இன்முகம் காட்டி முத்தமிட்டு சிரித்து இன்சொற்கூறியதை மறக்க முடியாமல் வாடுகிறோம்.

தொலைபேசியில் உதயா எம்மை விட்டு சென்ற செய்தி கேட்டு எம் தலைமீது இடி விழுந்தது போன்று நிலை தடுமாறி மனமுடைந்து உலகமே ஒரு கணம் நின்று விட்டது போல் பிரமித்தே போய்விட்டது எமது குடும்பம். வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிலைத்தவர் யார்? எனும் கேள்விக்கு விடையான என் சகோதரி உதயாவே!

என் கணவரும், நீங்களும் சேர்ந்து என்னையும் என்தம்பியையும் கேலி செய்யும் அன்பான வார்த்தைகள் இனி எங்கே? எப்போது கேட்போம்? என் தெய்வமே! ஒளிவிளக்கே! என் வழிகாட்டியே! ஓடக்காரன் இல்லாத ஓடம் போல் அலைக்கழிக்கிறோம். என் தங்கமே உதயாவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதை வாங்கினாலும், எதை எடுத்தாலும் அடிமனதில் இருந்து வரும் சொல் அக்கா, "அக்கா, அம்மா" வந்து பாருங்கள் என முதலில் எம்மிடம் காட்டி கேட்பீரே தெய்வமே! இனி யாரிடம் இப்படி உண்மைப்பாச அன்பை பெறுவது எமது குலவிளக்கே! என் தங்கை உதயாவே!

ஜேர்மன் திரும்பும் வேளை ஏனோ தெரியவில்லை மிகவும் துக்கத்துடன் அம்மாவும், நானும், மகளும் அழுதவேளை ஏன் அழுகிறீர்கள் என நீங்களும் அழுது கூறிய வார்த்தை " ஓரிரண்டு வருடத்தில் மீண்டும் வந்து விடுவோம்" இவ்வார்த்தையின் ஆழத்தை அறியாத காலன் எடுத்துச் சென்று விட்டான் எங்கள் உதயாவை! ஏன் என் தங்கையின் ஆருயிரை.

எங்கள் குடும்ப குல விளக்கே! எங்களது அழகு தேவதையே! எமக்கு பாசமளிக்கும் பாசமலரே! அன்பு பாராட்டும் அன்பு மைத்துனியே! அரும் பாவையே! உமது இறுதிக் கிரியையில் கல்லறைக்கு வரமுடியாத பாவியாகி விட்ட நாங்கள் அனலில் விழுந்த புழுவாய் துடிக்கிறோம். என்தம்பியும், என்மருமக்களும் எப்பாடு படுவார்கள் என்பதை அறிந்தா? என் தங்கை உதயா நீ ஓடி மறைந்தாய்?

மதியோ?? விதியோ?? என்றென்றும் எம் இதயத்தினுள் நினைந்திருக்கிறாய்!!

எது எப்படியோ, இறைவன் நியதிப்படி இறை நிழலை வேண்டி முத்தியின்பம் அடைய என் குடும்பம் நித்தமும் இறைவனை இறைஞ்சுகிறோம். என் தாயே உதயாவே!!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**அன்பு மச்சாள் ரவீந்திரி**
**பாலசந்திரன்**
**மட்டக்களப்பு.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணியை எண்ணி....

வந்தாறுமூலை வந்துதித்த அண்ணி (உதயா) நீ
வந்தவரை உபசரிக்கும் இமயம் நீ
துறைநீலாவணை தந்த தனம் என் சோதரனை
துணையாக ஏற்று துயர் இன்றி வாழ்ந்தாய் நீ
முறையான இல்லாளாய் ஜேர்மனில் நீ வாழ்ந்து
மும்மணியாய் கண்மணிகள் மூன்றை நீ ஈன்றாய்
முதல் பிள்ளை பூப்பான சடங்கைக் கண்ட
முப்பதிலே முடிவு செய்தி தந்தாய்
இரக்கமில்லா இயமனுக்கு இரயில் கூட வாகனமோ
இடியாய் செய்தி வர இது கூட காரணமோ
கூடிப் பிறந்தவனை வாடிவதைக்க விட்டு
ஓடிப் போனதென்ன தேடி எம்மை அலைய விட்டு
கூடி அழுவதற்கும் நாம் அங்கு இல்லை அண்ணி
ஓடிவந்திடாயோ உன் முகத்தை காட்டிடாயோ
தொங்கும் முகத்துடனே துடித்தழுது வடிக்கின்றோம்
தூரத்தே என் அண்ணன் துயரத்தில் துவழ்கின்றான்
அண்ணனல்ல நண்பன்தான் என் அண்ணன்
பாசத்தின் ஊற்று, அன்புக்கு இணை அவரே
அண்ணன் துயரைத் துடைப்பது இனி யரோ
அவர் துணைக்கு யார் உளரோ
பிரியமுள்ள அண்ணனுக்கு நல்மனைவி ஆனதுபோல்
பாசமுள்ள பிள்ளைகட்க்கும் நல் அன்னை நீயானாய்
நேசமுடன் எங்களுக்கு நேசத்தை நீ பொழிந்தாய்
நேற்றுத்தான் நடந்தது போல் எல்லாமே நினைவிருக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தாறுமூலை உறவினர்களுடன்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடியாக வந்ததுவே பூங்கொடியாள் உன் செய்தி
முற்றத்து மல்லிகையே மண்ணில் வீழ்ந்தாயோ
சுற்றத்தார் எம்மை எல்லாம் கண்ணீரால் நனைத்தாயோ
வாசல் கொடிமலரே வாடி வீழ்ந்ததென்ன
வீசும் நறுமணத்தை வீச மறுத்ததென்ன
பாதிவழி இருக்கையிலே பற்றறுத்து பிரிந்ததென்ன
மீதி வழி செல்லாது மிச்சமதை வைத்ததென்ன
உன் அன்னை பிரிந்தது போல் உன்வயது ஆறினிலே
உன் பிள்ளை அழுகிறதே உனைப்பிரிந்து ஆறினிலே
பிறப்பதெல்லாம் இறப்பதற்கே இது நியதி. - ஆனாலும்
மறப்பதற்கு முடியாதே அண்ணி உன் இழப்பதனை.
செத்தது உன் உடம்பேதான் இது உண்மை - எம்
சிந்தையிலே வாழ்ந்திடுவாய் என்றும் நீ அண்ணி - உன்
ஆத்மாக்கும் சாந்தி வரும் அடைவாய் அமைதி
ஆண்டவனே ஏற்றிடுவாய் அவர் உயிரை உன்பாதம்
சாந்தி கொடு ஆத்மாக்கு நிரந்தரமாய் உன் அருளால்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ரதீஸ் (மைத்துனர்)
மட்டக்களப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடித்திரியும் உதயா!!!

உதயா ஓ... நீர் உலகில் ஓர் உதய நிலா.
என் மச்சான் பாலனுக்கு கிடைத்த மாசற்ற நிலா.
என் மருமக்களைப் பெற்ற பாச நிலா.
ஏன்? எங்கள் குடும்ப ஒளி நிலா எங்கே?
அந்த ஒளி நிலா
காலனுக்கு கண்ணில்லையோ எங்கள் உதய நிலாவை மறைக்க.

அண்ணா, அண்ணா என்று அன்புடன் அழைக்கும் ஓசை வேறு என்ன
அதற்கு நிகர் என் தங்கை உதயாவே!
சிரிப்பதில், பழகுவதில், பகிடி பண்ணுவதில் ஏன்
கொடுப்பதில் கூட என் மச்சானுக்கேற்ற
மாணிக்கமே உதயா!
குறிப்பறிந்து குடும்பத்தாருக்கு கொடுப்பதில் யார்
உதயா உமக்கு நிகர்?

'ஸ்கைப்பில்' உன் இறுதிக் கிரியை கண்ட வேளை
நம்பவில்லை நாங்கள் அது தானே நீர் என்று ஏன்
உதயா? நீர் ஒரு நிமிடமாவது ஓய்ந்து இருப்பதில்லையே
குடு குடு என ஓடி காரியமாற்றுவாய் உதயா! .... ஆ
அதுவா எங்களது உதயா என நம்பவே முடியவில்லை.
ஓ... போதும் இன்னும் சொல்ல வார்த்தைகள் இல்லை,
எழுத வசனங்கள் இல்லை உன் பெருமைதனை
இருந்தும், இறைவனின் தீர்ப்பை ஏற்று அவனடி சேர்ந்து
உன் ஆத்மா சாந்தியடைய எமது குடும்பத்தார்கள் இறைவனிடம்
ஆத்மார்த்தமாக பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



அண்ணன் பாலச்சந்திரன்
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயா மா(ம்)மி

புன்னகை பூத்த முகம் கண்டு
பூரிப்படையும் நான்
இழக்க முடியாத ஒன்றை இழந்து
ஏக்கமுற்றவளானேன்.

அம்மாவிடமும், அப்பாவிடமும்
அடம்பிடித்தும் கிடைக்காத ஒன்றை
அறிந்து விட்ட மறு கணமே
பரிசாகத் தரும்
மா(ம்)மி எங்கே?
தேடுகிறேன்......... காணவில்லை.

நீங்கள் இவ்வுலகில்
நிலையாகச் செய்த தர்மங்களும்,
புன்னகைத்துச் செய்த சேவைகளும்
நிச்சயம் உங்களுக்கு
ஈருலக ஈடேற்றம் தரும்.

நீங்கள் தூரமாகவில்லை - எங்கள்
அகத்தினில் அஸ்தமித்ததால்
நாம் கண்ணீரை
பூப்பந்தலாக்கி -
அஞ்சலிக்கின்றோம். மா(ம்)மி

பா. அக்ஷிகா
மட்டக்களப்பு

---

## தாரகையாய் வழிகாட்டு எங்களுக்கு...



பெற்றால்தான் பிள்ளை என்றிராது எம்மையும்
பார்த்து வந்தாய் பாசமுள்ள தாய்போன்றே
கல்விக்கும் வழிகாட்டி கற்பித்தாய்
கருத்துடனே பொருள் சொல்வாய் பல்வகைக்கும்
சொல்லுக்கும் செயலுக்கும் மாற்றமிராது
சொன்னதெல்லாம் செய்திடுவாய் சோர்வுமின்றி
போகுமிடம் அழைத்திடுவாய் எங்களையும்
பொருட்களையும் பரிசளிப்பாய் கேட்டுக் கேட்டு
தனி ஒருவன் தனுசிகனும்
தன் சித்தி தான் என்ற தற்பெருமை கொள்வது போல்
அக்ஷனும், அஞ்சனாவும், ஜெயமிதா அக்காவுடன்
பெரியன்னை நீ எனவே
பெருமையுடன் புகழ்ந்திருக்க
தனிப் புயலோ வந்து அங்கே உனை
அள்ளி பரலோகம் தள்ளியது
பாரம்மா தாரகையாய் வானத்தில் நீயிருந்து
வழிகாட்டு எங்களுக்கு நீ இன்னும் இருப்பதுபோல்!

பெறாமக்கள்
தனுசிகன், ஜெயமித்தா,
அக்ஷன், அஞ்சனா
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மோடு வாழ்ந்த நினைவுகள்...



வந்தாறுமூலையில் அவதரித்து
ஓர் சில ஆண்டுகள் மட்டக்களப்பில் எம்மோடு வாழ்ந்து
ரம்மியமான அழகிய கண்சிமிட்டலுடன் பேச்சும்
கோபம் இல்லாத அன்பு முகம் காண
கோடி தவம் இருக்க வேண்டும் செல்லமே!
துடிக்குதம்மா உதயா உள்ளம் - என்
உதிரம் கொதிக்குது துன்பமான - உன்
பிரிவு கேட்ட துயரத்தில்
இழந்ததம்மா என் மனம் - உன்
முகம் பாராமல் உன்னைப் பிரிந்து தவிக்கிறேன் உதயா
பிரிவு என்னும் சோகத்தைக் காணவில்லை
உதயா உன்னை எண்ணி என் நாளும் அழுகின்றேன்.
கோபம் என்பதை உன் முகத்தில் கண்டதில்லை
கோபித்து யாரையும் நீ நொந்ததில்லை
ஆபத்து என்று வந்துவிட்டால் - அங்கு
ஆட்களில் ஒருவராய் நிற்பாய் என் செல்லமே!
உதயா நினைக்கும் போது நெஞ்சம் குமுறுகின்றதே
உனது சித்தப்பாவை நினைத்து உள்ளத்துள்ளே
அழுது கொண்டிருக்கும் போது
நீரும் நீர் குமிழி போல் மறைந்து விட்ட மாயமென்ன
உதயா! என் செல்லமே! நீ மறைந்தாலும்
நான் வாழும் வரை உன் நினைவுகளும் வாழும்.



திருமதி – புஸ்பராசா லெட்சுமிப்பிள்ளை (பெரிய அன்ரி)
மட்டக்களப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது குடும்ப உறவினர்களுடன்



ஜேர்மனியிலுள்ள குடும்ப உறவினர்களுடன்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவு மகள் உதயா....

உறவு என்னும் கிளையில் இருந்து
நீ உன் உறவை இலகு காத்த கிளிபோல் எங்களை ஆக்கினாயே
என்றென்றும் நீ வாழ்வாய் என்று நாங்கள் நினைத்தோம் - ஆனால்
எங்களை விட்டு நீ மட்டும் மாயமாய் போய்விட்டாய்
உன் மலர் சிரிப்புப் போல் உன் மலர் போன்ற முகம்
இலட்சம் மலர்களாக மலர்ந்து உன் திருவடி பாதம் மலரட்டும் - என்று
உன் ஆத்மா சாந்தி அடைய நாங்கள் என்றும்
எப்போதும் பிராத்திப்போமாக!

செல்வராசா (சித்தப்பா)
சுவிஸ்

# விண்மீனாய்....

உலகில் அழியா விண்மீனாய் உதித்த நீங்கள்
உறவுகளின் விண்மீனாய் திகழ்ந்தீர்கள்
உறவுகளின் விண்மீனாய் பிரகாசித்தீர்கள்
உள்ளத்தில் தங்கள் நினைவுகளை
அழிக்க முடியாத கல்வெட்டுக்களாய் மாற்றி
எம்மை தவிக்க விட்டு சென்றதேனோ?



செந்தூரன், இராகுல், குமணன் (மைத்துனர்கள்)
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலாவித்திரிந்த உதயா...



கள்ளம் கபடமற்ற புன் சிரிப்புடன்
எம் சுக நலம் விசாரித்து இருப்பவற்றை
எம்மோடு பகிர்ந்து உண்டு
சந்தோசமாக உலாவித்திரிந்த
என் அன்பு மருமகளே!
இப்போது வாயிற் கதவைப் பார்க்கின்றோம் - உதயா
வருவது எப்போது என்று
இன்று நினைக்கும் போது நெஞ்சம் குமுறுகின்றதே - நீ
மாமா, மாமி, மச்சாள் என்று அழைக்கும் ஒலி ஒலித்துக் கொண்டுள்ளதே.

என் அன்பு மச்சாள் உதயா!
கோபம் என்பதை உன் முகத்தில் நாங்கள் கண்டதில்லை
பண்புள்ள எங்கள் ஆசை மச்சாளே
இத் தரையில் நீ எங்களுடன் இனிமையாகப் பழகிய
நினைவுகள் சுற்றி சுற்றி வலம் வரும்
உன் ஏறுநடையும் நித்தமும் எங்களை வாட்டுகின்றதே
நாங்கள் எப்படி மறப்போம் உம் பிரிவை
கவலையுடன் வாழ்வதற்கா? இடைநடுவில் எம்மை விட்டுப் பிரிந்தாய்
மண்ணை விட்டுப் பிரிந்தாலும் - என்றும்
எங்கள் நெஞ்சம் மறவாது - உன்
ஆத்ம சாந்திக்காக இறுதிவரை பிராத்திப்போம்.

**கிருஷ்ணப்பிள்ளை (மாமா) சுவிடன்**
**சந்திராவதி (மாமி)**
**வினோ, துஜா, பிரியா, தரிசன் (மச்சான்மார்) வந்தாறுமூலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவனே உதயாவை தந்துவிடு....

அன்புடனும் பண்புடனும் எம்மை ஆதரிப்பாய்
ஆசையுடன் எம்மோடு சேட்டைகள் பல செய்து
செய்த சேட்டைகளை மறப்பதற்கு முன்னர் எங்கு சென்றாய் உதயா
உடன் பிறப்பில்லா நாம் சிறுவயவிலிருந்தே கூடித்திரிந்தோம்
வாய் நிறைய என் தம்பி, என் தங்கை, என் அக்கா என்று
வாயார அழைப்பாய் உன் குரல் கேட்கின்றது உதயா அக்கா
எங்கு ஓடி மறைந்தாய்.

உடன் பிறந்த சகோதரர்கள் ஐவருடனும் எம்மையும் சேர்ப்பாய்
உதயா நீ சென்ற திசையை யார் அறிவார்.
எங்களுடன் சேர்ந்து வாழ்ந்த சில வருடம் என்றாலும் - உன்
நினைவுகளுடன் வாழும் நாட்கள் அதிகமாகின்றதே
எம் உள்ளம் அழுது அழுது வதைக்கின்றதே அதை யார் அறிவார்.
வீடெல்லாம் சோகமாக பல நாளாகியதே - உன்
உயிரை உறைய வைத்த உனது பிரிவினை
எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. உதயா அக்கா
ஆண்டவனே உன்னை வேண்டுகின்றோம்.
மறு ஜென்மம் ஒன்றிருந்தால் எங்கள் உதயாவைத் தந்துவிடு
உதயா அக்கா நீ மீண்டும் பிறந்து விடு
மகிழ்வுடன் வாழ்ந்திடுவோம்.

பிரிவுத்துயர் எம்மை வாட்டுகின்றதே
வந்தவர்கள் யாவருக்கும் வாழ்க்கை சொந்தமில்லை.
பிறந்தவர்களுக்கு இவ்வுலகு நிரந்தரமில்லை
நிலைமாறும் உலகில் உண்மையான மரணத்தை
நினைத்துப்பார்ப்பதந்கு முடியவில்லை.
என்றும் நிலைத்திருக்கும் இப்புவியில் அப்பனை நாமும் வேண்டுகின்றோம்.
அன்பான உன்னை சாந்தி பெற வைத்திடுவார்.



சகோதரர்கள்
அஜந்தி (டென்மார்க்)
மோகன் (மட்டக்களப்பு)
வேவி, பார்த்தீபன் (வந்தாறுமூலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிலைத்திருக்கும் என் அக்கா...

அன்று அகதியாய் ஜேர்மன் வந்தபோது
அன்பாய், ஆதரவாய் அக்கா செய்தவை
என்றும் நிலைத்திருக்கு என் மனதில்,

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும், பயனும் அது என்ற வள்ளுவரின்
வாக்கில் அவர்கள் வாழ்வியல் ஓடியது,

அத்தானுக்கு மனைவியாய் அவர் கிடைத்ததை
அவர் செய்த பூர்வ புண்ணியமென நாங்கள்
நினைத்திருந்தோம், அந்தளவு அக்காவின் செயல்கள்

மனித வாழ்வின் மகத்தான பணிகளை எல்லாம்
மன மகிழ்வுடன் செய்து மண்ணுலகில் இருந்து
விண்ணுலகம் சென்று விட்டார் - அக்கா

அவர் மோட்ச உலகில் முதன்மை
பெற்று இருக்க எனது பிரார்த்தனைகள்



அருள்வேந்தன் (தம்பி)
லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமி......

நாடு விட்டு நாடு வந்தாலும்
வீடுவர வழிசெய்தவர் நீங்கள்
சட்டம் எம்மைத் தடுத்த போதும் - உங்கள்
திட்டமே எம்மைத் திறந்து விட்டது
நாம் சுறுசுறுப்பைக் கற்றுக் கொண்டது
எறும்பிடமல்ல உங்களிடம்தான்
உங்கள் துணிவை வியர்ந்ததுண்டு ஆனால்
விஞ்ச முடியவில்லை.
ஆதவனைக் கண்டு பனி விலகுவது போல்
உங்களைக் காணும் போதெல்லாம்
எங்கள் கவலைகள் விலகுவதுண்டு
நாங்கள் ஆர்பரித்ததெல்லாம்
உங்கள் ஆதரவில்தான்
நாங்கள் மரமாயிருந்த போது
நீங்கள் விழுதாய் தாங்கியுள்ளீர்கள்
இன்றும் நாம் தனித்திருந்தாலும் அதுவும்
உங்கள் தயவில் வந்ததுவே மாமி
நமது உறவு ஒன்றுவிட்டது என்பது மரபு - ஆனால்
ஒன்றுக்குள் ஒன்றானது என்பது யாதார்த்தம் மாமி
வாழ்க்கையில் சில தவிர்க்க முடியாதது வேறு
அதனால் எங்களை தவிக்க விட்டது தப்பில்லையா - மாமி
உங்களை தவற விட்டோமே என்று
நாம் ஏங்க நீங்களோ அதுவும் விதியே
என்றா சொல்கிறீர்கள் முடியாது மாமி
விதியை எண்ணி முடங்காது
நாங்கள் மீள்வோம் உங்களுக்காக
பிரார்த்திப்போம் மாமி இது எங்கள்
கடமை மட்டுமல்ல கடனும் கூட என்று
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் மருமக்கள்

குலோ, காண்டி
லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடா மலர்

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

எனும் வள்ளுவரின் வாக்கிற்கேற்ப வாழ்ந்தவர் எங்கள் உதயாக்கா. சிரித்த முகம், சிந்திக்கவைக்கும் திட்டமிடல், ஆற்றல் மிக்க நடவெடிக்கைகள், திணறடிக்கும் செயல், வியக்க வைக்கும் திறன் அத்தனையும் ஒருவரிடம் கண்டது இவரிடம் மட்டுமே.

வேர்த்ஹைம் நகரில் இவர் 1998 ல் இருந்து படிப்படியாக தனது தடத்தினை பதித்தவர். எதையும் எளிதாக கற்றுக்கொள்ளக் கூடியவர். எதையும் கற்றுக்கொள்வதற்கும் தயக்கம் காட்டாதவர். பிரயாசையோடு காரியங்களை செய்வதில் வல்லமை கொண்டவர். பொதுவிடயங்களில் மிக்க ஆர்வமும் அக்கறையும் கொண்டவர்.

எங்கள் பிரதேசத்தில் (வேர்த்ஹைம் -மைன் ரஔபர்) வாழும் பத்து தமிழ் குடும்பங்களிலும் இவர் நினைவு மிகப்பெரிய தாக்கத்தை உண்டு பண்ணும் என்பதில் ஏதும் ஐயமில்லை. எந்த வீட்டு விசேஷடத்திலும் இவர் சமூகம் பெரும் ஆனந்தத்தையும் கலகலப்பையும் உண்டுபண்ணும். இவர் இல்லாத விசேஷடங்களை இனி நினைத்துக் கூட பார்க்க முடியாது என்கிறார்கள் நண்பர்கள்.

தொன்னூறுகளில் இருந்தே இங்கு தமிழர்கள் வாழ்ந்துவந்தாலும் அவர் தன் முயற்சியால் உருவாக்கிய வர்த்தக முயற்சியே முதலாவது தமிழர் நிறுவனமாகும். ஓயாமல் எதையாவது செய்து கொண்டிருப்பது இவர் சுபாவம். தமிழ் குழந்தைகள் தமிழ் கற்க வேண்டும் என்ற ஆர்வத்தில் தமிழ் பாடசாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கான தகவல் திரட்டலில் ஈடுபட்டி ருந்தார். பின்னர் அது வேறு வடிவம் கொண்ட போதும் அதற்கும் தனது ஆதரவினை தந்திருந்தார் என்பதும் குறிப்பிடக்கூடியவை.

எவரையும் இன்முகத்தோடு வரவேற்பதிலும் உபசரிப்பதிலும் மிகப்பிர சித்தமானவர் உதயாக்கா. இவர்கள் வீட்டிற்கு செல்பவர்கள் யாராவது ஒரு தேனீராவது அருந்தாமல் திரும்பமுடியாது. இவர் நடத்திய வியாபார நிறுவனத்தை தாண்டிச் செல்பவர்களுக்கும் இதே நிலைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே நடை பெறுகின்ற வெளிநாட்டவருக்கான கலைகலாச்சார நிகழ்சிகளில் தன் பிள்ளைகளோடு ஏனையவர் பிள்ளைகளையும் இணைத்து பங்குபெறச் செய்வார். தன்னைப் போல எல்லாரையும் எண்ணியதாலோ என்னவோ எல்லோர் மனதிலும் அவர் நிற்கின்றார். இது எமது தமிழ் சமூகத்திற்கு மட்டுமல்ல பல பல வெளிநாட்டவர்களுக்கும் இவர் பரீச்சய மானவர். துருக்கியர், யுக்கோசிலாவியர், ஜேர்மனியர் என பெரிய அறிமுக வட்டம் கொண்டவர்.

இவர் வேலை செய்யும் இடத்திலும் கனிவான பேச்சினால் அனைவரையும் கவர்ந்தவர். புன்னகை தான் இவருக்கு முத்திரை. திருமதி தனம் என்றால் அதுவொரு தனி மதிப்பு. இவர் இழப்பறிந்து வந்தவர்களில் உறவினர்களை விட நண்பர்களே அதிகம் என்பேன் நான்.

மலர்ந்தும் மலராத மொட்டுகளாய் நிற்கும் இவர் குழந்தைகள் திக்கற்று நிற்கும் கணவர், சகோதரர்கள் மற்றும் குடும்பத்தாரின் இழப்பு ஈடுகட்டமுடியாதது அது போல கூட வாழ்ந்த குடும்பங்களும் நண்பர்களு மாகிய எங்களுக்கும் இந்த இழப்பு எங்கள் வாழ்கை நடைமுறையில் மிகப்பெரிய மாற்றத்தையும் துயரத்தையும் தந்திருக்கிறது என்பதையும் நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். உதயாக்கா வேர்த்ஹைம் வாழ் தமிழர்கள் வரலாற்றில் ஒரு பாடம், ஒரு படிக்கல், ஒரு உதாரணம் மறக்க முடியாத பல நினைவுகளில் நீங்காதவர். இவர் இழப்பினால் தவிக்கும் குடும்பத் தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காக எல்லோருக்கும் பொதுவான இறைவனை வேண்டு கின்றோம்.

தனக்கெனத் தனித்திறன் மிகுந்தவளே - உறவு
தவிக்க விண்ணில் புகுந்தவளே
மனத்துயர் ஆற்றிட மருந்துண்டா - உனை
மறந்திட எமக்கே வழியுண்டா?
கனவென மறைந்து விட்டாயே - உதயா
கண்ணின் பார்வைக்கு எட்டாயோ
அனைவரின் அழுகுரல் கேட்டாயோ - ஒரு
ஆறுதல் உரைக்க மாட்டாயோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை நினைத்தே வாடுகின்றோம் -உன்
உறவைப் புகழ்ந்தே பாடுகின்றோம்
என்ன துயரம் என்றேனும் - உன்
பேச்சில் அறியோம் ஒன்றேனும்
மின்னல் இன்றி இடியொன்றே - வந்து
மேலே விழுந்தது போலின்றே
கன்னச் சிரிப்பொலிக் காரியே - உனக்கு
கண்ணீர் அஞ்சலி செய்கின்றோம்!
காயாய் உதிர்ந்து போனாயே - அந்தோ
காலன் கைவசம் ஆனியோ?
தேயா பிறையாய் மனவானில் -என்றும்
தெரிய வாழ்வாய் குணவாளே
சாயா குன்றே உதயா - ஏனோ
சாய்ந்தாய் நிலைப்பது எதுவுலகில்?

–அன்பு– (நண்பர்கள் சார்பில்)
Wertheim - Germany





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியில் உள்ள நண்பர்களுடன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி விளக்கு

**(இந்து மதமும் ஜோதிட சாஸ்திரமும் கூறும்**

**அன்றாட வாழ்க்கைக்கு வழிகாட்டி நூல்!**

**ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய அரிய பொக்கிஷம்!)**

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்றார் ஔவையார். ஆறறிவு பெற்ற மனிதனால் மட்டுமே, சிந்தித்து, செயல்பட்டு, ஆன்மீக வழிநடந்து, பிறவிப் பெருங்கடலைக் கடக்க இயலும் மறுபிறவியில்லாத நிலையே அடைய உதவுவதும் மனிதப் பிறவியின் வாயிலாகத்தான் முடியும்.

"கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடுவாராத நட்பும்,
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்,
வலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரோடு கூட்டு கண்டாய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அபிராமிப்பட்டர் பாடினார். ஒவ்வொரு மனிதனும் தனக்குக் கிடைக்க வேண்டுவதெல்லாம், அவர் கேட்ட இத்தனை வரங்களையெல்லாம் தான் இத்தனை இன்பங்களையும், செல்வங்களையும் பெற்று, ஒரு மனிதன், ஆன்மீக நிலையை அடையவும், ஒழுக்க நெறி நடந்து, பிறர்க்கு சான்றாக நடந்து, பின்வரும் தலைமுறைக்கு வழிகாட்டவும், தனது ஆன்மீக நிலையை மேம்படுத்தவும், வேத காலம் தொட்டு, நமது முன்னோர்களும், ரிஷிகளும், ஜோதிட வல்லுநர்களும், சமயப் பெருந்தகைகளும், நமக்கு எத்தனையோ, தத்துவங்களையும், உபதேசங்களையும், சாஸ்திரங்களையும் அருளியிருக்கி றார்கள்.

ஒரு மனிதன் பிறந்தது முதல், பள்ளிக்கு சென்று வித்தை பயின்று, திருமணம் புரிந்து, காதல் விளையாடி, குழந்தையைப் பெற்று, செல்வம் தேடி, ஆன்மீக பாதையில் சென்று, மறுமையடையும் வரை, அவன் அன்றாடம் செய்ய வேண்டிய கடமைகளையும் செய்யக் கூடாத வற்றையும் கூறியிருக்கிறார்கள். இறந்தவுடன், அவனுடைய உடலுக்கு செய்ய வேண்டிய கடமைகளையும், அவன் ஆத்மா சாந்தி அடைய வேண்டி, செய்ய வேண்டிய சாஸ்திரங்களையும் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றார்கள்.

இப்படிச் செய், இப்படிச் செய்யாதே, என்று ஆணித்தரமாக நமக்கு அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள் என்றால், தமது அனுபவத் தையும் சேர்த்தே அவர்கள் சொல்லியிருக்க வேண்டும். "மூதோர் சொல் கேள்" என்பது ஔவையாரின் வாக்கு, எனவே நமது முன்னோர் களின் அறிவுரை நமக்கு சிறந்த வழிகாட்டியாகும்.

இந்த நூலில் உள்ளவை அனைத்தும், இந்து மதத்தின் பொக்கி ஷங்களான, புராணங்கள், உபநிடதங்கள், ஜோதிட நூல்கள், நீதி நூல்கள் இவற்றிலிருந்து சேகரித்துக் கொடுக்கப்பட்டவையாகும்.

எல்லா மதத்தினரும், இனத்தவரும் இந்தநூலினை வாங்கிப் பயனடையலாம்.

எல்லோருக்கும் எல்லா நலமும் பெற அன்னை பராசக்தியின் துணையிருப்பதாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுபசகுனங்கள்

கன்னி, பசு, ரத்னம், மலர், தயிர், யானை, குதிரை, பல அந்தணர்கள், இரு அந்தணர்கள் கொடி, எரியும் அக்கினி, பூர்ண கும்பம், காளை, தாமரை, சந்தனம், தானியங்கள், பிணம், வேசி, வெள்ளைமாலை, அக்ஷதை, எள்ளு, சலவைத்துணி, குழந்தையுடன் உள்ள பெண், கன்றுடன் கூடிய பசு, சங்கு, வாத்திய ஒலி, மாமிசத்துண்டு, நெய், பால் இவை எதிரில் வந்தால் உத்தமம்.

போ, வாழ்க, நன்றாய் இரு, செல்வாய், எழு, புறப்படு முதலிய ஒலி வருமானால் நல்லது.

## அசுப சகுனங்கள்

மோர், எண்ணெய் தேய்த்துக் கொண்டவன், தலைமுடி விரித்துப் போட்டிருப்பவள், சடைமுடியுடையவன், ஊர் சுற்றுபவன், குயவர், சிவந்தமலர், ஈரத்துணி, உப்பு, பன்றி, வலதுகால் தடுக்குதல், அழுகை, பாம்பு, முயல் இவை எதிரில் வரலாகாது.

வா, நில், எங்கே போகின்றாய் என்ற ஒலி ஆகாது. பூனை பாம்புகளைக் கண்டால் ஆறுமாதம் பிரயாணம் செய்யக்கூடாது. ஆந்தை யைக் கண்டால் மூன்று நாட்களுக்கும், முயலைக் கண்டால் எப்போதும் கூடாது. தும்மல் சத்தம் கேட்டால் ஒரு நாள் ஆகாது. ஒரு அந்தணரைக் கண்டால் ஆகாது. 3 அந்தணரைக் கண்டாலும் ஆகாது. இருவர், கால்வர், அல்லது பல அந்தணர்கள் எதிரில் வந்தால் நலம்.

பிற இனத்தவர் ஒருவர் எதிரில் வந்தால் சுபம். இருவராகவோ, அதிகமாகவோ வந்தால் தீமையாகும்.

## சந்திராஷ்டமம்

சந்திரன் மாதந்தோறும் ஒவ்வொரு ராசிக்கும் எட்டாமிடத்தில் சஞ்சரிக்கும் நேரம் ஆகும். சந்திரன் மனோகாரகன் மற்றும் உடலைக் குறிப்பவன். எனவே இக்காலத்தில், ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும், மனவேதனை, உடல் உபாதை, வீண் பிரச்சினைகள் போன்றவை ஏற்படும். திருமணம் என்பது உடல் ரீதியானதாகையால், இக்காலத்தில் திருமணம் செய்யா மலிருத்தல் நல்லது. மேலும், புதிய முயற்சிகளை தவிர்த்தல் எச்சரிக்கை யாகவும், கவனத்துடனும் இருத்தல். இந்த 2 1/4 நாளைக்கு அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளிகை காலம்

ஒவ்வொரு நாளும் குளிகை காலத்தில், எண்ணெய் தேய்த்துக் குளிக்க, புதிய ஆபரணங்கள் அணிய, புதுமனை குடிபுக, யாகம் வளர்க்க, அறுவடை செய்ய, மருந்து உட்கொள்ள, சாஸ்த்திரம் பயிர், வாசல்கால் நிறுத்த நல்லது.

## திருமணப் பொருத்தம்

முன்பு ஒரு பெண் ருதுவாகும் முன்பு விவாகம் செய்து விட வேண்டுமென்று சாஸ்திரம் கூறுகின்றது. இப்போது அரசாங்கச் சட்டப்படி பெண்ணுக்கு 18 வயதிலும், ஆணுக்கு 21 வயதிலும் திருமணம் செய்ய வேண்டும். எனவே அரசாங்கச் சட்டத்தை அனுசரித்து நடப்பது நமது கடமையாகும்.

## 1. தினப்பொருத்தம்

பெண் நட்சத்திரம் முதல் புருஷனுடைய நட்சத்திரம் வரை எண்ணி கண்ட தொகையை 9ல் வகுத்தால் மீதி 3, 5, 7, வந்தால் அசுபம் மற்றவை சுபம்.

## 2. கணப்பொருத்தம்

**தேவகணம்**

அச்சுவினி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், அத்தம், சுவாதி, அனுஷம், திருவோணம், ரேவதி

**மனிதகணம்**

பரணி, ரோகினி, திருவாதிரை, பூராடம், பூரட்டாதி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி

**ராக்ஷஸகணம்**

கார்த்திகை, மகம், விசாகம், ஆயில்யம், அவிட்டம், சித்திரை, கேட்டை, மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணும், மாப்பிளையும் ஒரே கணமாக (ராக்ஷஸகணம் தவிர) இருந்தால் நலம். (தற்காலத்தில் இரு ராக்ஷஸகணங்களையும் இணைக்கின்றோம்)

பெண் தேவகணமும், புருஷன் மனித கணமானால் மத்திமம்.
பெண் தேவகணமும், புருஷன் ராக்ஷஸகணமுமானால் - அதர்மம். (தற்காலத்தில் பொருத்துகிறோம்)

பெண் மனித கணமும் - பிள்ளை ராக்ஷஸகணமானால் - அத்மா அதர்மம்- பொருந்தவே பொருந்தாது. (தற்காலத்தில் பொருத்துகின்றோம்)

பெண் ராக்ஷஸகணமும் - பிள்ளை மனிதகணமுமானால் பொருந்தாது.

## 3. மாகேந்திரப் பொருத்தம் (புத்திர விருத்தி மற்றும் ஸம்பத்)

பெண் நட்சத்திரம் முதல் புருஷன் நட்சத்திரம் வரை எண்ணினால் 4, 7, 10, 13, 16, 19, 22, 25 வருமாயின் உத்தமம்.

## 4. ஸ்திரி தீர்க்கம் (தீர்க்க சுமங்கலி)

பெண் நட்சத்திரம் முதல் பிள்ளை நட்சத்திரம் 13க்கு மேல் இருந்தால் சுபம் 13க்கு கீழாயின் பொருந்தாது.

## 5. யோனிப் பொருத்தம் (தாம்பத்ய சுகம்)

ஒவ்வொரு நட்சத்திரத்துக்கும் ஒவ்வொரு மிருகம் உண்டு. பெண், ஆண் நட்சத்திரங்கள், பெண்ணுக்கு பெண் யோனியாகவும், ஆணுக்கு ஆண் யோனியாகவும், பகையில்லாதிருந்தால் உத்தமம். இருவருக்கும் ஆண் யோனி ஆகாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அச்சுவினி | - | ஆண் குதிரை |
| பரணி | - | ஆண் யானை |
| கார்த்திகை | - | பெண் ஆடு |
| ரோகிணி | - | ஆண் நாகம் |
| மிருகசீரிடம் | - | பெண் சாரை |
| திருவாதிரை | - | ஆண் நாய் |
| புனர்பூசம் | - | பெண் பூனை |
| பூசம் | - | ஆண் ஆடு |
| ஆயில்யம் | - | ஆண் பூனை |
| மகம் | - | ஆண் எலி |
| பூரம் | - | பெண் எலி |
| உத்தரம் | - | எருது |
| அத்தம் | - | பெண் எருமை |
| சித்திரை | - | ஆண் புலி |
| சுவாதி | - | ஆண் எருமை |
| விசாகம் | - | கெண் புலி |
| அனுஷம் | - | பெண் மான் |
| கேட்டை | - | கலைமான் |
| மூலம் | - | பெண் நாய் |
| பூராடம் | - | ஆண் குரங்கு |
| உத்திராடம் | - | மலட்டு பசு |
| திருவோணம் | - | பெண் குரங்கு |
| அவிட்டம் | - | பெண் சிங்கம் |
| சதயம் | - | பெண் குதிரை |
| பூரட்டாதி | - | ஆண் சிங்கம் |
| உத்திரட்டாதி | - | பாற்பசு |
| ரேவதி | - | பெண் யானை |

(இதில் சில பஞ்சாங்கங்களில் உத்தராடம் - கீரி என்று கூறப்பட்டுள்ளது.)

| | | | |
|---|---|---|---|
| பாம்பு | X | கீரி | ஜென்ம பகை |
| யானை | X | சிங்கம் | |
| குரங்கு | X | ஆடு | |
| மான் | X | நாய் | |
| எலி | X | பூனை | |
| குதிரை | X | எருமை | |
| பசு | X | புலி | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. ராசிப் பொருத்தம்

பெண் ராசியிலிருந்து பையன் ராசி வரை எண்ணினால் 6க்கு மேல் இருந்தால் பொருந்தும். 8வது ராசி ஆகாது. 7வது ராசியானால் சுபம். அதிலும், கும்ப -கடகமும் பொருந்தாது. 2, 6, 8, 12 ஆகாது. 1, 3, 4, 5, 9, 10, 11 வது வந்தால் சுமார்.

பெண் ராசிக்கு பிள்ளைராசி 6, 8 ஆகவோ, 8, 6 ஆகவோ வந்தால், சஷ்டாஷ்டக தோஷம் எனப்படும். இது மிகவும் தீமையாகும். இதிலும் சில விதி விலக்குண்டு. அவைகளில் மேற்கூறிய தோஷம் இல்லை.

## அனுகூல சஷ்டாஷ்டகம்

| பெண் ராசி | பிள்ளை ராசி | |
|---|---|---|
| மேஷத்துக்கும் | கன்னிக்கும் | |
| தனுசுக்கும் | ரிஷபத்துக்கும் | } சஷ்டாஷ்டகதோஷம் கிடையாது. |
| துலாத்துக்கும் | மீனத்துக்கும் | |
| கும்பத்துக்கும் | கடகத்துக்கும் | |
| சிம்மத்துக்கும் | மகரத்துக்கும் | |
| மிதுனத்துக்கும் | விருட்சிகத்துக்கும் | |

## 7. ராசி அதிபதி

| கிரகம் | நட்பு | சமம் | பகை |
|---|---|---|---|
| சூரியனுக்கு | சந்,செவ்,குரு | புதன் | சுக்,சனி,ராகு,கேது |
| சந்திரனுக்கு | சூரியன்,புதன் | செ,குரு,சுக்,சனி | ரா, கேது |
| செவ்வாய்க்கு | சூரி,சந்,குரு | சு, சனி | புத, ரா, கேது |
| புதனுக்கு | சூரி,சுக் | செ,குரு,சனி,ரா,கே | சந்திரன் |
| குருவுக்கு | சூரி,சந்,செ | சனி,ரா, கே | புத, சுக் |
| சுக்கிரனுக்கு | பு,சனி,ரா,கே | செவ்,குரு | சூரி, சந் |
| சனிக்கு | பு,சு,ரா,கே | குரு | சூரி,சந்,செவ் |
| ராகு,கேதுவுக்கு | சனி,சுக் | புத, குரு | சூரி, சந், செவ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஒருவருக்கொருவர் நட்பானால் உத்தமம்.
2. ஒருவருக்கு சமம், ஒருவருக்கு நட்பானால் உத்தமம்.
3. ஒருவருக்கு பகை, ஒருவருக்கு நட்பானால் மத்திமம்.
4. ஒருவருக்கு சமம், ஒருவருக்கு பகையானால் பொருத்தமில்லை.
5. இருவருக்கும் பகையானாலும் பொருத்தமில்லை.

## 8. வசியப் பொருத்தம்

| பெண் ராசி | ஆண் ராசி | |
|---|---|---|
| மேஷம் | சிம்மம், விருச்சிகம் | மற்ற ராசிகள் பொருந்தாது |
| ரிஷபம் | கடகம், துலாம் | |
| மிதுனம் | கன்னி | |
| கடகம் | விருச்சிகம், தனுசு | |
| சிம்மம் | மகரம் | |
| கன்னி | ரிஷபம், மீனம் | |
| துலாம் | மகரம் | |
| விருச்சிகம் | கடகம், கன்னி | |
| தனுசு | மீனம் | |
| மகரம் | கும்பம் | |
| கும்பம் | மீனம் | |
| மீனம் | மகரம் | |

## 9. இரச்சுப் பொருத்தம் [மிகவும் முக்கியமானது]

இரச்சு 5 வகைப்படும். பெண் பிள்ளைகளுடைய நட்சத்திரங்கள் ஒரே இரச்சுவாக இல்லாமல் பார்த்துச் செய்தால், பெண் தீர்க்க சுமங்கலியாக வாழ்வாள்.

ஒரே இரச்சுவிலும், ஆரோஹணம் என்று இரு பிரிவுகள் உண்டு சிலர் ஆண் பெண் நட்சத்திரங்கள் ஒரே இரச்சுவில் இருந்தாலும், ஆரோஹணம், அவரோஹணமாக இருந்தால் செய்யலாம் என்பார்கள். என்றாலும், ஒரே இரச்சுவாக இல்லாமலிருப்பது நல்லது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1. சிரோ இரச்சு | - | புருஷன் மரணம் |
| 2. கண்ட இரச்சு | - | பெண் மரணம் |
| 3. உதார இரச்சு | - | புத்திர தோஷம் |
| 4. ஊரு இரச்சு | - | பண நஷ்டம் |
| 5. பாத இரச்சு | - | பிரயாணத்தில் துன்பம் |

| | | |
|---|---|---|
| 1. மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் | - | சிரஸீ |
| 2. ரோகிணி, அத்தம், திருவோணம் | ஆரோ | கண்டம் |
| திருவாதிரை, சுவாதி, சதயம் | அவரோ | |
| 3. கார்த்திகை, உத்திரம், உத்தராடம் | ஆரோ | உதார |
| புனர்பூசம், விசாகம், பூசட்டாதி | அவரோ | |
| 4. பரணி, பூரம், பூராடம் | ஆரோ | ஊரு |
| பூசம், அனுஷம், உதிதரட்டாதி | அவரோ | |
| 5. அச்சுவினி, மகம், மூலம் | ஆரோ | பாதம் |
| ஆயில்யம், கேட்டை, ரேவதி | அவரோ | |

## 10. வேதைப் பொருத்தம் (துன்பம் இல்லை)

| | | |
|---|---|---|
| அச்சுவினிக்கு | கேட்டை | வேதையாகும் |
| பரணிக்கு | அனுஷம் | வேதையாகும் |
| கிருத்திகைக்கு | விசாகம் | வேதையாகும் |
| ரோகினிக்கு | சுவாதி | வேதையாகும் |
| திருவாதிரைக்கு | திருவோணம் | வேதையாகும் |
| புனர்பூசத்துக்கு | உத்தராடம் | வேதையாகும் |
| பூசத்துக்கு | பூராடம் | வேதையாகும் |
| ஆயில்யத்துக்கு | மூலம் | வேதையாகும் |
| மகத்துக்கு | ரேவதி | வேதையாகும் |
| பூரத்துக்கு | உத்தரட்டாதி | வேதையாகும் |
| உத்திரத்துக்கு | உத்திரட்டாதி | வேதையாகும் |
| அத்தத்துக்கு | சதயம் | வேதையாகும் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. நாடிப் பொருத்தம்

பெண் நாடியும், ஆண் நாடியும் வெவ்வேறாக இருக்க வேண்டும். சிலர் ஒரே நாடியாக, மத்திய நாடியாக வந்தால் புருஷன் மரணம், ஒரே நாடியாக, பார்சுவ நாடியாக வந்தால் மனைவி மரணம் என்று பஞ்சாங் கங்களில் போட்டிருப்பதை பார்த்து, ஆண், பெண் மரணமென்று தப்புக் கணக்கு போட்டு விடுகின்றார்கள். அதாவது, பிற்காலத்தில், ஆணுக்கு முன்பு பெண் மரணமா? பெண்ணுக்கு முன் ஆண் மரணமா? என்பதை அறியலாமே தவிர, ஒரே நாடியாக வந்தால், உடனே ஆண், பெண் மரணம் என்று பொருள் கொள்ளக் கூடாது.

சொல்லப் போனால், நாடிப் பொருத்தம் என்பது இன்றைக்கு மருத்துவர்கள் வெவ்வேறு இரத்தப் பிரிவாக இருந்தால் , பிரசவம் எளிது என்கிறார்கள், மேலும் குழந்தைகள் ஊனமில்லாமல், அறிவு விருத்தியாகக் பிறக்கும் என்கிறார்கள்.

அந்த அடிப்படையில் தான் நாடிப் பொருத்தத்தை அணுக வேண்டும்.

| பார்சுவநாடி (அ) வாத நாடி | மத்தியா நாடி (அ) பித்த நாடி | சமான நாடி (அ) சிலேத்தும நாடி |
|---|---|---|
| அச்சுவினி, திருவாதிரை புனர்பூசம், உத்தரம் அத்தம், கேட்டை மூலம், சதயம் பூரட்டாதி | பரணி, மிருகசீரிஷம் பூசம், பூரம், சித்திரை அனுஷம், பூராடம் அவிட்டம், உத்தரட்டாதி | கிருத்திகை, ரோகினி ஆயில்யம், மகம், சுவாதி விசாகம், உத்தராடம் திருவோணம், ரேரவதி |

## விதிவிலக்கு

ஆண், பெண் இருவருக்கும் சமமான நாடியாக (சிலேத்தும நாடியாக) இருந்தாலும் நாடிப் பொருத்தமுண்டு.

## விருசஷம்

ஆண், பெண் இருவரில் யாருக்காவது பால் மரமாக இருந்தால் புத்திர பாக்கியம் உண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| பால் உள்ளது | | பால் இல்லாதது | |
|---|---|---|---|
| கார்த்திகை | அத்தி | அச்சுவினி | எட்டி |
| ரோகிணி | நாவல் | பரணி | நெல்லி |
| பூசம் | அரசு | மிருகசீரிஷம் | கருங்காலி |
| ஆயில்யம் | புன்னை | திருவாதிரை | சங்கருங்காலி |
| மகம் | ஆல் | புனர்பூசம் | மூங்கில் |
| பூரம் | பலா | சித்திரை | வில்வம் |
| உத்தரம் | அலரி | சுவாதி | மருதம் |
| அத்தம் | வேலம் | விசாகம் | விளா |
| கேட்டை | பிராய் | அனுஷம் | மகிழ் |
| மூலம் | மாமர | அவிட்டம் | வன்னி |
| பூராடம் | வஞ்சி | சதயம் | கடம்பு |
| உத்தராடம் | பலா | உத்தரட்டாதி | வேப்பை |
| திருவோணம் | எருக்கு | | |
| பூரட்டாதி | தேமா | | |
| ரேவதி | இலுப்பை | | |

பால் மரம் இருவருக்கும் இல்லாவிட்டால் என்ன செய்வது? மகேந்திரம் இருந்தால் செய்யலாம். மகேந்திரமும் இல்லாவிட்டால், ஆண், பெண் ஜாதகத்தில், 5ம் இடம் 5க்குரியவர், குரு இவர்களை ஆராய்ந்து பின்பு சேர்க்கவும்.

**முக்கியமான பொருத்தங்கள்**

தினம், கணம், யோனி, ராசி, இரச்சு இருந்தால் விவாகம் செய்யலாம்

## ஒரே நட்சத்திரக்காரர்களுக்கு திருமணம் செய்யலாமா?

### கணவன் மனைவி ஒரே நட்சத்திரம் ஒற்றுமை

ரோகிணி, திருவாதிரை, மகம், அத்தம், விசாகம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி இவை ஒரே நட்சத்திரமானால் உத்தமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூடுமானால்

அச்சுவினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், பூரம், உத்தரம், சித்திரை, அனுஷம், பூராடம் இவை ஒரே நட்சத்திரமானால் மத்திமம் திருமணம் செய்யலாம்.

## கூடாதவை

பரணி, ஆயில்யம், சுவாதி, கேட்டை, மூலம், அவிட்டம், சதயம், பூரட்டாதி இவை ஒரே நட்சத்திரமானால் கண்டிப்பாக திருமணம் செய்யக்கூடாது.

இருவருக்கும் ஒரே நட்சத்திரம் செய்யக் கூடியதாக இருந்தாலும், பெண்ணின் நட்சத்திரத்தின் பாதம், ஆணுடைய நட்சத்திர பாதத்தை விட, அடுத்த பாதமாக இருப்பது சிறந்தது.

## கூடாத நட்சத்திரங்கள்

பரணி, கார்த்திகை, திருவாதிரை, ஆயில்யம், பூரம், பூராடம், பூரட்டாதி, கேட்டை, விசாகம், சித்திரை, சுவாதி, மகம் இந்த பன்னிரெண்டு நட்சத்திரங்கள் வரும் நாட்களில் பணம் கொடுத்தால் திரும்ப வராது. பிரயாணம் செய்தால் திரும்பி வரமாட்டார். வியாதியில் படுக்கையில் படுத்தால் தேறமாட்டார்கள்.

## செவ்வாய் தோஷம்

ஆண், பெண் ஜாதகங்களில், லக்கினத்துக்கு 2, 4, 7, 8, 12 மிடத்தில் செவ்வாய் இருந்தால் செவ்வாய் தோஷமாகும். ஒருவருக்கு தோஷமிருந்தால், மற்றவருக்கு மேற்கூறிய ஏதாவது ஒரு இடத்தில் தோஷமிருக்க வேண்டும். அதுதான் தோஷ சாம்யமெனப்படும். தோஷம் சமமாக உள்ளது எனப்படும் இவற்றிலும் சில விதிவிலக்குண்டு. அவையாவன சிம்மம், மகரம், கடகம், மேஷம், விருட்சிகம், தனுசு, மீனம் இந்த ஏழு லக்கினங்களில் பிறந்தவர்க்கு தோஷமில்லை.

மேஷம், விருட்சிக லக்கனத்துக்கு 2ல் செவ்வாய் இருந்தால் தோஷமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிஷபம், துலாம் லக்கனத்துக்கு 4ல் செவ்வாய் இருந்தால் தோஷமில்லை.

கன்னி, மகரம் லக்கினத்துக்கு 8ல் செவ்வாய் இருந்தால் தோஷமில்லை.

மிதுனம், கன்னி லக்கனத்துக்கு 12ல் செவ்வாய் இருந்தால் தோஷமில்லை.

செவ்வாயை, சனி, சூரியன், குரு, புதன், வளர்பிறை சந்திரன் பார்த்தால் தோஷமில்லை. குருவுடன் இணைந்தால் தோஷமில்லை.

சுக்கிரன் நீசமாகவோ, அஸ்தமனமாகவோ இருக்கும் காலங்களில் திருமணம் செய்யக் கூடாது.

## மூலம் நட்சத்திரம் பற்றிய விபரம் [பெண்ணின் நட்சத்திரம்]

| | | |
|---|---|---|
| மூலம் | 1, 2, 3ம் பாதமானால் | மாமனாருக்கு தோஷம் |
| கேட்டை | 2, 3, 4ம் பாதமானால் | கணவரின் மூத்த சகோதரிக்கு தோஷம் |
| விசாகம் | 4ம் பாதமானால் | கணவரின் இளைய சகோதரிக்கு தோஷம் |
| ஆயில்யம் | 2, 3, 4ம் பாதமானால் | மாமியாருக்கு தோஷம் |

(மூலம் நட்சத்திர தோஷமானது கண்டிப்பாக பெண்களின் ஜாதகத்துக்குத் தான் பொருந்தும் ஆண்களுக்கு இந்த தோஷம் கிடையாது. அதாவது ஆணுக்கு மூலம் நட்சத்திரம் 1, 2, 3ம் பாதமானாலும், மனைவியின் தகப்பனாரைப் பாதிக்காது.)

## தலையும் தலையும் செய்யலாமா?

தலைப்பிள்ளை ஆணும், பெண்ணும் ஆனி மாதத்திலோ, கேட்டை நட்சத்திரத்திலோ பிறந்திருந்தால், தலைப்பிள்ளை ஆணையும், தலைப்பிள்ளை பெண்ணுக்கும் திருமணம் செய்யக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமணம் செய்ய உகந்த நாட்கள்

முதலில் பிறந்த தலைப்பிள்ளை ஆணுக்கும், பெண்ணுக்கும், ஜன்மவாரம், ஜென்ம நட்சத்திரம், ஜென்ம மாதத்தில் திருமணம் கூடாது. மற்றவர்க்கு செய்யலாம்.

புதன், வியாழன், வெள்ளிக்கிழமை உகந்த நாட்கள்

அமாவாசை, அட்டமி, நவமி, பிரதமை, ஏகாதசியில் திருமணம் செய்யக் கூடாது.

அச்சுவினி, புனர்பூசம், பூசம், சித்திரை, அவிட்டம், சதயம், ரோகிணி, மிருகசீரிஷம், மகம், உத்தரம், அத்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்தராடம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரங்கள் சிறந்தது.

## திருமண பத்திரிக்கை அனுப்ப

பௌர்ணமி, துவிதியை, தசமி, திரயோதசி திதியிலும், புதன், வியாழன், வெள்ளிக்கிழமையிலும் சிறந்தது.

## கர்ப்பாதானம் உடலுறவுக்கு ஏற்ற காலம்

அட்டமி, பௌர்ணமி, அமாவாசை, பிரதமை, சதுர்த்தி, சஷ்டி, அஷ்டமி, ஏகாதசி, சதுர்த்தசி ஆகிய நாட்களில் உடலுறவு கூடாது.

ரோகிணி, அத்தம், அனுஷம், சுவாதி, ரேவதி, மூரம், உத்தமம், சதயம் நட்சத்திரங்கள் உடலுறவுக்கு ஆகாது.

மாதப்பிறப்பு, வருஷப்பிறப்பு, விரததினம், விரதத்துக்கு முந்திய நாள், பிந்தைய நாள், தீட்டு நாட்கள், ஞயிற்றுக்கிழமை, கிரகணம் அன்றைக்கும் உடலுறவு கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிறு நிரம்ப உண்ட உடனேயும், உணவு ஜீரணமாகாதிருக்கும் போதும் உடலுறவு கூடாது.

இரவில் முதல் இரண்டு ஜாமத்திலும், அதிகாலை நான்காம் ஜாமத்திலும் உடலுறவு கூடாது. (6.00 p.m. to 10.00 p.m) & (2.00 a.m to 4.00 a.m.) நள்ளிரவு 10.00 மணி முதல் 2.00 மணி வரையிலும் அதிகாலை 4.00 மணிமுதல் 6.00 மணி வரையிலும் உடலுறவுக்கு சிறந்தது.

## மாதவிடாய்

மனைவி மாதவிடாய் ஆன நாள் முதல் 3 நாட்கள் வரை கணவன் அவளைச் சேரக்கூடாது. நான்காவது நாளில் மனைவியுடன் சேரவேண்டு மென்றும், சேராவிட்டால், பசுவைக் கொன்ற பாவம் அவனை அணுகும். நோய்வாய்ப்பட்டிருப்பவனுக்கும், வெளியூர் சென்றிருப்பவனுக்கும் இந்த தோஷம் பாதிக்காது.

## ஆண்குழந்தை பிறக்க

பெண்ணுக்கு மாதவிடாய் ஆன நாள் முதல் 6, 8, 10, 12, 14, 16வது நாட்களில் கூடினால் ஆண் குழந்தை பிறக்கும்.

## பெண் குழந்தை பிறக்க

மாதவிலக்கான நாள் முதல் 5, 7, 9, 11, 13, 15 ஆகிய ஒற்றை நாட்களில் சேர்ந்தால் பெண் குழந்தை பிறக்கும்.

## நல்ல பிள்ளையைப் பெற

வேத, சாஸ்திரங்களில் கூறப்பட்ட நல்ல நேரத்தில், புண்ணிய தீர்த்தங்களாலும், கோமயம், வாசனைத் திரவியம், சந்தன, புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட சுத்தமான இடத்தில், மனமகிழ்ச்சியோடு, 108 முறை சுதர்ஸண மந்திரத்தையும், பகவானை தியானித்து கணவனும், மனைவியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸம்போகம் செய்தால், உத்தமமான ஆண் குழந்தையை பெறலாம். மாதம் ஒன்றுக்கு இரண்டு முறை மனைவியுடன் சேர்தல் உடலுக்கு நல்லது.

## மாதவிடாய் காலம்

ஒரு பெண்ணுக்கு மாதம் ஒருமுறை மாதவிடாய் காலமாகும் முதல் மூன்று நாள்களுக்கும் தோஷமுண்டு, நான்காவது நாளில் அவள் புனிதம் பெறுகிறாள். ஐந்தாம் நாள் முழு சுதந்திரம் அடைகிறாள்.

ஒரு மாதத்தில் மாதவிலக்கு ஏற்பட்ட பதினைந்து நாட்களுக்குள் மீண்டும் ஒரு மாதவிலக்கு ஏற்பட்டால் தீட்டு கிடையாது. ஆனால் 25 நாட்களுக்குப் பின்னர் 21 நாட்களுக்குள் மீண்டும் மாதவிடாய் ஏற்பட்டால் 2 நாட்களுக்கு மட்டுமே தீட்டு உண்டு.

## சீமந்தம்

வியாழன், வெள்ளி, புதன், திங்கள் சிறந்தது, செவ்வாய், சனி, ஞாயிறு ஆகாது. அமவாசை, துவாதசி, சதுர்த்தசி, அஷ்டமி, நவமி ஆகாது வளர்பிறைச் சந்திரனாகவோ, குருவோடு சேர்ந்து, பலமாக இருந்தால், பௌர்ணமி, சதுர்த்தி, சதுர்த்தசியில் செய்யலாம்.

## மனைவி கர்ப்பவதியாக இருக்கும் போது கவனிக்க வேண்டியவை

ஒருவருடைய மனைவி கர்ப்பமாயிருக்கும் போது, தனது மகனுக்கு மொட்டை போடுவதோ, தனது முடியை வெட்டுவதோ, வீடு கட்ட ஆரம்பிப்பதோ, அஸ்திவாரம் தோண்டுவதோ, தூண் எழுப்புவதோ கூடாது. நகம் வெட்டுதல், மலை ஏறுதல், தூர தேசம் போகுதல் கூடாது, குழந்தை பிறந்த 10வது நாளில் தனது முடியை வெட்டிக் கொள்ளலாம். கர்ப்பிணிப் பெண் கடலில் குளிக்கக் கூடாது. கணவனும் கடலில் குளித்தல், சிரார்த்த வீட்டில் சாப்பிடுதல், தனது வீட்டில் திருமணம் செய்தல் இவை கூடாது.

## குழந்தை வேண்டி கடலில் நீராட

செவ்வாய், வெள்ளி, சனிக்கிழமை கடலில் நீராடக் கூடாது. அமாவாசை, பௌர்ணமி, மாதப்பிறப்பு கூடாது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் மனைவி இறந்தால் மறுமணம்

ஒருவருடைய மனைவி இறந்தால். அவள் இறந்து, ஒற்றைப்படை வருஷத்தில் மறுமணம் புரியலாம். இரட்டைப்படை ஆண்டில் செய்யக்கூடாது.

## ஒரே குடும்பத்துக்கு இரு பெண்களை கொடுக்கலாமா?

ஒருவன் தன்னுடைய பெண் குழந்தைகளை ஒரே குடும்பத்தில் பிறந்த பையன்களுக்கு திருமணம் செய்து கொடுக்கக் கூடாது. ஒரு வேளை ஒரு பெண், தன்னுடைய கவனை விட்டு அடுத்தவனுடன் ஓடிப் போய்விட்டால், அப்போதைக்கு, தனது மனைவியின் உடன்பிறந்த இளைய சகோதரியை திருமணம் செய்து கொள்ளலாம்.

## கண்டாந்த நட்சத்திரங்கள்

மூலம் 1ம் பாதம்
கேட்டை 4ம் பாதம்

ஆயில்யம் 4ம் பாதத்தில் பிறந்தால், பிறந்த குழந்தையை தகப்பனார் எட்டு வருஷங்கள் கழித்துப் பார்க்க வேண்டும்.

குழந்தை பிறந்த நட்சத்திரமானது,

| | | |
|---|---|---|
| உத்தரம் என்றால் | - | 2 மாதங்களும் |
| பூசம் என்றால் | - | 3 மாதங்களும் |
| பூராடம் | - | 8 மாதங்களும் |
| சித்திரை | - | 6 மாதங்களும் |
| ஆயில்யம் | - | 9 மாதங்களும் |
| மூலம் | - | 8 மாதங்களும் |
| கேட்டை | - | 15 நாட்களும் பிறந்த |

குழந்தையை தகப்பனார் பார்க்கக் கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு சுபகாரியம் நடந்த பின்பு எத்தனை நாள்கழித்து இன்னொரு சுபகரியம் செய்யலாம்?**

பொதுவாக, ஒரு வீட்டில் ஒருவனுக்கு உபநயனம் முடிந்து 6 மாதத்துக்குள் இன்னொருவர் உபநயனம் செய்யக்கூடாது. வீட்டு கூரை வேய்வதோ, முடிவெட்டிக் கொள்வதோ கூடாது. இறந்தவர்க ளுக்கு பிண்டம் போடலாம். ஆனால் கயா சென்று கயாசிரார்த்தம் செய்யக் கூடாது.

## விவாக விஷயம்

ஒரே முகூர்த்தத்தில் ஒரு தாய்வயிற்றில் பிறந்த 2 பெண்களுக்கு விவாகம் செய்யக்கூடாது. செய்ய வேண்டிய அவசியம் நேரிட்டால், ஆற்றுக்கு இரண்டு கரைகளில் வைத்து இருவருக்கும் விவாகம் செய்யலாம்.

தம்பி, தமையனுக்கு விவாகம் செய்து, ஆறு மாதம் வரை, தங்கை, தமக்கைகளுக்கு விவாகம் செய்யக்கூடாது. பெண்ணுக்கு முந்தி விவாகம் செய்து, பிறகு பிள்ளைக்கு செய்யலாம்.

ஒரு முகூர்த்தத்தில் 2 பெண்களுக்கு விவாகம் செய்யக் கூடாது. 90 நாளைக்கு பிறகு செய்யலாம். அவசியம் 90 நாளைக்கு முன்பு செய்ய வேண்டி வந்தால், 2 வீடுகளில் 2 உபாத்தியாரை கொண்டு தனித்தனியே விவாகம் செய்யலாம்.

பங்குனியில் பையனுக்கு விவாகம் செய்து, சித்திரையில் பெண்ணுக்கு செய்யக்கூடாது. 90 நாளைக்கு மேல் செய்யலாம்.

## குழந்தைக்கு பெயர் சூட்டல்

குழந்தை பிறந்த 10வது அல்லது 12வது நாளில் செய்ய வேண்டும்.

| | | |
|---|---|---|
| கிழமை | : | திங்கள், புதன், வியாழன், வெள்ளி |
| திதிகள் | : | துதியை, திருதியை, பஞ்சமி, சசப்தம், தசமி, ஏகாதசி, திரியோதசி. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலூட்டல்

31ம், 32ம் நாளில், நல்ல வேலையில் சங்கினால் பாலூட்ட உத்தமம்.

## அன்னப்பிராசனம்

குழந்தை பிறந்து 6, 8, 10வது, அல்லது ஆண்டு நிறைவில் 12வது மாதத்தில் அன்னம் ஊட்ட வேண்டும். இது ஆண் குழந்தைக்குரியது. பெண் குழந்தையானால், 7, 9, 11 வது மாதத்தில் ஊட்டலாம்.

| | |
|---|---|
| கிழமை : | திங்கள், புதன், வியாழன், வெள்ளி |
| திதிகள் : | துவி, திருதி, பஞ், சப், தசமி, ஏகா, திரயோ |

## முடி எடுத்தல்

3, 5 அல்லது 7வது ஆண்டில் செய்யலாம். உத்தராயணத்தில் செய்வது உத்தமம். தக்ஷிணாயணம் சிறப்பில்லை. தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி மாதம் நல்லது. திங்கள், புதன், வியாழன், வெள்ளிக்கிழமை நல்லது. குழந்தையின் தாயார் கர்ப்பிணியானால் 5 வயது வரையில் கூடாது.

## காது குத்தல்

12, 16ம் நாளன்று அல்லது 6, 7, 8வது மாதத்தில் காது குத்துதல் வேண்டும்.

| | |
|---|---|
| கிழமை : | திங்கள், புதன், வியாழன், வெள்ளி நல்லது |
| திதிகள் : | துவி, திரு, பஞ்ச, சஷ்டி, சப்த, தசமி, ஏகா, துவா, திரயோதசி |

இரவு நேரமும், 2 திதிகள் கூடிய நாளிலும், 2 நட்சத்திரங்கள் கூடிய நாளிலும் கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபநயனம்

சித்திரை, வைகாசி, ஆனி, மாசி, பங்குனி நல்லது
கிழமை - புதன், வியாழன், வெள்ளி, நல்லது
திதிகள் - துவி, திரு, பஞ், சஷ்டி, ஏக, துவா, திரயோ

## கிணறு வெட்ட

ஐப்பசி 10க்கு மேல் 20க்குள் நல்லது.
திங்கள், புதன், வியாழன், வெள்ளி, நல்லது.

## புதுக் கணக்கு போட

| | | |
|---|---|---|
| கிழமை | : | திங்கள், புதன், வியாழன் நல்லது |
| திதிகள் | : | துவி, திரு, பஞ் , சஷ்டி, சப், தசமி, ஏகாதசி, துலா, திரயோ |
| நட்சத்திரம் | : | அச்சு, ரோகி, மிருக, திருவா, புனர், பூசம் உத்தரம் |
| லக்னம் | : | ரிஷ, மிதுனம், சிம்மம், துலா, மீனம் |
| சுத்தம் | : | 8ம் மிடம் |

## ஆடு, மாடு, வாங்க

| | | |
|---|---|---|
| கிழமை | - | ஞாயிறு, திங்கள், வியாழன் |
| திதிகள் | - | துவிதி, திருதி, பஞ், சப், தச, துலா, திர |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூணூல் அணிய

யஜீர் வேதத்தை பின்பற்றுவோர் - ஆவணியில் பௌர்ணமியிலும்,
ரிக் வேதத்தை பின்பற்றுவேர் - ஆவணியில் திருவோணம் நட்சத்திரத்திலும்,

சாமவேதத்தை பின்பற்றுவோர் - விநாயக சதுர்த்தியில் அஸ்தம் நட்சத்திரத்திலும் செய்யலாம்.

## தத்து எடுக்க

சகோதரன் மகன் மற்றும் இது போன்ற உறவு முறையிலும் வயது குறைந்த வனையும் தத்து எடுக்க வேண்டும். உறவு முறையில், மாமா, பெரியப்பா, சித்தப்பா, போன்ற மூத்த உறவு முறையில் உள்ளவனை தத்தெடுக்க கூடாது.

## மருந்து உண்ண

செவ்வாய், சனிக்கிழமை ஆகாது.

## நோய் தீர்ந்து குளிக்க

பகலில் - ஞாயிறு, செவ்வாய், புதன், வியாழன், சனி
திதி - சதுர், அஷ்ட, நவ, தசமி, சதுர்த்தசி

## புத்தாடை அணிய

ஞாயிறு, வியாழன், வெள்ளி நல்லது.

## எண்ணெய் தேய்த்து முழுகுதல்

ஆண்களுக்கு - புதன், சனிக்கிழமை நல்லது
பெண்களுக்கு - செவ்வாய், வெள்ளி நல்லது

அஷ்டமி, சதுர்த்தி, அமாவாசை, பௌர்ணமி, மாதப்பிறப்பு முதலிய நாட்களிலும், ஜென்ம நட்சத்திரங்களிலும், இரவிலும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையில் தேய்த்த எண்ணெயை வழித்து, உடலில் மற்ற பாகங்களில் தேய்க்கக் கூடாது.

## கடன் தீர

அனுஷம், அச்சுவினி நட்சத்திரத்திலும், லக்னத்தில் சந்திரன் இருக்கும் நேரத்திலும், செவ்வாய், ஞாயிறு, சனிக்கிழமையில் நவமி, சதுர்த்தி, சதுர்த்தசி திதிகளில் ஏதாவது உள்ள நாளில், குளிகண் உதயமாகும் நேரத்திலும், சனி பிரதோஷ காலத்திலும், சரலக்னத்திலோ, சூரிய, சந்திர கிரகணம் ஏற்பட்டு, கிரகணம் விலகும் சமயத்திலோ, வாங்கிய கடனில் சிறு தொகை யைக் கொடுத்தாலும், கடன் தொகை எவ்வளவு அதிகமாக இருந்தாலும், முழுக்கடனும் தீர்ந்துவிடும்.

## புது ஆபரணம் அணிய

கிழமை : திங்கள், புதன், வியாழன், வெள்ளி உத்தமம்
திதி : பிரத, பௌர், சஷ்டி, ஏகா, பஞ்ச, தசமி நல்லது

ரோகிணியுடன் கூடிய சனிக்கிழமையில், அமிர்த யோகத்தில் தங்க நகை செய்து அன்றே அதை வாங்கி ஒருவன் அணிந்தால் பெரும் செல்வமும், சுகமும் கிடைக்கப் பெறுவான்.

## வீடு கட்டுதல்

தை, மாசி, சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் வீடு கட்டலாம்.

ஆனி, புரட்டாதி, மார்கழி, பங்குனி மாதத்தில் வீடு கட்டுவதும், கிருஹ ப்ரவேசம் செய்வதும் கூடாது.

## எந்தெந்த ராசிக்காரர்கள் எந்தெந்த திசையில் வீடு கட்டலாம்?

## ஜென்ம ராசி

| | |
|---|---|
| மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், | வடக்கு |
| சிம்மம், கன்னி, துலாம் | கிழக்கு, தெற்கு |
| விருச்சிகம், தனுசு, மகரம் | தெற்கு |
| ரிஷபம், கும்பம், மீனம், மேஷம் | தெற்கு |
| கும்பம் | மேற்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாஸ்து புருஷன்

வாஸ்து புருஷன் இடது கையைக் கீழேயும், வலது கையை மேலாகவும் வைத்துப் படுத்திருப்பார். ஒவ்வொரு மாதமும் விழிப்பது இல்லை. குறிப்பிட்ட எட்டு மாதங்களில் விழித்திருப்பார். அந்த நாளிலும் 3/2 நாழிகைதான் (1 1/2 மணி) விழித்திருப்பார். அதில் 2 1/4 நாழிகைக்கு மேல் 3 3/4 நாழிகையில் தான் (36 நிமிடம்) வாஸ்து செய்யலாம்.

## வாஸ்து புருஷன் செய்யக்கூடிய காரியங்கள்

1. பல்துலக்குகின்றார்
2. நீராட்டுகிறார்
3. பூஜை செய்கிறார்
4. உணவு உண்கிறார்
5. தாம்பூலம் தரிக்கிறார்

இதில் கடைசி 36 நிமிடங்களில் வாஸ்து செய்தால் வீடு நிலைத்து நிற்கும்.

## வாஸ்து நேரம்

| | |
|---|---|
| சித்திரை 10ந் தேதி | - காலை மணி 8.54 முதல் 9.30 வரை |
| வைகாசி 21ந் தேதி | - காலை மணி 10.06 முதல் 10.42 வரை |
| ஆடி 11ந் தேதி | - காலை மணி 7.42 முதல் 8.18 வரை |
| ஆவணி 6ந் தேதி | - பகல் மணி 3.18 முதல் 3.54 வரை |
| ஐப்பசி 11ந் தேதி | - காலை மணி 7.42 முதலி 8.18 வரை |
| கார்த்திகை 8ந் தேதி | - காலை மணி 10.54 முதல் 11.31 வரை |
| தை 12ந் தேதி | - காலை மணி 10.06 முதல் 10.42 வரை |
| மாசி 22ந் தேதி | - காலை மணி 10.06 முதல் 10.42 வரை |

| | |
|---|---|
| 1. சித்திரை, வைகாசி, பங்குனி | வடக்கு வாசல் நல்லது |
| 2. ஆடி, ஆவணி | கிழக்கு வாசல் நல்லது |
| 3. ஐப்பசி, கார்த்திகை | தெற்கு வாசல் நல்லது |
| 4. தை, மாசி | மேற்கு வாசல் நல்லது |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிருகப்பிரவேசம் செய்ய

தை, சித்திரை, வைகாசி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை நல்லது. ஆனி, ஆடி, புரட்டாதி, மாசி, மார்கழி, பங்குனி ஆகாது. திங்கள், புதன், வியாழன், வெள்ளிக்கிழமை நல்லது. கதவு போடாமலும், கூரை வேயாமலும், தரை சுவர் பூசாமலும், வேள்வி, பிராமண போஜனம் செய்யாமலும் கிரகப்பிரவேசம் செய்யக்கூடாது.

## வாஸ்து சாஸ்திரம்

கீழ்வரும் நீள அகலமுள்ளபடிதான் அறைகளைக் கட்ட வேண்டும்.
*6, 8, 10, 11, 16, 17, 20, 21, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 35, 36, 37, 39, 41, 42, 43, 45, 52, 56, 60, 63, 64, 66, 68, 70, 71, 72, 73, 77, 79, 80, 84, 85, 87, 88, 89, 90, 91, 92,95, 97, 99, 100, 101, 102, 106, 107, 108, 109, 110, 111, 112, 113, 115, 116, 117, 119, 120.*

1. வீட்டில் உள்ள அறைகளின் எண்ணிக்கை ஒற்றைப் படையில் அமைக்க வேண்டும்.

2. வீட்டுக்கு காலியிடம் அமைக்க வேண்டுமென்றால், மனைக்கு வடக்கிலும், கிழக்கிலும் அமைய வேண்டும்.

3. கழிவு நீரை வீட்டிற்கு கிழக்கு அல்லது வடக்கில் வெளியேறுமாறு அமைக்க வேண்டும்.

4. வாசல்படிகள் ஒற்றைப்படையில் அமைய வேண்டும். மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியோ, தெற்கிலிருந்து வடக்கு நோக்கியே ஏறுமாறு அமைய வேண்டும்.

5. மாடியை வடக்கிலோ, கிழக்கிலோ கட்டவும். மாடிப்படி வடக்கு நோக்கி ஏறும்படியோ, கிழக்கு நோக்கி ஏறுமாறோ அமைக்க வேண்டும்.

6. கிணறு, போரிங், நீர்த் தொட்டி முதலியவற்றை கிழக்கிலோ, மேற்கிலோ அமைக்கவும்.

7. அலுவலக அறை வடக்கிலும், சமையலறை அதன் கிழக்கில் கிழக்கு நோக்கி சமையல் செய்யுமாறும், உணவு உண்ணும் அறை தெற்கிலும், படுக்கையறை மேற்கிலும், பூஜையறை வடகிழக்கு திசையிலும், குளியலறை கிழக்கிலும் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மலசலகூடம் வடக்கு பார்த்து அமரும்படி அமைக்க வேண்டும். ஈசானா மூலையில் மலசலம் அமையக்கூடாது.

9. மாணவர்கள் கிழக்கு நோக்கி உட்கார்ந்து படித்தால் கல்வி சிறக்கும்.

10. வியாபார ஸ்தலத்தில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி அமரவும்.

11. இரும்பு பெட்டி, பீரோ முதலியவற்றை தென்மேற்கு மூலையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி அமைக்க வேண்டும். செல்வம் நிலைத்திருக்கும்.

12. வியாதியஸ்தர்களை வீட்டின் தென்மேற்கு அறையில் தெற்கில் தலை வைத்துப் படுக்க வைத்தால் நோய் குணமாகும்.

13. Over-tankஐ வீட்டின் கன்னி மூலையில் மாடியில் அமைக்க வேண்டும்.

14. வீட்டில் பாகப்பிரிவினை செய்தால், மூத்தவர்களுக்கு மேற்கு அல்லது தெற்குப் பகுதியை கொடுக்க வேண்டும். இளையவர்களுக்கு கிழக்கு அல்லது வடக்கு பகுதியை கொடுக்கவும்.

15. வீட்டின் அருகில் மாமரம், வாழை மரம், வேப்பமரம், எலுமிச்சை, மல்லிகைச் செடியை வளர்க்கலாம்.

16. ஆலமரம், பனைமரம், எருக்கு, எட்டிமரம், வில்வமரம், முருங்கை மரம், பப்பாளி, அகத்திச் செடி, இலுப்பை மரம் வளர்க்கக்கூடாது.

17. வெளியில் இருக்கும் ரோடு மட்டத்தை விட வீட்டுத் தளம் உயரமாக இருக்க வேண்டும்.

18. திருமணமாகாத பெண்களை வீட்டின் வடமேற்கு அறையில் படுக்கு மாறு செய்தால் விரைவில் திருமணம் கூடி வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதல்

புண்ணிய நதிகளில் முதலில் காலை வைக்கக்கூடாது. சிறிய நீரை தலையில் தெளித்துவிட்டு, பிறகு கை, கால், அலம்ப வேண்டும். துணியில்லாமல் குளிக்கக்கூடாது. நீரில் எச்சில் துப்புவதோ, மலசலம் கழித்தலோ கூடாது. மலம் கழித்த பின்பு கடலில் கழுவுதல் கூடாது. ஒரு நெம்பில் நீர் மோந்து சுத்தம் செய்ய வேண்டும்.

## கிரகணங்கள்

சூரிய, சந்திரன் கிரகணம் ஆரம்பிக்கும் முன்பு தயாரித்த உணவு மிச்சமிருந்தால் வெளியே கொட்டிவிட வேண்டும். தயிர், ஊறுகாய் நிறைய மீந்திருக்கும் என்பதால் தயிர், ஊறுகாயில் தர்ப்பையை துண்டித்து போடவும். கிரகணம் விட்ட பின்பு ஸ்நானம் செய்து வீட்டைக் கழுவி பூஜை செய்ய வேண்டும். மாதவிலக்கான பெண்கள், பிறர் கொண்டு வரும் ஜலத்தால் ஸ்நானம் செய்யக் கூடாது.

கர்ப்பிணிப் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வரக்கூடாது. கிரகணத்துக்கு முன்பு 3 நாட்களும், பின்பு 3 நாட்களும் புதிய காரியம் செய்வதோ, சுபகாரியம் செய்வதோ கூடாது.

கிரகண காலத்தில் குரு உபதேசம் பெறுவது சிறந்தது. கிரகணம் நடக்கும் நேரத்தில் சாப்பிடக்கூடாது, படுக்கக் கூடாது, உடலுறவு கூடாது. தர்ப்பணம், ஜபம் செய்வது சிறந்தது. சமுத்திரத்தில் ஸ்நானம் செய்யலாம்.

## வணங்கும் விதி

பிரம்மா, விஷ்ணு, சிவன் இம்மூவரை வணங்கும் போது சிரசின் மேல் 12 அங்குலம் உயர்த்தி கைகூப்பி வணங்க வேண்டும். மற்ற தெய்வங்களை சிரசின் மேல் கைகூப்பி வணங்கினால் போதும். குருவை வணங்கும் போது நெற்றியில் கைகூப்பி வணங்க வேண்டும். அரசரையும், தகப்பனாரையும் வணங்கும் போது வாய்க்கு நேராக கைகூப்பி வணங்க வேண்டும். பிராமணரை வணங்கும் போது மார்பில் கைகூப்பி வணங்க வேண்டும். தன்னுடைய தாயை வணங்கும் போது வயிற்றில் கைவைத்து வணங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதா, பிதா, குரு, தெய்வங்களை வணங்கும் போது ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும். பூமியில் நெடுஞ்சாண் கிடையாக வணங்க வேண்டும். ஆனால் பெண்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் மற்றும் கணவனை வணங்கும் போது பஞ்சாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும். பெண்களுடைய ஸ்தனங்கள் பூமியில் படக்கூடாது.

## சிலை வழிபாட்டு முறை

மாரியம்மன் கோவிலில் மாரியம்மனின் தலையை மட்டுமே வைத்து வணங்குதல் வேண்டும். மாரியம்மனை முழு உருவமாக அமைப்பது முறையல்ல. (மாரியம்மன் பரசுராமரின் தாயாரான ரேணுகாதேவியின் மறு அவதாரமாகும்.) வீட்டில் பூஜையறையில் 2 சிவலிங்கங்களையோ, 2 விஷ்ணு சக்கரங்களையோ, 2 சூரஜயன் படங்களையோ, 2 சாளிக்கிராம சிலையோ, மூன்று சக்தி சூலாயுதத்தையோ வைத்து வணங்கக் கூடாது. செல்வம் சேராது.

## உணவு அருந்த

திங்கள், புதன், வெள்ளி, சனி ஆகிய நாட்களில் மட்டும் விருந்து கொடுக்கவோ, விருந்து சாப்பிடுவதோ நல்லது. வடக்கு நோக்கி சாப்பிடக் கூடாது.கிழக்கு நோக்கி அமர்ந்து சாப்பிட்டால் ஆயுளும், தெற்கு நோக்கிச் சாப்பிட்டால் புகழும், மேற்கு நோக்கிச் சாப்பிட்டால் செல்வமும் பெருகும்.

## விதவைகள்

அமாவாசை, பௌர்ணமி, மாதப்பிறப்பு அன்று இரவு உண்ணக் கூடாது. பழங்கள் சாப்பிடலாம்.

திருமணம் முடிந்ததும் மணமகன், மணமகளோடு அமர்ந்து விருந்து சாப்பிட வேண்டும். தனியே சாப்பிடக் கூடாது.

## விநாயக சதுர்த்தி

ஒவ்வொரு வருடமும் ஆவணி மாதத்தில் வளர்பிறையில் சதுர்த்தி திதியன்று விநாயக சதுர்த்தி வரும். அன்று விரதமிருந்து பிள்ளையாரை சேவிப்பது உத்தமம்.

அன்று இரவு நிலாவை பார்த்துவிடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கடஹர சதுர்த்தி

ஒவ்வொரு மாதமும் தேய்பிறையில் சதுர்த்தி திதியன்று வரும். அன்று உபவாசமிருந்து மாலையில் விரதத்தை முடித்து விட்டு இரவில் சந்திரனை பார்த்து விட்டு உறங்க வேண்டும்.

ஆனால் வளர்பிறை சதுர்த்தியில் சந்திரனை, பார்க்கக்கூடாது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே வளர்பிறை சதுர்த்தியன்று நிலவை பார்த்துவிட்டு மிகவும் பழிச்சொல்லுக்கு ஆளானார். செவ்வாய் தோஷமிருந்தால் சங்கடஹர விரத மிருப்பது செவ்வாய் தோஷம் நீங்க வழிவகுக்கும்.

## சிவராத்திரி விரதம்

மாசி மாதத்தில் தேய்பிறையில் வருகின்ற சதுர்த்திசி திதியன்று மகா சிவராத்திர் ஆகும். இரவு 4 ஜாம பூஜை செய்து, உறங்காமல் சிவ நாமம் உச்சரித்துக் கொண்டு விடியும் முன்பும் ஸ்நானம் செய்து விரதம் முடிக்க வேண்டும்.

நள்ளிரவு *11.36* முதல் *12.24* வரை மகாநிசி யெனப்படும். குறைந்த பட்சம் இந்த நேரத்திலாவது சிவபூஜை செய்ய வேண்டும்.

## பிரதோஷ வேளை

அமாவாசை கழித்து அல்லது பௌர்ணமி கழித்து 13வது திதியில் திரயோதசியில் மாலை சூரிய அஸ்தமனத்துக்கு முன்பு 1 1/2 மணி நேரமும், பின்பு 1 1/2 மணி நேரமும் பிரதோஷ வேளையாகும். இக்காலத்தில் சிவ பெருமானை நந்தியின் கொம்புகளிடையே தரிசனம் செய்து வணங்குதல் வேண்டும்

## ஏகாதசி விரதம்

ஒவ்வொரு மாதமும் ஏகாதசியன்று விரதமிருந்து விஷ்ணுவை வழிபடுவது உயர்ந்தது.

ஒவ்வொரு மாதமும் முடியாவிட்டால் வியாசரால் பீமனுக்கு அருளப்பெற்ற தினமான தை மாதம் வளர்பிறையில் பீம ஏகாதசியன்று விரதமிருக்க உத்தமம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதசியன்று பகல் தூக்கம், இரு வேளை சாப்பிடுதல், உடல் உறவு ஆகாது. எனவே தான் ஏகாதசியன்று திருமணத்தை தவிர்க்கச் சொல்கிறார்கள். ஒரு துளசி இலை சாப்பிட உத்தமம்.

ஏகாதசியன்று விரதமிருந்து துவாதசியில் உணவருந்த உத்தமம். நெல்லிக்காய், அகத்திக்கீரை, சுண்டைக்காய் உணவில் சேர்ப்பது நல்லது.

## நதி நீராட

ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் நதிகளில் நீராடக் கூடாது. தெரியாமல் நீராடிவிட்டால் அந்த நதி கடலில் கடக்கும் இடத்தில் நீராடினால் பாவம் நீங்கும்.

(இது சரியில்லை. ஏனென்றால் ஆடி 18ம் பெருக்கன்று பெண்கள் காவிரியாற்றில் நீராடுவது தமிழகத்தில் காலம் காலமாக இருந்து வருகின்றது.)

## ஒரு மனிதனுக்கு உயிர் பிரியும் தருவாயில் செய்ய வேண்டியது

இறக்கும் தருணம் வந்துவிட்டால் புண்ணிய தீர்த்தத்தில் நீராடி, பிராமணருக்கு தானம் செய்ய வேண்டும். மரணப்படுக்கையில் ஒருவர் இருந்தால் அவருக்குப் பதிலாக அவருடைய பிள்ளையோ, அவருக்கு கர்மஞ் செய்பவர்களோ இதைச் செய்யலாம்.

ஒருவருக்கு உயிர் பிரியுந் தருவாயில் அவனை கட்டிலில் படுக்க விடக் கூடாது. உள்வீட்டிலும் படுக்க வைக்கக் கூடாது. தரையில் தர்ப்பை யைப் போட்டு அதன்மீது அவனைப் படுக்க வைக்க வேண்டும். கட்டிலில் படுத்துக் கொண்டே உயிரை விட்டதால் பரிக்ஷிது ராஜா நரகத்தை அடைந் தார்.

ஒரு மனிதன் பிறக்கும் போதும், இறக்கும் போதும் பூமாதேவியின் மடியிலேயே நடக்க வேண்டும். தற்காலத்தில் வசதிக்காகவும் எளிதாக பிரசவம் பார்ப்பதற்காகவும் பெரும்பாலும் பிரசவ விடுதிகளில் கட்டிலில்தான் பிரசவங்கள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்கப் போகும் மனிதனுக்கு துளசி, சாளிக்கிராமம் போன்ற உத்தம பொருட்களை கண்ணில் காட்டவும் ராம, ராம என்ற மந்திரத்தையோ, சிவன் நாமத்தையோ அவரது வலது காதில் ஓத வேண்டும்.

புண்ணிய சாலிகளுக்கு, முகத்திலுள்ள துவாரங்கள் மூலமாகவும், ஞானிகளுக்கு சிரசு வெடித்தும், பாவிகளுக்கு மலசல துவாரம் வழியாகவும் உயிர் பிரியும்.

### உயிர் பிரிந்த பின்பு செய்ய வேண்டியது

பிராணன் போன பின்பு தலையை தெற்குப்புறமாக வைத்துப் படுக்க வேண்டும். பூணூலை இடமாகப் போட்டுக் கொள்ள வேண்டும்.

பெண்கள் தலையை விரித்துக் கொண்டு தெற்கு நோக்கி நமஸ்காரம் செய்ய வேண்டும்.

ஒருவன் இறந்தவுடன் ஒரு யாமம் (3 மணி நேரம்) கழிந்த பின்பு உடலை அப்புறப்படுத்த வேண்டும். இரவு 9 நாழிகைக்கு மேல் தகனம் செய்யக் கூடாது.

### இறந்தவனுடைய கதி

மனித லோகத்துக்கும், எமபுரிக்கும் இடையில் எண்பத்தாறாயிரம் காதம் தூரமுள்ளது. எமதூதர்கள் மூவர் விதிமுடிந்த ஜீவனைப் பாசத்தால் கட்டியிழுத்து, காற்றின் எருவான் தேகத்தில் அடைத்துக் கொண்டு, யமலோ கத்துக்கு சென்று, யமதர்ம ராஜனின் முன்பு நிறுத்துவார்கள். யமதர்மராஜனும், அக்கிங்கரர்களிடம் நன்று, நன்று இவனை மீண்டும் கொண்டு போய் அவன் வீட்டில் விட்டுவிடுங்கள். 12வது நாள் கழித்த பிறகு, மீண்டும், நம் முன்பு நிறுத்துங்கள் என்று கட்டளையிடுவான். மீண்டும், அந்த ஜீவனை ஒரு நொடியில் அவன் வீட்டின் முன்பு விட்டுவிடுவார்கள். எனவே இறந்தவனை உடனே புதைக்கவோ, எரிக்கவோ கூடாது.

மரித்த ஜீவன், மூன்று நாள் நீரிலும், மூன்று நாட்கள் அக்னியிலும், 3 நாட்கள் ஆகாயத்திலும், ஒரு நாள் தனது வீட்டிலும் ஆவி உருவில் வசிப்பான். முதல் நாள், 3வது, 5வது, 7வது, 9வது, 11வது நாளில் நவசிரார்த்தம் பண்ண வேண்டும். 11வது நாளன்று பலகாரத்தோடு சோறு சமைத்து நாற்சந்தியில் கொட்டிவிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவியில் மூத்தவனே கொள்ளி வைக்க வேண்டும். அவன் இல்லாவிட்டால், இருப்பவர்களும் மூத்தவன் கர்மஞ் செய்ய வேண்டும். எல்லா பிரேத காரியங்களிலும் ஈரத்துணியுடன் இருக்க வேண்டும். கொள்ளி வைப்பவர் அக்கினியை சட்டியில் எடுத்துக் கொண்டுஈ முதலில் புறப்பட வேண்டும். அக்கினிக்கு பின் பிணத்தை எடுத்துச் செல்ல வேண்டும். மற்றவர்கள் பிரேதத்தை தொடர்ந்து வரவேண்டும்.

பிள்ளைக்கு 2 வயதிற்குள் கர்மஞ் செய்ய நேரிட்டால், பக்கத்திலிருக்கும் வேறொருவர் செய்யலாம். 3 வயது முதல் 7 வயது வரை, கொள்ளியை பையனே வைக்கச் சொல்லி, மற்றக் காரியங்களை பிறர் செய்யலாம். நெருங்கிய உறவினர் அல்லாதோர் பாடையை சுமக்கக் கூடாது.

பிரேதத்தை வீட்டிலிருந்து பாடையை சுமக்கக் கூடாது. மனைவி முதலிய பெண்கள் விரித்த தலையுடன் புழுதியை தலையிலும், தோள்களிலும் பூசிக் கொள்ள வேண்டும்.

தகனம் செய்யுமிடத்தில் பிரேதத்தை தெற்குப்புறம் தலையிருக்கும்படி வைக்க வேண்டும். பிறகு கொள்ளி வைப்பவர், சிதையின் கிழக்குப்புறத்தில் மேற்கு நோக்கி நின்று கொண்டு, பிரேதத்தின் மார்பில் அக்கினியை இட வேண்டும்.

பிறகு சிதையின் வடக்குப்புறம் தெற்கு நோக்கி நின்று கொண்டு, அக்கினியைத் தொழுது, மூன்று முறை "ஓம்" என உச்சரிக்க வேண்டும்.

பிறகு எல்லோரும், பூணூலை இடமாகப் போட்டுக் கொண்டு, திரும்பிப் பார்க்காமல் சென்று, தலைமுழுகி ஸ்நானம் செய்ய வேண்டும். பின்பு உறவினர்களுடன் வீட்டுக்கு செல்ல வேண்டும்.

அதன் பிறகு 10வது நாளில் உரிய காரியங்களைச் செய்ய வேண்டும். 11வது நாளில் வீட்டை பசுஞ் சாணத்தால் மெழுகி, புண்யாஹ வசனம் செய்யவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறக்கக்கூடாத நாட்கள்

செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகளில் இறப்பது நல்லது கிடையாது. அப்படி இறந்தால் ரத்னம், தானியம், துணி முதலிய வற்றை அந்தக் கிழமைக்கேற்றவாறு தானம் செய்ய வேண்டும்.

## வீடு மூட வேண்டிய நாட்கள்

சில நாட்களில் மரணம் ஏற்பட்டால், குறிப்பிட்ட சில மாதங்கள் அடைப்பு காலமாகும். இக்காலத்தில், அவ்வீட்டில் உள்ளவர்கள் எந்த சுபகாரியமும் செய்யக்கூடாது.

| | | | |
|---|---|---|---|
| அவிட்டம் | - 6 மாதம் | உத்தரரம் | - 3மீ |
| கார்த்திகை | - 3 மீ | மிருகசீரிடம் | - 2 மீ |
| ரோகிணி | - 5 மீ | உத்தரட்டாதி | - 6 மீ |
| சதயம் | - 6 மீ | ரேவதி | - 6 மீ |
| புனர்பூசம் | - 3 மீ | சித்திரை | - 2 மீ |
| மகம் | - 5 மீ | விசாகம் | - 3 மீ |
| பூரட்டாதி | - 6 மீ | உத்தராடம் | - 3 மீ |

(ஒருவேளை வேறு வழியின்றி ஏதாவது சுபகாரியம் செய்ய நேரிட்டால், ஒரு வெங்கலப் பாத்திரத்தில் நல்லெண்ணை ஊற்றி பிராமண ருக்கு தானம் செய்து விட வேண்டும்.)

## தீட்டு விபரம்

பெற்ற தாய் தந்தை இறந்தால் ஒருவனுக்கு ஒரு வருடம் வரை தீட்டு உண்டு. மனைவி இறந்தால் 3 மாதமும், சகோதரர் இறந்தால் 1 1/2 மாதமும், தாயாதிகள் இறந்தர் ஒர மாதமும் தீட்டு உண்டு. ஒருவனுக்கு தாய் தந்தை இறந்துவிட்டால் ஒரு வருடம் வரை ஆறு, கடல், மலை உள்ள பெரிய சிவன் கோயில்களுக்கோ பெருமாள் கோயில்களுக்கோ செல்லக் கூடாது. நேர்த்திக்கடன் செலுத்தக் கூடாது. சுபகாரியம் கூடாது.

மாப்பிள்ளை இறந்தால், மாமனார், மாமியார் மைத்துனருக்கு தீட்டில்லை. குளித்துவிட்டால் போதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கொலை செய்து கொண்டு இறப்பவனுக்கு, தீட்டு தர்ப்பணம் தேவையில்லை.

ஆனால் திவஹோமம் வளர்த்து சாந்தி பரிகாரம் செய்ய வேண்டும்.

கருத்தரித்த குழந்தை கலைந்தால், அந்த கரு எத்தனை மாதமோ அத்தனை நாட்கள் தீட்டு

தீட்டுக் காலத்தில் பூமியில் படுக்க வேண்டும். கட்டிலில் படுக்கக் கூடாது.

## சிரார்த்தம்

சிரார்த்தத்தின் போது மனைவியும் உடன் இருக்க வேண்டும். மனைவி மாத விலக்காயிருத்தல் கூடாது

அனுஷம் நட்சத்திரமும் அமாவாசையும் சேரும் கார்த்திகை மாதத்தில் பிதுர்களுக்கு சிராத்தம் செய்தால், பிதுர்களுக்கு ஒரு வருஷத்திற்கு திருப்தி யுண்டாகும். ஐப்பசி மாத்தில் விசாகம் அல்லது சுவாதியில் வரும் அன்றைக்கு சிராத்தம் செய்தாலும் ஒரு வருஷம் திருப்தியடைவர்.

ஆனி மாதத்தில், திருவாதிரை அல்லது புனர்பூசம் நட்சத்திரத்தில் வரும் அமாவாசையில் செய்கின்ற சிராத்தமும், ஆடி மாதத்தில் பூசம் நட்சத்திரத்தில் வரும் அமாவாசையும் பிதுர்களுக்கு 12 வருஷம் திருப்தியளிக்கும்.

தை மாதத்தில் அவிட்டம் நட்சத்திரத்தில் வரும் மாசி மாதத்தில் சதயம் நட்சத்திரம் அல்லது பூரட்டாதியில் அமாவாசை வரும். பங்குனியில் அமாவாசை வரும். இந்த மூன்று காலங்களும் தேவர்களுக்கும் கிடைக்காத புண்ணிய காலமென்று சொல்லப்பட்டுள்ளது.

மாசிமாதத்து அமாவாசையானது எப்போதாவது சதய நட்சத்திரத்துடன் கூடுமானால், அது மிகவும் புண்ணிய காலம். அற்ப புண்ணியமுள்ள மனிதர்களுக்கு கிடையாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நேரத்தில் அவிட்டம் நட்சத்திரமும் சேருமாயின், அப்போது பிதுர்களுக்கு தர்ப்பணம் செய்தவனுக்கு, 1000 ஆண்டுகளுக்கு பிதுர்களை திருப்தி செய்த பயன் கிடைக்கும். அக்காலத்தில் பூரட்டாதியும் சேருமானால், அதில் பிதுர்கள் திருப்தியடைந்து ஆயிரம் யுகங்கள் சுகமாகத் தூங்குவார்கள்.

கிருதயுகம், திரோதயுகம், துவாபரயுகம், கலியுகம் ஆரம்பிக்கும் காலங்களிலும், சூரிய சந்திர கிரகண நேரங்களிலும் பிதுர்களுக்கு ஒருவன் எள்ளும் தண்ணீரும் இறைந்தால், அவன் ஆயிரம் ஆண்டுகள் சிரார்த்தம செய்த பயனை அடைவான்.

வசதியிருந்தால், இயன்ற அளவு பிதுர்களுக்கு பிண்டம் போட்டு, பிராமணர்களுக்குச் தானஞ் செய்ய வேண்டும். வசதியில்லா விட்டால், சிற்சில எள்ளுகளையாவது நல்ல பிராமணருக்கு நுனிக் கையினால் கொடுக்க வேண்டும். அதற்கும் வழியில்லா விட்டால், ஏழெட்டு எள்ளுடன், ஒரு கைத் தண்ணீராவது பிதுர்களுக்கு விட வேண்டும்.

எதுவுமே இல்லாத நிலையிருந்தால், காட்டுக்குச் சென்று சூரியன் முதலானோரை உரத்த குரலில் கூவியழைத்து, எனக்கு பிதுர்தர்ப்பணம் செய்வதற்கு பொருள் ஒன்றுமில்லை. எனக்கு ஒன்றுமேயில்லை என்று என் 2 கைகளையும் தூக்கிக் காட்டுகின்றேன். எனது பிதுர்கள் திருப்தியடைய வேண்டும் என்று கூறினால் பிதுர்கள் திருப்தியடைவார்கள். கண்டிப்பாக பிதுர்கடன் செய்ய வேண்டும்.

## 41 சிரார்த்தம் செய்வதற்கு முன்பு

சிரார்த்தம் செய்பவர் ஒருமாதம் அல்லது 16 நாட்களுக்கு முன் சவரம், எண்ணெய் தேய்த்தல், உடலுறவு இவைகளை செய்யக் கூடாது. பிறர் அன்னத்தைச் சாப்பிடக் கூடாது. (நண்பன், சகோதரி, குரு, மாமனார், வீடு தோஷம் கிடையாது.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிப்பாக முதல் நாள் இவற்றை செய்யவே கூடாது. சமுத்திர ஸ்நானம், புண்ணியநதிகளில் ஸ்நானம் செய்த பின்பும், பஞ்சகவ்யம் அருந்தியும் சிரார்த்தம் செய்ய வேண்டும். ஒரே பசுவிடமிருந்து பெறப்பட்ட பால், தயிர், நெய், சாணம், கோமியம் இவற்றை கலந்து தயாரித்தது தான் "பஞ்சகவ்யம்" ஆகும். "பஞ்சகவ்யம்" மிகவும் விசேஷத் தன்மை கொண்டது. இறைவனுக்கு அபிஷேகம் செய்வதும் உண்டு.

சிராத்தத்துக்கு முன்பும், அன்றும் பல் தேய்க்க கூடாது. வாயை கொப்பளித்தால் போதுமானதாகும்.

## நவக்கிரகங்களும் விபரங்களும் உரிய வஸ்திரம்

| கிரகம் | உரியதானியம் | உரியதிசை |
|---|---|---|
| 1. சூரியன் - சிவப்பு | கோதுமை | கிழக்கு |
| 2. சந்திரன் - வெள்ளை | பச்சரிசி,நெல் | வடமேற்கு |
| 3. செவ்வாய் - சிவப்பு | துவரை | தெற்கு |
| 4. புதன் - பச்சை | பச்சைப்பயறு | வடக்கு |
| 5. சுக்கிரன் - பட்டுவெண்மை | மொச்சை | தென்கிழக்கு |
| 6. குரு - பொன்னிறம் | கொண்டைக் கடலை | வடகிழக்கு |
| 7. சனி - கருப்பு, ஊதா | எள் | மேற்கு |
| 8. ராகு - கருப்புடன் சித்திரம் | உழுந்து | தென்கிழக்கு |
| 9. கேது - புள்ளிகளுடைய சிவப்பு | கொள்ளு | வடமேற்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கிரகம் | உலோகம் | புஷ்பம் | வாகனம் |
|---|---|---|---|
| 1. சூரியன் | தாமிரம் | செந்தாமரை | மயில், தேர் |
| 2. சந்திரன் | ஈயம் | வெள்ளெலி | முத்து, விமானம் |
| 3. செவ்வாய் | செம்பு | செண்பகம் | அன்னம், சேவல் |
| 4. புதன் | பித்தளை | வெண்காந்தள் | குதிரை, நரி |
| 5. குரு | பொன் | முல்லை | யானை |
| 6. சுக்கிரன் | வெள்ளி | வெண்தாமரை | கருடன், குதிரை, மாடு |
| 7. சனி | இரும்பு | கருங்குவளை | காக்கை, எருமை |
| 8. ராகு | கருங்கல் | மந்தாரை | ஆடு |
| 9. கேது | துருக்கல் | செவ்வல்லி | சிம்மம் |

| கிரகம் | ரத்தினம் | தூபதீபம் | அதிதேவதை |
|---|---|---|---|
| 1. சூரியன் | மாணிக்கம் | சந்தனம் | சிவன் |
| 2. சந்திரன் | முத்து | சாம்பிராணி | பார்வதி |
| 3. செவ்வாய் | பவளம் | குங்குலியம் | சுப்ரமண்யர் |
| 4. புதன் | மரகதம் | கற்பூரம் (பச்சை) | விஷ்ணு |
| 5. குரு | புஷ்கராகம் | ஆல்பல் | பிரம்மா, தக்ஷிணாமூர்த்தி |
| 6. சுக்கிரன் | வைரம் | லவங்கம் | லக்ஷ்மி, வள்ளி |
| 7. சனி | நீலம் | கருங்காலி | யமன், சாஸ்தா |
| 8. ராகு | கோமேதகம் | கடுகு | காளி, துர்க்கை |
| 9. கேது | வைடூரியம் | செம்மரம் | விநாயகர், சண்டிகேசுரர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராசிப்படி அதிர்ஷ்ட எண், நிறம், ரத்னம் முதலியன

| ராசி | எண் | நிறம் | நவரத்தினம் |
|---|---|---|---|
| 1. மேஷம் | 9 | சிவப்பு | பவளம் |
| 2. ரிஷபம் | 6 | பட்டுவெண்மை | வைரம் |
| 3. மிதுனம் | 5 | பச்சை | மரகதம் |
| 4. கடகம் | 2 | வெண்மை, மஞ்சள் | முத்து |
| 5. சிம்மம் | 1 | சிவப்பு | மாணிக்கம் |
| 6. கன்னி | 5 | பச்சை | மரகதம் |
| 7. துலாம் | 6 | பட்டுவெண்மை | வைரம் |
| 8. விருச்சிகம் | 9 | சிவப்பு | பவளம் |
| 9. தனுசு | 3 | ஆரஞ்சு, ரோஸ் | புஷ்பராகம் |
| 10. மகரம் | 8 | நீலம் | நீலக்கல் |
| 11. கும்பம் | 8 | நீலம் | இந்திரநீலக்கல் |
| 12. மீனம் | 3 | ரோஸ் | புஷ்பராகம் |

## நவக்கிரக பரிகாரங்கள்

### 1. சூரியன்

சூரியதிசை நடப்பவர்களும், சூரிய திசை பாதகத்தை தந்தாலோ, சூரியனால் தோஷம் ஏற்பட்டாலோ, மஞ்சள் நிற வேஷ்டி துண்டு கோதுமை தானம் செய்ய உத்தமம்

கும்பகோணம் அருகிலுள்ள சூரியனார் கோயிலுக்கு சென்று, வழிபடுவது உத்தமம்.

1. சூரிய காயத்திரியை ஜெபம் பண்ணவும்
2. ஆதிதிய ஹிருதயம் பாராயணம் செய்யவும்
3. பிரதோஷ விரதமிருந்து, சிவபெருமானை வழிபட உத்தமம்

### 2. சந்திரன்

சந்திர திசை நடப்பவர்களும், சந்திர திசை பாதத்தை ஏற்பத்தினாலோ, திங்கட்கிழமையன்று சோமவார விரதமிருந்து அன்று மாலையில் அருகிலுள்ள சிவன் கோவிலில் அம்பாள் சந்நிதியில் நெய்தீபம் ஏற்றி வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவது உத்தமம். வெள்ளை வேஷ்டி, தயிர் சாதம், நெல் இவற்றை தானம் செய்யவும். பௌர்ணமியன்று ஏதாவது அம்பாள் சன்னிதியில் பால் அபிஷேகம் செய்து, பால் கற்கண்டு பொங்கல் வைத்து வழிபடவும். அமாவாசைக்கு பிறகு மூன்றாம் பிறையன்று சந்திரதரிசனம் செய்ய உத்தமம். கும்பகோணம் அருகிலுள்ள திங்களூருக்கும், திருப்பதிக்கும் சென்று வழிபடுவது உத்தமம்.

**3. செவ்வாய்**

செவ்வாய் திசை நடக்கும் போதும், செவ்வாயினால் திருமண தாமதம் ஏற்பட்டாலோ, செவ்வாய் தோஷம் இருந்தாலோ, செவ்வாய் கிழமை யன்று, ராகு காலத்தில் துர்க்கையை வணங்கி வழிபட உத்தமம். துவரம் பருப்பு, சிகப்பு சேலை ரவிக்கை, மஞ்சள் கயிறு இவற்றை சுமங்கலிக்கு தானம் செய்யவும்

சங்கடஹரசதுர்த்தி விரதமிருப்பது நல்லது. மாயவரம் அருகிலுள்ள வைத்தீஸ்வரன் கோவிலுக்கு சென்று செவ்வாய் பகவானுக்கு தீபமேற்றி அர்ச்சனை செய்தாலும், பழனிக்கு சென்று முருகனை வழிபட்டாலும் தோஷம் நீங்கும்.

**4. புதன்**

புதன் திசை நடந்தாலோ, புதனால் பாதிப்பு ஏற்பட்டாலோ, புதன் கிழமை ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாமம் பாராயணம் செய்வது உத்தமம். பாசிப்பயறு தானம் செய்யவும். சீர்காழி அருகிலுள்ள திருவெண்காடு என்ற ஊருக்குச் சென்று, புதனை வழிபட்டாலும், மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குச் சென்று சொக்கநாதரை வழிபட்டாலும் நல்லது.

**5. குரு**

குரு திசை நடந்தாலோ, புத்திரகாரகன் குரு நீசம் பெற்று இருந்து, குழந்தை இல்லாவிட்டாலும், 5ல் குரு இருந்து, காரகோபாவ நாஸ்தி என்ற படி குழந்தை இல்லாவிட்டாலும், வேறு பாதிப்புக்கள் குருதிசையில் ஏற்பட்டாலோ, வியாழக்கிழமையன்று, கொண்டைக்கடலை, சுண்டல் வைத்து, தக்ஷிணாமூர்த்திக்கு பொன்னிற வஸ்திரம் சாற்றி, முல்லைப்பூவால் அர்சனை செய்ய உத்தமம்.

குரு ஸ்தலமான திருச்செந்தூர் சென்று, அங்கு எழுந்தருளியுள்ள பாலசுப்ரமணியரை வழிபட உத்தமம். கும்பகோணம் அருகில் ஆலங்குடி சென்று வழிபட உத்தமம். செங்கோட்டை அருகில் புளியரை என்ற ஊரிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சாவூர் அருகில் திட்டை என்ற ஊரிலும், திருப்பத்தூர் அருகிலுள்ள பட்டமங்கலம் என்ற ஊருக்குச் சென்று அஷ்டமாசித்தி தக்ஷிணாமூர்த்தியையும் வழிபட உத்தமம்.

### 6. சுக்கிரன்

சுக்கிர திசை நடப்பவர்களும், சுக்கிரன் நீசம் பெற்றவர்களும், இளவயதில் சுக்கிரதிசை நடப்பவர்களும், வெள்ளை மொச்சை, வெண்பட்டு தானம் செய்வது சிறந்தது. வெள்ளிக்கிழமை தோறும் மகாலெக்ஷ்மிக்கு தாமரை நூல் திரியினால் நெய்தீபம் ஏற்ற உத்தமம்.

"வள்ளி திருமணம்" பாராயணம் செய்ய உத்தமம். கும்பகோணம் அருகிலுள்ள கஞ்சனூர் சென்று, சுக்கிரனை வழிபட உத்தமம். ஸ்ரீரங்கம் சென்று ரங்கநாதர் ரங்கநாயகியை தரிசிப்பதும், திருச்செந்தூரில் வள்ளி குகையில் அர்ச்சனை செய்ய உத்தமம்.

### 7. சனி

சனி திசை நடக்கும் போதும், 71/2 சனி, அஷ்டமச் சனி நடக்கும் போதும், சனிக்கழமை தோறும் நல்லெண்ணை தேய்த்துக் குளித்து, எள்சாதனம் காக்கைக்கு அளிப்பது சிறந்தது. ஏழைகளுக்கும் தானம் செய்யலாம். சனி பகவானுக்கு எள்தீபம் ஏற்றலாம். ஆஞ்சநேயரை வழிபடுவது உத்தமம். நளபுராணம் படிப்பது சிறந்தது. தேனி அருகில் குச்சனூர் சென்று, சனி பகவானை வழிபட்டால் கடுமையான பாதிப்பு குறையும். காரைக்கால் அருகில் திருநள்ளாறு சென்று, சனி பகவானை வழிபட்டு நேரே வீட்டுக்கு செல்லல் உத்தமம்.

### 8. ராகு திசை

ராகு திசை கடுமையாக பாதித்தாலோ, ராகுவால் புத்திர தோஷம் ஏற்பட்டாலோ, செவ்வாய்கிழமை, அஷ்டமி, பௌர்ணமி அமாவாசையில் துர்க்கை, காளியை வழிபட உத்தமம். உளுந்து, புளியோதரை, தயிர் சாதம் தானம் செய்வது நன்மையாகும். கும்பகோணம் அருகில் திருநாகேஸ்வரம் சென்று ராகுபகவானுக்கு ராகுகாலத்தில் பால் அபிஷேகம் செய்ய உத்தமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9. கேது**

கேது திசையால் பாதிக்கப்பட்டவர்கள், திங்கட்கிழமை தோறும் சண்டிகேஸ்வரரை வழிபட உத்தமம்.

தினமும் விநாயகரை வழிபட்டு, காரியங்களை ஆரம்பிக்கவும். திருப்பதி அருகிலுள்ள காளஹஸ்தி சென்று வரலாம். கும்பகோணம் அருகில் கீழப்பெரும்பள்ளம் சென்று கேதுவை வழிபட நல்லது.

## "நியூமராலஜி" எண்கணிதம் ஆங்கில தேதிப்படி

**ஆங்கில தேதி 1, 10, 19, 28 தேதியில் பிறந்தவர்களுக்கு**

| | | |
|---|---|---|
| அதிர்ஷ்ட எண் | - | 1, 9 |
| துரதிர்ஷ்ட எண் | - | 8 |
| அதிர்ஷ்ட நிறம் | - | சிவப்பு, வெளிர்சிவப்பு, மஞ்சள், பொன்னிறம் |
| துரதிர்ஷ்ட நிறம் | - | கறுப்பு, பாக்கு கலர் |
| அதிர்ஷ்ட கல் | - | தங்கம், மாணிக்கம் |

**ஆங்கில தேதி 2, 11, 20, 29 தேதியில் பிறந்தவர்களுக்கு**

| | | |
|---|---|---|
| அதிர்ஷ்ட எண் | - | 7, 1 |
| துரதிர்ஷ்ட எண் | - | 9, 8 |
| அதிர்ஷ்ட நிறம் | - | வெளிர் மஞசள், வெள்ளை |
| துரதிர்ஷ்ட நிறம் | - | கறுப்பு, சிவப்பு, ஆழ்ந்த நீலம் |
| அதிர்ஷ்ட கல் | - | முத்து |

**ஆங்கில தேதி 3, 12, 21, 30 தேதியில் பிறந்தவர்களுக்கு**

| | | |
|---|---|---|
| அதிர்ஷ்ட எண் | - | 3, 1, 9 |
| துரதிர்ஷ்ட எண் | - | 6 |
| அதிர்ஷ்ட நிறம் | - | ஆரஞ்சு, ரோஸ், தாமரைப் பூ நிறம் |
| துரதிர்ஷ்ட நிறம் | - | கருநீலம், கறுப்பு, ஆழ்ந்த பச்சை |
| அதிர்ஷ்ட கல் | - | செவ்வந்திக்கல், புஷ்பராகம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆங்கில தேதி 4, 13, 22, 31 தேதியில் பிறந்தவர்களுக்கு**

| | | |
|---|---|---|
| அதிர்ஷ்ட எண் | - | 1, 9 |
| துரதிர்ஷ்ட எண் | - | 8 |
| அதிர்ஷ்ட நிறம் | - | வெளிர் நீலம், மஞ்சள் |
| துரதிர்ஷ்ட நிறம் | -- | கறுப்பு |
| அதிர்ஷ்ட கல் | - | கோமேதகம் |

**ஆங்கில தேதி 5, 14, 23 தேதியில் பிறந்தவர்களுக்கு**

| | | |
|---|---|---|
| அதிர்ஷ்ட எண் | - | 5 |
| துரதிர்ஷ்ட எண் | - | இல்லை |
| அதிர்ஷ்ட நிறம் | - | சாம்பல் நிறம் |
| துரதிர்ஷ்ட நிறம் | - | பச்சை, கறுப்பு |
| அதிர்ஷ்ட கல் | - | வைரம் |

**ஆங்கில தேதி 6, 15, 24 தேதியில் பிறந்தவர்களுக்கு**

| | | |
|---|---|---|
| அதிர்ஷ்ட எண் | - | 6, 9 |
| துரதிர்ஷ்ட எண் | - | 3 |
| அதிர்ஷ்ட நிறம் | - | வெள்ளை, மஞ்சள், ரோஸ் |
| அதிர்ஷ்ட கல் | - | மரகதம் |

**ஆங்கில தேதி 7, 16, 25 தேதியில் பிறந்தவர்களுக்கு**

| | | |
|---|---|---|
| அதிர்ஷ்ட எண் | - | 2, 1 |
| துரதிர்ஷ்ட எண் | - | 7 |
| அதிர்ஷ்ட நிறம் | - | லேசான மஞ்சள், வெளிர் பச்சை, நீலம், வெள்ளை |
| துரதிர்ஷ்ட நிறம் | - | கறுப்பு, சிவப்பு |
| அதிர்ஷ்ட கல் | - | வைடூரியம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆங்கில தேதி 8, 17,26 தேதியில் பிறந்தவர்களுக்கு**

| | | |
|---|---|---|
| அதிர்ஷ்ட எண் | - | 1, 5 |
| துரதிர்ஷ்ட எண் | - | 8 |
| அதிர்ஷ்ட நிறம் | - | மஞ்சள், ஆழ்ந்த பச்சை, நீலம் |
| துரதிர்ஷ்ட நிறம் | - | கறுப்பு, பாக்கு கலர், சிவப்பு |
| அதிர்ஷ்ட கல் | - | நீலக்கல் |

**ஆங்கில தேதி 9, 18, 27 தேதியில் பிறந்தவர்களுக்கு**

| | | |
|---|---|---|
| அதிர்ஷ்ட எண் | - | 9, 1 |
| துரதிர்ஷ்ட எண் | - | 2 |
| அதிர்ஷ்ட நிறம் | - | சிகப்பு, கருஞ்சிவப்பு, நீலம் |
| துரதிர்ஷ்ட நிறம் | - | வெளிர் பச்சை, வெண்மை மிகுந்த வண்ணம |
| அதிர்ஷ்ட கல் | - | பவளம் |

## இந்து தர்ம சாஸ்திரம் கூறும் பயனுள்ள அறிவுரைகள்

1. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது.

2. தனது இடது கையினால் ஆசனம் போட்டால் ஆயுள் குறைவு. தனது இடது கையினால் எண்ணெய் தேய்த்துக் கொண்டால் புத்திர நாசம் தனது இடது கையால் சாப்பாடு போட்டுக் கொண்டால் செல்வம் அழியும். தனது இடது கையால் படுக்கையை போட்டால் இருப்பிடம் சேதமாகும்.

3. ஜோதிடர், குரு, நோயாளி, கர்ப்பிணி, மருத்துவர், சந்நியாசி முதலியவர்களுக்கு அவர்களுடைய ஆபத்துக் காலத்தில் கண்டிப் பாக உதவ வேண்டும். மிகவும் புண்ணியமாகும்.

4. சகோதரன் அல்லது சகோதரி தாழ்ந்தநிலையிலிருந்தால் அவர்க ளுக்கு உதவ வேண்டும்.

5. அண்ணியை (அண்ணன் மனைவி) தினசரி வணங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பசு, தேர், நெய்குடம், அரசு, வில்வம், அரசுடன் சேர்ந்த வேம்பு இவைகள் எதிரில் குறுக்கிட்டால், வலது புறம் சுற்றி செல்ல வேண்டும்.

7. குடும்பஸ்தன் ஒரு வஸ்திரத்துடன் உணவு உட்கொள்ள கூடாது. ஒரு கையை தரையில் ஊன்றிக்கொண்டு சாப்பிடக் கூடாது. துணியில்லாமல் குளிக்கக் கூடாது. சூரியனுக்கு எதிரில் மலசலம் கழிக்கக்கூடாது.

8. கன்றுக்குட்டியின் கயிறை தாண்டக்கூடாது. மழை பெய்யும் போது ஓடக்கூடாது. தண்ணீரில் தன் உருவத்தை பார்க்கக் கூடாது.

9. நெருப்பை வாயால் ஊதக் கூடாது.

10. மலஜலம் கழிக்கும்போது, இரவில் தெற்கு முகமாகவும், மற்ற நேரங்களில் வடக்கு முகமாகவும் கழிக்க வேண்டும். கிழக்கு, மேற்கு முகமாக உட்கார்ந்து மலஜலம் கழிக்கக் கூடாது.

11. பெண்கள், எதிர்பாராத விதத்திலோ, தவறு என்று தெரியாமலோ, கற்பை இழந்துவிட்டாலோ, புண்ய நதியில் 18 முறை மூழ்கிக் குளித்தால் தோஷம் நீங்கும்.

12. குழந்தையில்லாதவன், பெண் குழந்தைகளை மட்டும் பெற்றவன், திருமணம் ஆகாமலே ஒரு பெண்ணுடன் வாழ்பவன், இவர்களை சுபகாரியங்களில் முன்னிறுத்தக் கூடாது.

13. சாப்பிடும் போது, முதலில் இனிப்பு, உவர்ப்பு, புளிப்பு, கசப்பு பதார்தங்களை வரிசையாக சாப்பிட்டு, பின்பு நீர் அருந்த வேண்டும்.

14. சாப்பிடும் போது தவிர மற்ற நேரத்தில் இடது கையால் தண்ணீர் அருந்தக் கூடாது.

15. பெண்கள் ஆண்களுடன் அருகருகே அமர்ந்து உண்ணக் கூடாது. கணவன் சாப்பிட்ட பின்பே மனைவி சாப்பிட வேண்டும். திருமணத் திலும், பந்தியிலும் சேர்ந்து சாப்பிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கோவணமின்றி வீட்டின் நிலைப்படியை தாண்டக்கூடாது.

17. இருட்டில் சாப்பிடக்கூடாது. சாப்பிடும் போது விளக்கு அனைந்து விட்டால், சூரியனை தியானம் செய்துவிட்டு, மீண்டும் விளக்கேற்றி விட்டு சாப்பிட வேண்டும்.

18. சாப்பிட்டவுடன் குடும்பஸ்தன் வெற்றிலை போட வேண்டியது வெற்றிலையில் நுனியில் பாவமும், மூலையில் நோயும், நரம்பில் புத்திக்குறைவும் உள்ளதால் இவற்றை கிள்ளி எறிந்து விட வேண்டும்.

19. சுண்ணாம்பு தடவாமல் வெறுமனேயோ, வெறும் பாக்கை மட்டுமே போடக்கூடாது. வெற்றிலையின் பின் பக்கம்தான் சுண்ணாம்பு தடவ வேண்டும்.

20. மனைவி கணவனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கலாமே தவிர, கணவன் மனைவிக்கும், மகன் தாய்க்கும், பெண் தந்தைக்கும் மடித்து தரக்கூடாது.

21. குரு, ஜோதிடர், வைத்தியர், சகோதரி, ஆலயம் இவற்றிற்கு செல்லும் போது வெறுங்கையுடன் செல்லக் கூடாது.

22. ஜோதிடர்களை எக்காரணம் கொண்டும் சோதித்து பார்த்தல் கூடாது.

23. தலையையோ, உடம்பையோ வலக்கையினால் மட்டும் சொறிய வேண்டும், இரண்டு கைகளாலும் சொறியக்கூடாது.

24. இருகைகளாலும் தலைக்கு எண்ணெய் தேய்க்ககூடாது.

25. வலது உள்ளங்கையில் எண்ணெய் ஊற்றி தலையில் தேய்க்க வேண்டும்.

26. தலைவாசலுக்கு நேரே கட்டில் போட்டோ, தரையிலோ படுக்கக் கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. வானவில்லை பிறருக்கு காட்டக்கூடாது.

28. மயிர், சாம்பல், எலும்பு, மண்டையோடு, பஞ்சு, உமி, ஓட்டாஞ்சில்லி இவற்றின் மீது நிற்கக் கூடாது.

29. பேசும் போது துரும்பைக்கிள்ளிப் போடக்கூடாது.

30. ஈரக்காலுடன் படுக்கக் கூடாது.

31. வடக்கிலும், கோணத்திசைகளிலும் தலை வைத்து படுக்கக்கூடாது.

32. ஒரு காலினால் இன்னொரு காலைத் தேய்த்துக் கழுவக்கூடாது.

33. சிகரெட், பீடி துண்டுகளை அணைக்காமல் தரைமேல் போட்டு, காலால் தேய்க்கக் கூடாது. பூமாதேவியின் சாபம் ஏற்பட்டு பூமி, மனை கிடைக்காமல் போய்விடும்.

34. பகைவன், அவனது நண்பர்கள், கள்வன் கெட்டவன், பிறர் மனைவி இவர்களுடன் உறவு கொள்ளக்கூடாது.

35. பெற்றதாய் சாபம், செய்நன்றி கொல்லுதல், பிறன் மனை கூடுதல் இவை மூன்றுமே பிராயச்சித்தமேயில்லாமல் அனுபவித்தே தீர வேண்டிய பாவங்கள் ஆகும்.

36. அங்கவீனர்கள், ஆறுவிரல் உடையவர்கள், கல்வியில்லாதவர், முதியோர், வறுமையிலுள்ளவர்கள் இவர்களது குறையை குத்திக் காட்டிப் பேசக்கூடாது.

37. ரிஷி, குரு, ஜோதிடர், புரோகிதர், குடும்ப வைத்தியர், மகான்கள், கெட்ட ஸ்திரியின் நடத்தை இவற்றை பற்றி வீண் ஆராய்ச்சியில் ஈடுபடவோ, இவர்களிடம் உள்ள தவறுகளை விளம்பரப்படுத்துவதோ கூடாது.

38. பிறர் தரித்த உடைகள், செருப்பு, மாலை, படுக்கை, ஆசனம் இவற்றை நாம் உபயோகிக்க கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. பிணப்புகை, இளவெயில், தீபநிழல் இவை நம்மீது படக்கூடாது.

40. பசுமாட்டினை காலால் உதைப்பது, அடிப்பது தீன் போடாமலிருப்பது இவை பாவங்களாகும்.

41. பசு மாட்டிடை "கோமாதா" வாக எண்ணி, சகல தேவர்களையும் திருப்திப்பட வைப்பதற்கு அம்மாட்டுக்கு புல், தவிடு, தண்ணீர், பிண்ணாக்கு, அகத்திக்கீரை கொடுப்பது புண்ணியமாகும்.

42. தூங்குபவரை திடீரென்று எழுப்பக்கூடாது. தூங்குபவரை பார்க்கக் கூடாது.

43. பகலில் உறங்குவது, உடலுறவு கொள்வது, பால் பருகுவது கூடாது.

44. தலை, முகம் இவற்றின் முடியை காரணமில்லாமல் வளர்க்கக் கூடாது.

45. அண்ணன் - தம்பி, அக்காள் - தங்கை, ஆசிரியர் - மாணவர், கணவர் - மனைவி, குழந்தையும் - தாய், பசுவும் - கன்று இவர்களுக்கிடையில் செல்லக் கூடாது.

46. நெல்லிக்காய், ஊறுகாய், இஞ்சி, தயிர் இவற்றை இரவில் சாப்பிடக் கூடாது.

47. வீட்டுக்குள் நுளையும் போது வாசல் வழியாகத் தான் நுழைய வேண்டும்

48. கையால் மோரைக் குழப்பக் கூடாது.

49. நம்மை ஒருவர் கேட்காதவரையில் நாம் அவருக்கு ஆலோசனை கூறக்கூடாது.

50. தாம்பத்திய சுகம் அனுபவிக்கும் நேரம் தவிர மற்ற நேரங்களில் மனைவியுடைய மர்ம உறுப்பையும், பிற பெண்களுடையதையும் பார்க்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்கையர்கள் கவனிக்க வேண்டியவை

1. பெண்கள் கணவன் தூங்கிய பின்பு தூங்கி, கணவர் விழிப்பதற்கு முன்பு எழவேண்டும்.

2. சூரிய உதயத்துக்கு முன்பு எழுந்து, முற்றத்தை பெருக்கி, சாணம் தெளித்து கோலமிட வேண்டும்.

3. கோலமிடுவதற்கு மஞ்சள் கலந்த அரிசிமாவு, பச்சிலைப்பொடி, குங்குமம் கலந்த அரிசிமாவு இவற்றால் கோலமிட வேண்டும்.

4. சுபகாரியங்களுக்கு ஒரு கோடும், ஆசுப காரியங்களுக்கு இரண்டு கோடும் போட்டு கோலம் போடக்கூடாது.

5. பூஜையறை, சமயலறை, சாப்பிடுமிடத்தை நாள் தோறும் கழுவுதல் வேண்டும்.

6. அமாவாசை, பௌர்ணமி, கார்த்திகை, மாதப்பிறப்பு, வெள்ளிக்கிழமை, பிறவிசேஷ தினங்களில் வீடு முழுதும் கழுவவேண்டும்.

7. மண் பாண்டங்களை குளிக்கும் முன்பு தொடக்கூடாது.

8. தாமிரப் பாத்திரங்களை புளியினாலும், வெங்கலம் பித்தளைப் பாத்திரங்களை சாம்பலாலும், ஈயப் பாத்திரங்களை சாணத்தாலும், எவர் சிலவர், பீங்கான் பாத்திரத்தை அரப்புப் பொடியினாலும் சுத்தப்படுத்த வேண்டும்.

9 குளித்த பின்பு தான் குடிநீர் எடுக்க வேண்டும்.

10. தண்ணீர்க்குடத்தை இடுப்பில் வைத்துகொண்டு வரவேண்டும். தோளிலும், தலையிலும் சுமக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. சூரிய அஸ்தமன சமயமான மாலை நேரங்களில் கைகால் கழுவி, விளக்கேற்றி வைக்க வேண்டும்.

12. உரல், அம்மி, முறம், வாசற்படி, உலக்கை இவற்றின் மீது உட்காரக் கூடாது.

13. வீட்டுவிலக்கான முதல் 3நாட்கள் வீட்டு வேலை ஒன்றும் செய்யக் கூடாது. 4வது நாளில் கணவனை வணங்கிவிட்டு, 5ம் நாள் குளித்து விட்டு வீட்டுப் பணிகளில் ஈடுபடலாம். அன்று கணவனோடு சேர்வது சிறப்பு.

## உணவு

1. வாழை, புன்னை, மா, பலா இலைகள் சிறந்ததாயினும், உணவு படைப்பதற்கு வாழையிலையே மிகச்சிறந்தது.

2. வாழையிலையில் அடியில் சிறிது அரிந்துரிட்டு, கழுவி விட்டு இலையைப் போடவேண்டும். சாப்பிடுபவர்களின் வலதுகைப் பக்கம் இலையின் அடிப்பாகமும், இடக்கைப்பக்கம் நுனிப்பாகம் இருக்கும்படி போட வேண்டும்.

3. எதையும் கையால் படைக்கக்கூடாது. அப்பளம் போன்றவற்றை கையை கழுவிவிட்டு போடவேண்டும்.

4. சோறு, கறி முதலியவற்றை மண்பாண்டத்தில் வைத்தோ அல்லது அடுப்பில் வைத்த பாத்திரத்தை வைத்தோ படைத்தல் கூடாது.

5. வீட்டுக்கு வந்த புது மருமகனையும், நோயாளிகளையும் கர்ப்பிணிப் பெண்களையும், குழந்தைகளையும், வயதானவர்களையும் முதலில் சாப்பிடச் சொல்ல வேண்டும்.

6. சாப்பிடும் போது நீர் குடிக்கக் கூடாது. உண்ட பின் குடிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. உணவு அருந்திய பின் குளிக்கக்கூடாது. மிகவும் தேவைப்பட்டால் 5நாழிகை கழித்து (2மணி நேரம்) குளிக்கலாம்.

8. ஒருவர் தலையில் முடிந்த பூவைத் தன்தலையில் வைக்கக்கூடாது.

9. தலையில் சூடிய மலரை தானே எடுத்தெறிய கூடாது.

10. பெண்கள் விரதமிருக்க தேவையில்லை. கணவனுடைய அனுமதி பெற்றே விரதமிருக்க வேண்டும். திருமணமாகாத பெண்கள், ருக்மிணி கல்யாணம், சீதா கல்யாணம் இவற்றை பாராயணம் செய்தால் திருமணம் கூடிவரும்.

11. வேள்வி, தர்ம சிந்தனை, ஆன்மீக ஆர்வம், தவம், வாய்மை, மன்னித்தல், கருணை, பிறர் பொருளை விரும்பாமை இந்த எட்டும் நாம் பின்பற்ற வேண்டிய நற்குணப் பாதைகள்.

## தீபம் ஏற்றுதல்

காலையில் உஷத் காலத்திலும், மாலையிலும், சூரிய அஸ்தமனத் திற்கு முன்பும் வீட்டில் தீபமேற்ற வேண்டும்.

எவர்சில்வர் விளக்கு ஆகாது. 2திரியை சேர்த்து முறுக்கி, ஏற்றுவது உத்தமம். தீபத்தை கிழக்குத் திசையிலும், மேற்குத்திசை நோக்கியும், வடக்குத்திசை நோக்கியும் தீபமேற்ற வேண்டும். தெற்கு எமனுடைய திசையாதலால் தெற்கே பார்த்து தீபம் ஏற்றக்கூடாது. ஒரு திரி ஏற்றுவோர் எப்போதும் கிழக்கு நோக்கியே இருக்க வேண்டும்.

புதிய மஞ்சள் துணி திரிபோட்டு விளக்கேற்றினால் செய்வினை, பில்லி சூனியம், பேய், பிசாசு அண்டாது.

பஞ்சுத்திரி போட்டு விளக்கேற்றினால் - மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழைத்தண்டு திரி - புத்திர பாக்கியம்.

பட்டுநூல் திரி - எல்லாவித சுபங்களும்.

ஆமணக்கு எண்ணெய் தீபம் - அனைத்து செல்வம்.

தேங்காய், இலுப்பெண்ணெய் தீபம் - தேக ஆரோக்கியம், செல்வம்.

நல்லெண்ணெய் தீபம் - யமபயம் அகலும்.

தாமரை நூல் திரி - லெட்சுமி கடாட்சம்.

நெய்தீபம் - சகல சௌபாக்கியம்.

நீர் நிரம்பிய பாத்திரத்தை பூஜையறையில் வைக்க நல்லது.

வெண்கல விளக்கு - பாவம் தீரும்.

அகல் விளக்கு - சக்தி தரும்.

தீப சரஸ்வதி என்று மூன்று முறையும், தீப லெட்சுமி என்று மூன்று முறையும், தீப துர்க்கா என்று மூன்று முறையும் குலதெய்வத்தை நினைத்து மூன்று முறையும் தீபத்தை பன்னிரெண்டு முறை செய்ய வேண்டும்.

தீபத்தை வாயால் ஊதியணைக்காமல் ஒரு பூவின் காம்பால் அணைக்க வேண்டும்.

## திருநீறு தரித்தல்

திருநீற்றை கிழக்கு அல்லது வடக்குப் பார்த்து நின்று நீரில் குழைத்து, அண்ணாந்து கொண்டு, சிவசிவ'' என்று சொல்லி நடு மூன்று விரல்களால் நெற்றியில் பூசிக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களில் திருநீறு கொடுக்கும் போது இரண்டு கைகளையும் நீட்டி வலது கையால் வாங்கி அப்படியே பூசுதல் வேண்டும். இடக்கையில் வைத்து பூசக்கூடாது. ஒரு இலை அல்லது காகிதத்தில் வைத்து பூசிக் கொள்ளலாம்.

## திருக்கோயில் வழிபாட்டுமுறை

குளித்து, சுத்தமான ஆசாரத்துடன் கோயிலுக்குப் போக வேண்டும். வெறுங்கையுடன் செல்லாமல் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, பூ இவற்றை வாங்கிச் செல்ல வேண்டும்.

சிவன் கோயிலென்றால் வில்வத்தாலும், பெருமாள் கோயிலென்றால் துளசியாலும் அர்ச்சனை செய்ய வேண்டும். கோபுரத்தை வணங்கி விட்டே உள் செல்ல வேண்டும்.

கொடிமரத்துக்கு அப்பால் விழுந்து நமஸ்காரம் செய்ய வேண்டும். மற்ற இடங்களில் விழுந்து கும்பிடக் கூடாது. நமஸ்காரம் செய்யும் போது மேற்கு அல்லது தெற்கில் கால் நீட்டவேண்டும். வடக்கிலும், கிழக்கிலும் கால் நீட்டுதல் கூடாது.

விநாயகர் சன்னிதியில் தலையில் மூன்று முறை குட்டிக்கொண்டு 3முறை தோப்புக்கரணம் போடவும்.

விநாயகரை ஒருதரமும், சூரியனை 2 தரமும், அம்பாளையும், விஷ்ணுவையும், 4 தரமும் ஆஞ்சநேயரை 5 முறையும் பிரதட்சயம் செய்ய வேண்டும் மூலவருக்கு அபிஷேகம் நடந்தால், பிரகாரத்தை சுற்றக்கூடாது. அபிஷேகத்தைக் கண்டால் அலங்காரமும் பார்க்க வேண்டும்.

நேரே மூலஸ்தானத்துக்கு சென்று மூலவரை தரிசித்து விட்டு பின்பு மற்ற பின்பு பிரகாரங்களில் உள்ள தெய்வங்களை வழிபடல் வேண்டும்.

நமது வேண்டுதலையெல்லாம் கொடிமரத்தின் அருகே நின்று கேட்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு பிறகு வேறெந்த சன்னிதியிலும் சிவன் நாமம், நாராயணன் நாமம் தவிர வேறெந்த சிந்தனையும் இருக்கக் கூடாது.

கோயிலுக்குள் ஒருவருடனும் பேசக்கூடாது.

ஆலயத்துக்குள் ஒருவரை ஒருவர் கும்பிடலாகாது. கும்பிட்டவரின் பாவம் எதிரில் உள்ளவரை சேரும். சனிபகவானை நேருக்கு நேர் நின்று கும்பிடக்கூடாது. ரிஷபம், துலாம், அவிட்டம் நட்சத்திரக்காரர்கள் கும்பிட்டால் தோஷமில்லை. ஆலயவளாகத்துக்குள் அசுத்தம் செய்தாலோ, மலஜலம் கழித்தாலோ, குப்பையைப் போட்டாலோ, அடுத்த பிறவியில் குஷ்ட ரோகிணி யாகவும், வெண்குஷ்ட நோயுடனும் பிறப்பான். கோவிலிலிருந்து பிரசாதம் தவிர வேறெதையும் எடுத்துச் செல்ல கூடாது.

சண்டிகேசுரரின் சன்னிதியில் நூலை கிழித்துப் போடக்கூடாது. சிவதியானம் பூர்த்தி செய்யச் சொல்லி அவரிடம் வேண்டி விட்டு சிவனுடைய அருளைத்தவிர வேறெதையும் கொண்டு செல்லவில்லை என்று சண்டேசுவரிடம் தெரிவித்து விட்டு செல்ல வேண்டும்.

சிவன் கோவிலில் காலபைரவரையும், பெருமாள் கோயிலில், சக்கரத் தாழ்வாரையும் வழிபட்டால் செய்வினை தோஷங்கள் அணுகாது.

கோவிலுக்கு சென்றுவிட்டு நேரே வீட்டுக்கு செல்ல வேண்டும். இப்படியெல்லாம் அனுஷ்டித்தால் மகாலெட்சுமி கடாஷம் உண்டாகும்.

வால்மிகி முனிவர் அருளிய ஸ்ரீமத் ராமாயணத்திலுள்ள ஒவ்வொரு காண்டத்திலும், சிற்சில ஸர்க்கங்களை பாராணம் செய்தால் ஒவ்வொரு காரியமும் சுலபமாக நிறைவேறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணக் கிரியைகள்



மானிடப் பிறப்பு எடுத்ததிற்கு அர்த்த புஷ்டியாய், அறம், பொருள், இன்பம், வீடு என்ற நற்பயன்களை அடைவதற்கு ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொள்வது "திருமணம்" என்ற இருமனம் இணையும் இனிய நாளாகும். விவாகம் எனும் கிரியை இந்து மதத்தில் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய
மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை"

எனும் வள்ளுவன் வாக்கிற்கு இணங்க வாழ்வதற்கு விவாகம் என்பது முக்கிய பங்குவகிக்கின்றது. விவாகம் என்பதற்கு சிறப்பாகச் சுமப்பது என்று பொருள் உண்டு. "வஹ்" எனும் வினையடி சுமத்தல் என்ற கருத்தைத் தருகின்றது. ஆதலால் தர்ம காரியங்களைக் சுமந்து செய்ய வேண்டிய பொறுப்பு இந்த விவாகத்தில் நிச்சயிக்கப்படுகின்றது. இத்தர்ம நியதியைக் கொண்ட இல்வாழ்க்கை இல்லறம் என்று போற்றப்படுகிறது. இது மங்கலத்தைத் தருவதால் கல்யாணம் என்றும், தெய்வத்தன்மை பொருந்திய மணமாதலால் தமிழில் திருமணம் என்றும் வழங்குவர். விவாகத்தில் ஐந்து அம்சங்கள் மிக முக்கியமானதாகும். அவை - வாக்தானம், கன்னிகா தானம், வரப்ரேக்ஷணம், பாணிக்கிரகணம், சப்தபதி என்பவையாகும்.

மணப்பெண்ணைப் பார்த்து தர்மத்தை செய்வதற்காக உன்னை ஏற்கிறேன் என்று கூறுவது வாக்தானமாகும். (தர்ம பிரஜார்த்தம் த்வாம் விருனீமஹே) பெண்ணைத் தருவதாக வாக்குக் கொடுத்தல் பெரியோர்கள் முன்னிலையில் இடம்பெறும். இது நிச்சயதார்த்தம் என்பதைக் குறிக்கும். பருவம் அடைந்த ஆண், பெண் ஆகிய இருவரின் ஜாதகப்படி விவாகப் பொருத்தம் உரிய ஜோதிடர் மூலம் முறைப்படி பார்த்து பொருத்தம் நிச்சயம் பண்ணிய பிற்பாடு பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்கு நன்னாளில் சென்று தாம்பூலம் பரிமாற்றம் செய்தல், அதாவது மங்களப் பொருட்களாகிய மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு, பழவகைகள், இனிப்புப் பலகாரத்துடன் சென்று திருமணத்தை நிச்சயித்தல், அதன் பின் திருமண நாளை நிச்சயித்த பின் பெண் வீட்டுக்கு மாப்பிள்ளை வீட்டாரும் சென்று மேற்கூறியபடி தாம் பூலம் மாற்றுவர். இதுவே நிச்சயதார்த்தம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்னுருக்கல்



மாங்கல்யம் (தாலி) செய்வதற்கு நல்ல நாள் பார்த்து மாப்பிள்ளை வீட்டில் அல்லது ஆசாரி வீட்டில் பொன்னுருக்கல் செய்தல் வேண்டும். இதில் மணப்பெண் தவிர ஏனைய உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொள்வர். பெண் வீட்டார் இனிப்பு பலகாரம் கொண்டு வருவது சம்பிரதாயமாகும்.

மணமகன் வீட்டுவாசலில் முறைப்படி நிறை குடம், குத்து விளக்கு, பன்னீர் தட்டு, குங்குமம், சந்தனம் வைத்து வரவேற்க வேண்டும். அதே நாள் அல்லது பின்பு பெண்ணுக்கு உரிய கூறைப்புடைவை போன்ற வற்றையும் கடையில் நல்ல நாளாகப் பார்த்து வாங்க வேண்டும்.

இதே நாள் பெண்வீட்டிலும், மணமகன் வீட்டிலும் தனித்தனியே அவர்களின் வளவில் ஈசான (வடகிழக்கு) மூலையில் முகூர்த்தக்கால் அல்லது கன்னிக்கால் ஊன்ற வேண்டும். இதற்கு இப்போது முள்முருக்கை மரத்தில் இருந்து ஒரு தடியை வெட்டி அதன் மேல் நுனியில் ஐந்து மாவிலைகளை மஞ்சள் பூசிய கயிற்றால் கட்டி சுமங்கலிப் பெண்களால் நவதானியம் இட்டு ஊன்றப்படும். முற்றாக முடிவடையும் வரை எந்தவிதமான துக்க நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்ளக்கூடாது என்பர்.

## மாப்பிள்ளை அழைப்பு



திருமண நாளன்று சுப நேரத்தில் தோழனுடன் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று மாப்பிள்ளையை மணப்பந்தலுக்கு அழைத்து வருவர். (மாப்பிள்ளை வீட்டில் பால் அறுகு வைத்து மாப்பிள்ளைக்குப் புனித நீராட்டுதல், தலைப் பாகை வைத்தல் போன்ற நிகழ்வுகளும், அதே போல பெண்ணுக்கும் புனித நீராட்டுதலும் நடைபெறும்.

மணப்பந்தலின் முன்றலில் நிறைகுடம் வைத்து மங்கள விளக்கேற்றி வைக்க வேண்டும். எல்லாக் காரியங்களுக்கும் முதலில் நாங்கள் வணங்கும் விநாயகரை (பசுவின் சாணத்தில் அல்லது மஞ்சள் மாவில் பிள்ளையார் பிடித்து) எழுந்தருளச் செய்து மலர்சூட்டி மங்களப் பொருட்களையும் வரவேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்கு சந்தனம், குங்குமம், பன்னீர் முதலியவற்றையும் வைத்தல் வேண்டும். மாப்பிள்ளை தோழனுடன் வந்து சேர்ந்ததும், தோழன் மணமகனின் காலைக் கழுவுவார். தோழனுக்கு அன்பளிப்பாக மாப்பிள்ளை மோதிரம் போடுவது வழக்கம். இரு மங்கல மங்கையர் (சுமங்கலிகள்) ஆரத்தி எடுத்து திலகம் வைத்தும் , மாமனார் மாப்பிள்ளைக்கு மலர் மாலை போட்டும் வரவேற்பது வழமை. (பிராமணக் கல்யாண வீடுகளில் காசி யாத்திரை, சமாவர்த்தனம் எனும் கிரியைகள் நடைபெறுவதும், ஊஞ்சல் ஆடுதலும் முக்கிய நிகழ்வாகும். இது வானத்திற்கும், பூமிக்கும் உள்ள தொடர்பு காட்டப்படும். இதில் மணமகள் இடது பக்கம் இருக்க வேண்டும்.) அதன் பின் மாப்பிள்ளையைத் தோழன் நிறைகுடத்துக்கு வலமாக அழைத்து வந்து மணவறையில் அமரவைப்பர். மாப்பிள்ளையை வலது பக்கமாக அழைத்து வரவேண்டும். (அதாவது சிவாச்சாரியார் இருக்கும் பக்கமாக) முதலில் சங்கற்பம், பிள்ளையார் பூஜை, ஆசமனம், புண்ணியாகம், பஞ்ச கவ்வியசுத்தி போன்ற கிரியைகள் நடைபெறும்.

## பவித்திரம் அணிதல்

திருமணக் கிரியைகளைச் செய்யவிருக்கும் சிவாச்சாரியார் தான் செய்யப்போகும் கருமத்திற்கு இறைவனிடத்தும் பெரியோரிடத்தும் அனுமதி வேண்டுதலை (அனுக்ஞை) தொடர்ந்து சங்கற்பம் (அதாவது செய்யப் போகும் கிரியைகளுக்காக உள்ளத்தை உறுதி செய்து கொண்டு பவித்திரம் அணிதல்) இடம்பெறும். எந்தக் கிரியையும் இனிது முடிப்பதற்கு மேலான தலைவரான விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டி விநாயகர் பூஜை முடிவில் மூவகை தத்துவங்களையும் நினைத்து நீரை உட்கொள்ளல் ஆசமனம் எனப்படும். உள்ளம் தூய்மையாகி ஆன்மா அருள்வழி நிற்க இக்கிரியை இடம்பெறும். இடத்தையும், பொருளையும் சுத்தி செய்வது புண்ணியாகம் செய்யப்படும் இக் கிரியையின் பஞ்ச கவ்விய பூசையும் இடம்பெறும்.

## அங்குரார்ப்பணம்

அங்குரார்ப்பணம் எனப்படுவது முளைப் பாலிகை (நவதானிய முளை) இடுதல். (அங்குரம் முளை, அங்குரார்ப்பணம் முளையிடுதல்) அதாவது முளைக்கும் விதைகளை பாலிகையிடல் என்பதாகும். அனைத்திலும் இந்தக்கிரியை உண்டு. திருமணத்தில் இதைச் செய்வதன் பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவதானியம் செழித்து வளர்வது போல இத் தம்பதிகளின் வாழ்வும் செழிப்புடையதாக அமைய வேண்டும் என்பதற்காகவும், நவதானியம் எனப்படும். முளைப் பாலிகைகள் மனிதனால் விதைக்கப்பட்டு மனிததேவைக்காக பயன் படுத்துவது போல இல் வாழ்க்கையில் கணவன், மனைவி மற்றோருக்கும் தம்மால் இயன்ற உதவிபுரிந்து அறத்தோடும் என்றும் பாலிகை இடும் சுமங்கலிகள் போல மங்களமாய் வாழ வேண்டும் என்பதற்காகவும் இது நடைபெறும். மணமகன், மணமகள் என இருவருக்கும் தனித்தனியாக அங்குரார்ப்பணக் கிரியை செய்வது மரபு. (மணமகள் மணமகனுக்கு வலப்பக்கத்தில் இருப்பாள்.)

## இரட்சாபந்தனம்

எடுத்த கருமம் இடையூறின்றி இனிது நிறைவேறவும், வேறு செயல் சிந்தனை இன்றிக் குறித்த கரும சிந்தனையில் மூழ்கி இருக்கவும் எல்லா பாவங்களையும் நீக்கிப் புனித மயமாக்க இந்த ரட்சாபந்தனம் செய்யப் படுகிறது. தமிழில் காப்புக் கட்டுதல் என்று கூறுவர். மண மகன், மணமகள் இருவருக்கும் தனித் தனியாக இந்தக் காப்புக் கட்டப்படும்.

மணமகனுக்கு ரட்சாபந்தனம் (காப்புக்கட்டி) முடித்து பிறிதொரு இடத்தில் இருத்திப் பெண்ணை அழைத்து வருவார்கள். சில இடங்களில் மணமகன் அப்படியே இருக்கப் பெண்ணை அழைத்து வருவதும் உண்டு. இதற்குக் காரணம் பெண்ணுக்கு காப்புக் கட்டாமல் மணமகனைப் பார்க்கக்கூடாது என்கின்ற ஒரு நியதியால் மணமகனைப் பிறிதொரு இடத்தில் அமரச் செய்கின்றனர்.



ஆனால் பெண் அழைத்து வரப்படும் போது முகத்திரை போட்டே அழைத்து வருவதால் மணமகன் மணவறையில் இருக்கவே பெண்ணையும் வைத்துக் காப்புக் கட்டலாம் என்கின்ற மரபிலும் இரு விதமாய் இக்கிரியை செய்வதுண்டு மாங்கல்யம் பெண்ணின் கழுத்தில் கட்டப்படும்வரை லட்சுமி, நாராயணராக மணமகனையும் பெண்ணையும் பாவனை செய்து தாலி கட்டியபின் சிவசக்தி ரூபமாக அமர்த்திக் கிரியை நிகழ்த்துவர். அதற்காகவே முதலில் பெண் வலது பக்கமும் ஆண் இடது பக்கமும் தாலி கட்டியபின் ஆண் வலமாகவும் பெண் இடமாகவும் மாற்றி இருத்துவார்கள். விஷ்ணு தனது வலது மார்பிலேயே லட்சுமியைக் கொண்டுள்ளார். சிவன் தனது உடம்பின் இடது பாகத்தைச் சக்திக்கே கொடுத்துள்ளார். என்கின்ற தத்துவம் இதனைப்புலப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்சாபந்தனமான பின்பு ஆசாரியர் முறைப்படி சிவனதும், சக்தியினதும் அருளைப் பெறுவதற்காக சிவ கும்பத்திற்கும், சக்தி கும்பத்திற்கும் பூசை செய்து வழிபாடு நடத்துவர். வாழ்க்கைக்கும் நவக்கிரகங்களுக்கும் தொடர்புண்டு. எனவே அவர்பால் வரும் குற்றங்களைப் போக்கியருளும்படி நவக்கிரகங்களுக்குப் பூசை செய்யப்படும்.

கும்பத்திலே பூசித்த யாகோவர வரி (சிவசக்தி)யின் அருளை நிலைபெறச் செய்வதற்கு ஓம குண்டத்தில் அக்கினி காரியம் செய்யப்படும். இங்கு வளர்க்கும் அக்கினி சிவாக்கினி எனப்படும். சிவாக்கினி பாவங்களை எரித்து வாழ்க்கைக்கு வேண்டிய தூய அருளை வழங்கும்.

## பிதுரர் ஆசீர்வாதம்

குடும்ப வாழ்வைத் தொடங்கும் போது அது தவறின்றி நடப்பதற்கு அக்குடும்பத்து முன்னோரது ஆசீர்வாதம் வேண்டும். அதற்காக முன்னோர் களாகிய பிதுரர்களை திருமணத்திற்கு அழைத்து அவர்களது ஆசியைப் பெறும் வகையில் செய்யப்படுவது நாந்தி சிரார்த்தமாகும். இது மணமகன், மணமகள் ஆகியோரின் தந்தையர்களால் செய்யப்படும்.

## கன்னிகாதானம்

பெண்ணை முறையாகப் பெற்றோர் களால் "தாரதத்தம்" செய்வார்கள். ஒரு பொருள் இறுதியாகக் கொடுப்பதற்கு தண்ணீர் விடுதல் முன்னாள் மரபு. இதற்குரிய கிரியை யானது மணமகன்,மணமகள் இருபகுதிப் பெற்றோரையும் அழைத்துச் சங்கல்பம் செய்து சம்பந்திகள் ஒருவருக்கொருவர் உபசாரம் செய்வது (இது கிரியை முறையில் சொல்லப்படவில்லை சபை சிறப்பிற்காகச் செய்யப்படும் ஒரு சிறப்பாகும்)



அதன் பின் கிழக்கு முகமாய் (மணவறையிலிருந்து சபையோரைப் பார்க்கும் வண்ணம்) மணமகளின் தந்தை அமர்ந்து ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், எலுமிச்சம்பழம், தேங்காய், மஞ்சள் துண்டு, சில்லறைக்காசு, பொன், மலர் போன்ற பொருட்கள் தட்டில் வைத்து பெண்ணின் கையைத் தட்டிலே வைத்து தந்தை தட்டையும் மகளையும் சேர்த்துப் பிடிக்க சிவாச்சாரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமக்களின் வம்சாவழியை (மணமகளினதும், மணமகனினதும் தந்தை, தந்தையின் தந்தை பேரன் அவரின் தந்தை (பாட்டன்) ஆகியோரின் பெயர்களைக் குறித்து சிவாச்சாரியாரிடம் திருமணக் கிரியைகள் தொடங்க முன் கொடுத்து வைப்பது உசிதம்) சபையோர் அறிய எடுத்துக் கூறி மணமகளின் தகப்பனார் மணமகனுக்குத் தன்மகளைக் கொடுக்கும் போது பின்வரும் மந்திரப் பொருளைக் காணலாம்.

"அழகும், அறிவும், ஆரோக்கியமும் அமைந்த நன்கு அலங்கரிக் கப்பட்ட இந்தப் பெண்ணை நான் உனக்கு அளிக்கின்றேன். அவள் தர்மம், செல்வம், அன்பு அனைத்தையும் காப்பவளாக இருப்பாள்." என்ற கருத்துப்பட அம் மந்திரம் அமைந்திருக்கிறது.

இம் மந்திரத்தைக் கூறி தாயார் மூன்று முறை தண்ணீர் விட மங்கள வாத்தியங்கள் முழங்க கன்னிகையைத் தானமாக மணமகன் கையில் கொடுப்பர். தண்ணீர் தாரையோடு கொடுத்ததால் இதற்கு தாராதத்தம் என்பர். (தத்தம் - கொடுத்தல்) மணமகன் அவளைப் பெற்று

"இல்வாழ் வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

என்பதற்கிணங்க வாழத் தயாராகிறான். இக்கன்னிகாதானத்தைச் செய்ய தாய், தந்தை இல்லாதோர் அவர்களுடைய அண்ணன், அக்கா தம்பதிகள், சித்தப்பா தம்பதியர் அல்லது நெருங்கிய உறவுத் தம்பதிகளை நியமிக்கலாம்.

கன்னிகாதானம் அக்கினி, விநாயகர், சிவன் பார்வதி முப்பத்து முக்கோடி தேவர்கள், வேதப்பிராமணர்கள், உற்றார், உறவினர்கள், சபை யோர்கள், சாட்சியாக நிகழ்த்தப்படுவது.

## தாலி கட்டல்

தாலியிலே சிவலிங்கம் விநாயகர் அல்லது லட்சுமியினுடைய திருவுருவம் அமைத்தல் சிறந்தது. அதன் பின் ஒரு தட்டிலே மாங்கல்யம், கூறை, மாலை, கால் மிஞ்சி மற்றும் மங்கலப் பொருட்கள் வைத்து மணமகனின் தந்தை, தாய் சபையோரிடம் ஆசி பெறுதல். பின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகன் தனது கையால் மணமகளிடம் கொடுத்து கூறை மாற்றி வரச் செய்தல் இடம் பெறும். கூறைமாற்றி வந்ததும், மணப்பெண் மண மகனுக்கு வலப்பக்கம் வந்து அமர மாங்கல்ய பூசை செய்து மணமகன் எழுந்து வலது பக்கத்திற்கு வந்து சிவாச்சாரியார்கள் அவையோர்கள் ஆசீர் வதிக்க கெட்டி மேளம் முழங்க, கழுத்தில் தாலி கட்டுதல் நடைபெறும். தமிழில் மங்கல நாண் பூட்டல் என்று சொல்லப்படும்.

தாலி - என்ற சமஸ்கிருதச் சொல் பனை மரத்தைக்குறிக்கிறது. தால விருட்சம் என்றால் பனைமரம். தால என்பது பனை ஓலையையும் குறிக்கும். பழைய காலத்தில் தங்கத்திற்கு பதிலாக பனை ஓலையை பயன்படுத்தினர் என சில குறிப்புகள் உள்ளன.

ஆதி காலத்தில் மஞ்சள் கயிற்றினாலே தான் தாலி கட்டப்பட்டு வந்தது. தற்போது தங்கத்திலே கட்டுகின்றனர். இருப்பினும் சில குடும்பத்தினர் இன்னும் மஞ்சள் கயிறு மாங்கல்யத்திற்கு பாவிப்பது குறிப்பிடத்தக்கது. தாலி கட்டும் போது பின்வரும் மந்திரம் சொல்லப்படும்.

"மாங்கல்யம் தந்து நானேந
மமஜீவன ஹேதுநா
கண்டேபத்நாமி ஸுபகே
துவம்ஜீவ சரதச்சதம"

பொருள் :-

"இது மங்கள சூத்திரம் நான் வாழ்வதற்கு ஏதுவானது. இதை உன் கழுத்தில் கட்டுகிறேன். சௌபாக்கியவதியே! நீ நூறு வருடங்கள் சுகமாக வாழ்ந்திருப்பாயாக;; என்ற கருத்து காணப்படுகிறது.

தாலி கட்டும் போது அமங்கல வார்த்தைகள், தும்மல் போன்ற துர்சகுன ஒலிகள் கேட்கத்கூடாது என்பதற்காக கெட்டி மேளம் கொட்டப்படும். மாங்கல்யம் ஒன்பது இழைகளை உடையது.

1. வாழ்க்கையை உள்ளபடி புரிந்து கொள்ளுதல்
2. மேன்மை
3. ஆற்றல்
4. தூய்மை
5. தெய்வீக நோக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உத்தம குணங்கள்
7. விவேகம்
8. தன்னடக்கம்
9. தொண்டு

இவற்றை ஒரு பெண் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தில் மாங்கல்யம் அமைக்கப்பட்டுள்ளது.

சுபமுகூர்த்தத்தில் மணமகன் மணமகளின் வலப்புறம் சென்று வடக்கு நோக்கி நின்று மாங்கல்யத்தை இரு கரங்களாலும் பெற்று ஒரு சுமங்கலி திரு விளக்கு ஏந்தி நிற்க கட்டுவது வழமை தாலியில் மூன்று முடிச்சு இடம் பெறுதல்.

மணமகன் முதல் முடிச்சு போடுகிறான். இது கணவனுக்கு கட்டுப்பட்டவள் என்பதையும் இரண்டாம் மூன்றாம் முடிச்சு மணமகனின் சகோதரி போடுகிறாள். இது கணவனின் தாய் தந்தையர்க்கு கட்டுப்பட்டவள் என்பதையும் தெய்வத்திற்கு கட்டுப்பட்டவள் என்பதையும் குறிக்கும்.

## மாலை மாற்றுதல்



தாலிகட்டி முடிந்த பின் மாலை மாற்றுதல் வாழ்க்கையில் உடலாலும், உள்ளத்தாலும் நாம் இருவரும் ஒருவரே என்ற தத்துவத்திற்கு ஏற்ப பெண்ணின் கழுத்தில் இருக்கும் மாலையை ஆணுக்கும், ஆணின் கழுத்தில் இருக்கும் மாலையை பெண்ணிற்குமாக மூன்று முறை கழற்றி மாற்றுவார்கள். பொதுவாக ஒருவர் கழுத்தில் போட்ட மாலையை இன்னொருவர் போடக்கூடாது என்பது சாத்திரவிதி ஆனால் ஈருடல் ஓர் உயிர் போல கலந்து விட்டதனால் அன்பின் நிமித்தம் மாலையை மாற்றுகின்றார்கள். தொடர்ந்தும் மங்கலப் பொருட்களாகிய மஞ்சள், குங்குமம், பூ, வாசனைப் பொருட்கள், சீப்பு, கண்ணாடி முதலியவற்றை மணமகன், மணமகளிடம் கொடுப்பார். கணவன், மனைவியாக ஆனபின் தம் மங்கலக் கோலத்தை இருவரும் கண்ணாடியில் பார்த்து மகிழ்வர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால், பழம் பருகுதல்

வாழ்க்கைத்துணை ஒருவருக்கொருவர் அமைந்த வேளை வாழ்க்கை என்றும் இனிப்பாக அமைய முதல் பானமாய் பாலும், பழமும் பருகுதல் வேண்டும். அத்துடன் கோ எனப்படும் பசு தரிசனமும் இடம்பெறும். (அல்லது திருவிளக்கு தரிசனம் செய்யலாம்.)

## பாணிக்கிரகணம் [கைப்பிடித்தல்]

பாணிக்கிரகணம் என்றால்மணமகளின் கையை மணமகன் பிடிப்பது என்று பொருள் இதைத் தமிழில் "கைப்பிடித்தல்" என்பார்கள். (பாணி - கையை, கிரகணம் - பிடிப்பது) இதன் போது "நீயும் நானும் முதுமையடைந்து விட்டாலும் கூட ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருப்போம் என்று உன் கையைப் பிடிக்கிறேன்" எனும் மந்திரம் சொல்லப்படும். ஆணின் வலக்கை, பெண்ணின் வலக்கையைப் பிடிக்க வேண்டும்.



## ஏழடி நடத்தல் [ஸப்தபதி]

பெண்ணின் வலது கையைப் பற்றிக் கொண்டு வலது கால் பெருவிரலைப் பிடித்துக் கொண்டு மணமகன் புனிதமான ஏழடி வைத்தல் ஸப்தபதியாகும். (சப்த- ஏழு,பதி- அடி) அக்கினி எரியும் ஹோம குண்டத்தில் இருந்து அம்மி வரை ஏழு இடங்களில் நெல்போட்டு அந்த இடங்களில் மணமகன் தன் கையால் பெண்ணின் வலக்காலைத் தூக்கி வைத்து நடத்தி வருதல், ஞானிகளால் வகுக்கப்பட்ட ஏழுக்குரியவை பல ஸப்த சாகரம், ஸப்த லோகங்கள், ஸப்த நாடிகள், ஸப்த கன்னிகைகள், ஸப்த வாரங்கள் போன்றவையைக் குறிப்பிடலாம். இவை வாழ்க்கையின் நடைமுறைக்கு முன்னுதாரணமாகவும், செயற்படவும், கேட்கவும், இரசிக்கவும் உதவுவன. கணவனானவன் தனது இஷ்டங்களுக்குப் பிரியமானவளாய்த் தன்னை சார்ந்த வகையில் இந்த ஏழடி மூலம் தன்னோடு சேர்த்துக் கொள்வதே இதன் பொருளாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ்வாழ்வில் பெறவேண்டிய ஏழு பொருள் களை இது குறிக்கும். அவற்றைப் பெறுவதற்கு இருவரும் ஒத்து முயற்சி செய்ய வேண்டும். ஏழு பொருட்களுமான உணவுப் பொருள், உடற்பலம், கடவுள் வழிபாட்டுடன் நல்வினை, மனச்சாந்தி., நல்லறிவு, சகல போகங்களும் காலத்திற்கு காலம் பொருள்களும் அவற்றால் வரும் சுகங்களும்யாகத்திற்கு நல்ல துணை யாக இருப்பதுமான பொருளைத் தரும்.

இதை வேறுவிதமாகவும் சொல்வர் அதாவது

ஓரடி - கடவுளுக்காக

இரண்டாவது அடி - கணவனுக்காக

மூன்றாவது அடி - சேர்ந்தோர் குலத்தைக் காக்க

நான்காவது அடி - அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, எனும் பெண்களின் குணநலன்களைப் பேண

ஐந்தாவது அடி - இருவரது அறிவு நல்வழியாக அமைய

ஆறாவது அடி - கலைகள் ஆறும் அன்புக் கணவனுக்குப் பொருந்தும் வரை ஊட்டப்பட உரியன.

ஏழாவது அடி - ஏழேழு பிறப்பும் கணவருடன் இன்புற்று வாழ வேண்டும் என்பதற்காக

என இக்காலப்பாடல் பொருள் விளக்கம் தருகிறது.

## அம்மி மிதித்தல்

நான்கு மூலைகள் கொண்ட ஒரு கல்லை (அம்மி) வைத்து அதன்மேல் பெண்ணின் காலைத் தூக்கி வைத்து தனது கையால் கணவன் மிஞ்சியைப் பெருவிர லுக்கு அடுத்துள்ள விரலில் அணிவிப்பது முறை. கல்லிலே உள்ள நான்கு விட்டங் களும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நால்வகைக் குண இயல்பைக் குறிக்கும். அதன் நடுப்பகுதியில் கணவன் பெண்ணின் காலைத் தூக்கி வைக்கும் போது இந்தக் கல்லைப் போல் உறுதியாய் தனது நிலையில் நின்று பிரியாது இளகாது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கணவன் மேல் உள்ள பற்றும் நீங்காது கற்பு நெறியில் நின்று விலகாது தன்னை உறுதியாய் நிலைப்படுத்த வேண்டும் என்பது பொருளாகும். பெண்ணின் வலது காலை (எட்டாவது அடி) மணமகன் கையால் தூக்கி அம்மியால் வைத்து பெருவிரலுக்கு அடுத்த விரலில் மெட்டி அணிவிப்பார். இந்தக் கல்லைப்போல் நிலையாக நின்று உன் எதிரிகளைச் சகித்துக்கொள். இது பெண்ணுக்குத் கற்பையும் ஒழுக்கத்தையும் தாங்கி வாழ்க்கையில் இன்ப துன்பங்களைக் கண்டு கலங்காமல் உறுதியான கொள்கைகளைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

அம்மி ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு பெண்ணிற்கும் இன்றி யமையாதது. அக்காலத்தில் மணப்பெண்ணைத் தீய ஆவிகள் அணுகா வண்ணம் காக்க இரும்பு வளையம் அணிவிக்கப்பட்டது. இக்காலத்தில் வெள்ளியால் செய்த மிஞ்சி அணிவிக்கப்படுகிறது. வெள்ளி உலோகத்திற்கும் தீய ஆவிகள் விரட்டும் தன்மை உண்டு என்பதால் மெட்டி அணிதல் முக்கிய மாகக் கருதப்பட்டது.

அக்கினியை வலம் வரும்போது கிழக்குப் பக்கத்தில் வைத்திருக்கும் மஞ்சள் நீர் நிறைந்த பாத்திரத்தில் இருக்கும் மோதிரத்தை இருவரும் தேடி எடுக்க வேண்டும். இது மூன்று முறை நடைபெறும். விட்டுக் கொடுத்து வாழ வேண்டும் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

## பிராயச்சித்தம்

குற்றங்குறைகள் தீர்ப்பதற்காகப் பிராயச்சித்த ஓமமும் கிரியைகளின் நிறைவில் தோழன் நெற்பொரியைப் பெற்று மண மகனின் கையில் கொடுக்க மணமகன் தான் பெற்ற பொரியை மணமகளின் கையில் கொடுத்து (மணமகள் அதனை இரண்டு கைகளாலும் ஏற்றுக் கொள்ள) மணமகன் மணமகளின் கையைத்தன் இரு கைகளாலும் தாங்கி குருக்கள் அக்கினியில் சிருக்ஸ்ருவம் (யாககுண்டத்தில் நெய் சொரிவதற்காக மரத்தால் செய்யப்பட்ட யாளி போன்ற முன்பகுதியை உடையது.) மூலம் நெய்சொரியும் போது அக்கினியில் இடுவர். "அக்கினி பகவானே சகல செல்வங்களையும் எமக்குத் தந்தருள வேண்டும்" என வேண்டுதல் செய்து (ஒரு நூலாசிரியர் சிறப்பாக நெல் மலர் என்று வர்ணிக்கின்ற) நெற்பொரியைச் சொரிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருந்ததி பார்த்தல்



கற்பு நெறியில் மிகச் சிறந்தவளாய் விளங்கியவள் அருந்ததி எனும் மங்கை. அவளின் சிறப்பினால் வானிலே நட்சத்தி ரமாக இன்றும் ஜொலித்துக் கொண்டிருக் கிறாள். பெண்ணின் கற்புநெறி பெருமை யை உணர்த்தவே அருந்ததி இருக்கும் திசையைப் பார்த்து நமஸ்காரம் செய்வது மரபு. சில இடங்களில் அருந்ததிக்கென கும்பம் வைத்து கும்பத்திலே பூ போட்டு வணங்குவதும் உண்டு.

"அண்டல மீதுலவும் அருந்ததி என்னும் அருந்திநற் கற்பினாள் உன்னைக்கண்டதால் ஊறு படவொனாதென்னக் கருதி நீ கங்குலிற் கவிகை கொண்டது முறைதான்" என்று புகழேந்திப்புலவர் பாடியது இத்தொடர்பில் ஒரு நூலாசிரியர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

அருந்ததி வசிட்டரின் மனைவி. சிறந்த பதிவிரதை வானத்தில் துருவ மண்ட லத்திற்கு அருகில் ஏழு நட்சத்திரங்களுக்கு இடையில் வசிட்ட நட்சத்திரமும் அதன் அருகில் அருந்ததியும் இருப்பதாக புராணங்கள் கூறுகின்றன.

## மோதிரம் போட்டு எடுத்தல்

இது கிரியையிலே கூறப்படவில்லை. மணமக்களுக்கு கூச்சம் தெளிய வும், சபை சிறப்புக்காகவும் மோதிரத்தை மஞ்சள் கலந்த நீரில் போட்டு இருவரும் ஒரே சமயத்தில் கை விட்டு எடுக்க வேண்டும் என்ற தத்துவத் தையும் இது குறிக்கும்.

## அரசாணி



இது பத்ததியிற் கூறப்படவில்லை. இது தேச வழக்கம் போலும் அரசிலே சிவ பிரானையும் வேம்பிலே உமாதேவியாரையும் வழிபடும் வழக்கம் இன்றும் உண்டு. ஒரே இடத்தில் அரசும் வேம்பும் நட்டுப் பூசிப்பதுமுண்டு. ஆதலால் அரசு சிவனைக் குறித்தல் பெறப்படும். ஆல் விஷ்ணுவைக் குறிப்ப தென்பர். அரசும் ஆலும் சிவனை யும் சக்தியாகிய விஷ்ணுவையும் பூசிப்பதற் காக நட்டு அரசால் என்ற பேருண்டாகி அரசாணி என்று மாறியிருக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது இவைகளுக்குப் பதிலாக முள்முருக்கு நடப்படுகிறது. கற்புநெறி தவறாது வாழவேண்டும் என்பதற்காக தரிசிக்கப்படுகின்றது. (இந்திரன் சபத்துக்குள்ளாகியதை முள்முருக்கு குறிக்கின்றது.) முருக்கு அரசு போலவே சிவ வழிபாட்டுக்குரிய மரமென்பர். அரசு, ஆல், முருக்கு ஆகிய மூன்றும் பிரமா, விஷ்ணு, ருத்திரனாகிய மும்மூர்த்திகளையும் பூசிப்பதற்குரிய மரங்கள் என்றும் இவை மூன்றையும் நடும் வழக்கமும் உள்ளதென்றும் கூறுவர்.

## வாழ்த்துதல்

இந்த நிகழ்வு மணமக்கள் பல்லாண்டு காலம் நீடூழி வாழவேண்டும் எனப் பெரியோர்கள் மனமுவந்து ஆசிர்வதிப்பதாகும். அறுகானது நன்றாகப் பரவும் தன்மையும், இலகுவில் அழியாத தன்மையும் உடையதால் மணமக்கள் இருவரும் அதே தன்மையோடு சிறப்புற்று வாழவேண்டும் என்ற நோக்கில் அறுகைச் சேர்த்து மஞ்சள் கலந்த அரிசி போடுதல் அறுகரிசியாக வாழ்த்துவது மரபாகும். இவ்வறுகு அரிசிபோடுவதில் மாறுபட்ட தன்மையைக் காண முடியும். சிலர் கீழ் இருந்து மேல் நோக்கியும், சிலர் மேல் இருந்து கீழ் நோக்கியும் ஆசீர்வதிப்பதுண்டு. இதில் சரியான முறை உச்சியில் (சிரசில்) மூன்று முறை இடுதலே ஆகும்.

(நிறைவு - மகிழ்வு - வெற்றி குறித்துப் பண்டைய நாளில் அறுகெடுத்து வாழ்த்தும் வழக்கம் இருந்து வந்தது. (சேக்கிழார் பெரியபுராணம் பாடி முடித்து யானைமீதமர்ந்து வீதியுலா வரும்போது ஆரணங்கள் விரித்தோதி மாமறையோர் எதிர் கொண்டு அறுகெடுப்ப வாழ்த்தெடுத்தார் அரம் பயர்களெல்லாம் என்பது திருத் தொண்டர் புராண வரலாறு - 88) அறுகிட்டு வணங்குதல் என்ற மரபு காலப்போக்கில் அறுகொடு நெல்லும் மலரும் கலந்து



இடுதல் என்றும் ஆயிற்று. அறுகும் அட்சதையும் மலரும் கலந்து இட்டு வாழ்த்துதல் அட்சதையிடுதல் என்று உலகில் வழக்கில் வழங்கக் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரத்தி எடுத்தல்



திருமண நிகழ்வின நிறைவாக மணமக்களின் கைகளில் கட்டிய காப்புக்களை அவிழ்த்து, பவித்திரங்களைக் கழற்றி வெற்றிலையில் வைத்துக் குருக்களுக்கு தட்சணையும் சேர்த்து வைத்துக் கொடுத்து மணமக்கள் ஆசீர்வாதம் பெறுவர். இதில் மணமக்கள் தங்கள் காப்புக்களைக் கழற்றுதல் வேண்டும். திருமணச்சடங்கின் முடிவில் ஆரத்தியெடுத்தல் இடம் பெறும் மணமக்களுக்கு "கண்ணூறு" (கண் திருஷ்டி) கழியும் பொருட்டு ஒரு தட்டிலே குங்குமம் தூவி அதன்மேல் மூன்று வாழைப் பழத்துண்டுகளில் நெய்தீபம் ஏற்றி இரு சுமங்கலிகள் வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாக மூன்றுமுறை சுற்றித்தீபத்தை அணைத்து மணமக்களுக்கு அக்குங்குமத்தை நெற்றியில் திலகமிட்டு விடுதல் நிகழும்.

ஆரத்தி எடுத்தபின் தோழன், மணமகன், மணமகள், தோழி என்ற வரிசையில் மங்கள மேளம் முழங்க எல்லோரும் வாழ்த்த வீட்டினுள்ளே வலது காலை எடுத்து வைத்து மணமக்கள் செல்வார்கள். அவர்களுக்கு முன்னே பூரண கும்பம், மங்கள தீபம் என்பவற்றை சுமங்கலிகள் கொண்டு செல்வர். வழிபாட்டறையில் அவற்றை வைத்து மணமக்கள் பெற்றோரின் ஆசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசார முறைகள்



எமது இந்து சமயத்திலே முதன்மை பெறுவது "ஆசாரம"அதை நல்ல முறையில் பேணிக்காப்பது முக்கிய கடமையாகும். தினமும் சூரிய உதயத்தின் முன் கண் விழித்துக் காலைக்கடன்கள் முடித்து "ஸ்நானம்" செய்து தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, விபூதி தரித்து, சுகந்த சந்தனம் பூசி, இறை வழிபாடு செய்து புலால் தவிர்த்த உணவு உட்கொண்டு உடற்சுத்தி, உளச்சுத்தியோடு இருப்பதே முறையான ஆசாரம். முக்கியமாக ஆலய வழிபாடு செய்யுங் காலங்களிலாவது இவற்றை முறையாக மேற்கொள்ள வேண்டும். தான் வாழும் இல்லத்தை கோயில் போல் ஆசாரமாக வைத்திருக்க வேண்டும். தீட்டுக்களுடன் வீட்டுக்குள் பிரவேசிப்பதை தவிர்க்க வேண்டும். உதாரணமாக ஒரு மரணச் சடங்கு வீட்டுக்குச் சென்றால், திரும்பி இல்லம் வந்ததும் முறைப்படி "ஸ்நானம்" செய்தே வீட்டிற்குள் பிரவேசிக்க வேண்டும். காரணம் மரணச் சடங்கில் கண்ட துயரங்களும், அழுகை, துன்ப ஒலிகளும் மனம், வாக்கு, காயங்களில் பதிந்து நிற்கையில் "ஸ்நானம்" செய்து நித்திய அனுஸ்டானம் மூலம் மனம், வாக்கு, காயங்களைச் சுத்தமாக்கி செல்லுதல். அத்தோடு இறந்த வரிடமிருந்து பிரேத கிருமிகள் தொற்றா வண்ணம் உடற்சுத்தம் முறையாகச் செய்ய வேண்டும்.

### சில முக்கிய ஆசார முறைகள்

* கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது.

* தனது இடது கையினால் ஆசனம் போட்டால் ஆயுள் குறைவு. தனது இடது கையினால் எண்ணெய் தேய்த்துக் கொண்டால் புத்திரர் அழிவு. இடது கையால் சாப்பாடு போட்டுக்கொண்டால் செல்வம் அழியும், தனது இடது கையால் படுக்கை போட்டால் இருப்பிடம் சேதமாகும்.

* ஜோதிடர், குரு, நோயாளி, கர்ப்பிணி, மருத்துவர், சந்நியாசி முதலிய வர்களுக்கு அவர்களுடைய ஆபத்துக் காலத்தில் கண்டிப்பாக உதவவேண்டும்.

* பசு, தேர், நெய்க்குடம், அரசு, வில்வம், அரசுடன் சேர்ந்த வேம்பு இவைகள் எதிரில் குறுக்கிட்டால், வலது புறம் சுற்றிச் செல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பஸ்தன் ஒரு துணியுடன் உணவு உட்கொள்ளக் கூடாது. ஒரு கையை தரையில் ஊன்றிக் கொண்டு சாப்பிடக் கூடாது. துணியில்லாமல் குளிக்கக்கூடாது. சூரியனுக்கு எதிரில் மலசலம் கழிக்கக் கூடாது.

கன்றுக் குட்டியின் கயிற்றைத் தாண்டக்கூடாது. மழை பெய்யும் போது ஓடக்கூடாது. தண்ணீரில் தன் உருவத்தைப் பார்க்கக்கூடாது. நெருப்பை வாயால் ஊதக்கூடாது.

வானவில்லைப் பிறருக்குக் காட்டக்கூடாது.

ஈரக்காலுடன் படுக்கக் கூடாது.

வடக்கிலும், தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு எனும் திசைகளில் தலை வைத்துப்படுக்கக் கூடாது.

பிணப்புகை, இளவெயில், தீப நிழல் இவை நம்மீது படக்கூடாது.

நெல்லிக்காய், ஊறுகாய், இஞ்சி, தயிர் இவற்றை இரவில் சாப்பிடக் கூடாது.

**மங்கையருக்கு சில குறிப்புகள்**

சுமங்கலிகள் நெற்றியில் குங்குமம் இல்லாது இருக்கக்கூடாது.

இரவில் வீட்டைப் பெருக்கிக் குப்பையை வெளியே போடக்கூடாது.

பெண்கள் பூசணிக்காயை வெட்டக்கூடாது. கர்ப்பிணிப் பெண்கள் தேங்காயை உடைக்கக் கூடாது.

வாசல்படியில் தலைவிரி கோலமாக உட்காரக்கூடாது.

தலைவிரி கோலமாக வீட்டில் இருப்பதும் வெளியில் செல்வதும் தவிர்க்கப்பட வேண்டும்.

வீட்டுக்குவரும் சுமங்கலிப் பெண்களுக்கு இல்லத்தரசிகள் குங்குமம் கொடுத்து வழியனுப்ப வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஒட்டுப் பொட்டுக்களைத் தவிர்க்க வேண்டும்.



* அதிகாலையெழுந்து வீடுவாசல் பெருக்கி நீர் தெளித்து வாசலில் கோலமிட வேண்டும்.

* மாலை விளக்கு வைக்கும் நேரத்தில் வெளி இடங்களுக்குச் செல்லாது விளக்கு வைத்துத் தூபமிட்டு வழிபாடு செய்வது நலம்.

* கோலம் போடும்போது சுப காரியங்களுக்கு இரண்டு கோடும், அசுப காரியங்களுக்கு ஒரு கோடும் போட வேண்டும்.

* உரல், அம்மி, முறம், வாசற்படி, உலக்கை இவற்றின் மீது உட்காரக்கூடாது.

* சுமங்கலி கணவனுடைய அனுமதி பெற்றே விரதமிருக்க வேண்டும்.

**உணவு பரிமாறும் முறைகள்**

* பரிமாறும் பொழுது வலமிருந்து இடமாக பரிமாறிக் கொண்டு வரவேண்டும். முதலில் இனிப்பு பதார்த்தம் இலையின் இடப்புறம் அதாவது நாம் உட்காரும் போது எமது வலது கைப்பக்க ஓரத்தில் வைக்க வேண்டும்.

* பரிமாறும் போது உப்பு, நெய், சாதம் ஆகியவற்றை கையால் எடுத்துப் பரிமாறக்கூடாது.

* தலை வாழையிலை உட்காரும் எமக்கு இடப்பக்கம் இலையின் தலைப்பக்கம் இருக்க வேண்டும்.

* தண்ணீர் வைக்காமல் உணவு பரிமாறக்கூடாது.

* வாழையிலையை மூடும் போது எமக்கு எதிரே உள்ள இலைக்கரையை எம்மை நோக்கியவாறு மடிக்க வேண்டும்.

* வாசல்படிக்கு நேரே அமர்ந்து உண்ணக்கூடாது.

* சாப்பிட்ட பிறகு கையலம்புங்கள் என்று கூறித் தண்ணீர் கொடுக்க வேண்டும். கைகழுவுங்கள் என்று கூறக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சாப்பிடும் போது முதலில் இனிப்பு, உவர்ப்பு, புளிப்பு, கசப்பு, பதார்த் தங்களை வரிசையாக சாப்பிட்டு பின்பு நீர் அருந்த வேண்டும்.

* சாப்பிடும் போது தவிர மற்ற நேரத்தில் இடது கையால் தண்ணீர் அருந்தக்கூடாது.

**தலைக்குப் பூச்சூடுதல்**

பெண்கள் தினசரி ஏதாவது பூவைத் தலையில் சூடிக்கொள்ள வேண்டும்.

* ரோஜா மலர் - பார்வைக்கு அழகைக் கொடுக்கும், நறுமணத்தைக் கொடுக்கும், இதயத்திற்கு பலம் கொடுக்கும்.

* மல்லிகைப்பூ - கண்பார்வையைக்குணமாக்கும்.

* செவ்வந்திப்பூ - கூந்தல் வளரும், கண்ணுக்குக் குளிர்ச்சி.

* மகிழம்பூ - தலைவலி, கண்நோய் நீக்கும்.

* சாமந்திபூ - உஸ்ணத்தை ஏற்படுத்தும், வாயுத்தொல்லை நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
28 * 06 * 1968



ஆண்டவன் அடியில்
29 * 09 * 2014

## திருமதி தனபாலசிங்கம் கோகிலேஸ்வரி (உதயா)

[illegible] Wertheim [illegible] 29.09.2014 [illegible] 02.10.2014 [illegible]

தகவல் : குடும்பத்தினர்.

தொ.பே : + 4915253817979, 065 2223818



*The greatest comfort*
*during our sorrow*
*was the expressions of sympathy*
*conveyed to us in many ways.*

*We deeply appreciate your*
*thoughtfulness*
*and thank you most sincerely.*

***Kohileswary Thanam***
***Uthaya***



* 28.06.1968
† 29.09.2014

# அகாலமரண அறிவித்தல்

## திருமதி தனபாலசிங்கம் கோகிலேஸ்வரி

(உதயா)

**மலர்வு : 28 யூன் 1968 — உதிர்வு : 29 செப்ரெம்பர் 2014**



மட்டக்களப்பு வந்தாறுமூலையைப் பிறப்பிடமாகவும், ஜெர்மனி Wertheim ஐ வதிவிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் கோகிலேஸ்வரி அவர்கள் 29-09-2014 திங்கட்கிழமை அன்று அகாலமரணம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, பூரணம் தம்பதிகளின் அன்பு இளைய மகளும், சேதுபதி பூமணி(மட்டக்களப்பு) தம்பதிகளின் அன்பு மருமகளும்,

தனபாலசிங்கம்(பாலன்) அவர்களின் பாசமிகு மனைவியும்,

இராகவி, நிதுஸ், ஆதவி ஆகியோரின் அன்புத் தாயாரும்,

இராஜேஸ்(ஜெர்மனி), காலஞ்சென்ற சுதேஸ்வரன், பிரியேஸ்வரன், ரதி(ஜெர்மனி), கங்கேஸ்வரன்(கங்கன்-ஜெர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

காலஞ்சென்ற நாகேஸவரி, லெட்சுமிபிள்ளை, சிவக்கொழுந்து ஆகியோரின் பெறாமகளும்,

காலஞ்சென்ற சிவராஜா(வந்தாறுமூலை), முருகுப்பிள்ளை(மட்டககளப்பு), கிருஷ்ணப்பிள்ளை(சுவிடன்), நேசன்(ஜெர்மனி), கணேசமூர்த்தி(மட்டக்களப்பு) ஆகியோரின் பாசமிகு மருமகளும்,

திருச்செல்வம(ஜெர்மனி), சந்திரசேகரன்(மட்டக்களப்பு), மகாலிங்கமூர்த்தி(துறைநிலாவணை), தருமலிங்கம்(துறைநிலாவணை), ரதிஸவரன்(மட்டக்களப்பு), பாலசந்திரன(மட்டககளப்பு), வனிஜா(ஜெர்மனி), ஜமுனா(ஜெர்மனி), தமிழ்வாணி(மட்டக்களப்பு), அஞ்சலாதேவி(துறைநிலாவணை), விஜயா(துறைநிலாவணை), அமுதினி(மட்டக்களப்பு), ரவிந்திரி(மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்

குடும்பத்தினர்

**கிரியை**

| | |
|---|---|
| திகதி: | **வியாழக்கிழமை 02/10/2014, 01:00 பி.ப — 03:00 பி.ப** |
| முகவரி: | **Waldfriedhof, 97877, Wertheim Bestenheid, Germany** |

| | |
|---|---|
| **- - ஜெர்மனி** | |
| தொலைபேசி: | **+4915253817979** |
| செல்லிடப்பேசி: | **+491636511165** |
| **- - ஜெர்மனி** | |
| தொலைபேசி: | **+4915214472513** |
| செல்லிடப்பேசி: | **+491738178407** |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




திருமதி. கோகிலேஸ்வரி தனபாலசிங்கம் அவர்களின் இறைபதம் அடைந்ததன் பொருட்டு இது குடும்பத்தாரால் சமர்ப்பிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அமரத்துவப் பேறு பெற்ற எங்கள் அன்புத் தெய்வம்
உதயா அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு
ஜேர்மனிக்கும், மட்டக்களப்பிற்கும்,
வந்தாறுமூலைக்கும், நேரில் வந்தும், தொலைபேசி,
தந்தி, மின்னஞ்சல்..... போன்றவைகள் மூலம்
ஆறுதல் கூறியவர்களுக்கும் அன்னாரின்
இறுதிக்கிரியைகளில் கலந்து
கொண்டவர்களுக்கும், ஏனைய உதவி
ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும் இன்றைய 45ம்
நாள் நினைவு நிகழ்வில் கலந்து கொண்ட உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அன்பு
நெஞ்சங்களுக்கும் எம இதய பூர்வமான நன்றிகள்

இவ்வண்ணம்
குடும்பத்தினர்
+4915215022996

605 - 2223218
065 - 2052209

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே
நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை நீ இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ
இழப்பதற்கு?
எதை நீ படைதிருந்தாய், அது
வீணாவதற்கு ?
எதை நீ எடுத்து கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது
வேறொருவருடையதாகும்.

" எனவே அருச்சுனா , உன் முன்னால் நிற்பவர் உன் குருவாயினும் , குலமாயினும் தயங்காதே , தர்மத்துக்கும் நியாயத்துக்கும் ஆக போரைத் தொடு "



துர்க்கா அச்சகம், கொக்குவில், தொலைபேசி. 0652053060.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org